விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு முரித நபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(இ-3577)

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆவணி 08 வெள்ளிக்கிழமை (24.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 248

## சுவிஸ் நாட்டில் வேலை வாங்கி தருவதாக 7 இலட்சம் மோசடி!
### யாழ்ப்பாணத்தில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

இளைஞர் ஒருவருக்கு சுவிஸ் நாட்டில் வேலை பெற்றுத் தருவதாக கூறி 7 இலட்சம் ரூபாய் மோசடி செய்த சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இருவர் யாழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு. மல்லாகம் நீதிமன்றின் ஊடாக எதிர்வரும் 27-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இளைஞன் ஒருவரினால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டினை அடுத்து விசாரணைகளின் அடிப்படை 24☛

காணாமல் போன மூதாட்டி
## அராலி பகுதியில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பகுதியில் காணாமல் போன மூதாட்டி அராலி பகுதியில் வைத்து நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

வட்டுக்கோட்டை மேற்கை சேர்ந்த தியாகராஜா நவமணியம்மா (வயது83) என்பவரே மேற்படி சடலமாக மீட்கப்பட்டவராவார். 24☛

எதிர்வரும் 30-ம் திகதி
## காணாமல் போனோர் தொடர்பான அறிக்கை வெளியிடப்படுகின்றது

(கொழும்பு)

இலங்கையில் பல்வேறு கால கட்டங்களில் காணாமல் போன மற்றும் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட நபர்கள் சம்பந்தமாக தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையை எதிர்வரும் 30-ம் திகதி வெளியிட உள்ளதாக காணாமல் போனோர் தொடர்பான செயலகத்தின் தலைவர் சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

காணாமல்போனதாக கூறப்படும் நபர்களின் சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் செயலகத்திற்கு வழங்கிய தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த இடைக்கால அறிக்கை அன்றைய தினம், ஜனாதிபதி மைத்திரிபால சிறி 24☛

## காவலாளியை தாக்கிவிட்டு கோவில் உண்டியல் திருட்டு

(யாழ்ப்பாணம்)

அராலி வடக்கு முருகமூர்த்தி கோவிலுக்குள் நேற்று முன்தினம் இரவு நுழைந்த திருடர்கள் காவலாளியை தாக்கிவிட்டு உண்டியலை திருடிச் சென்றுள்ளனர்

நேற்று முன்தினம் இரவு குறித்த கோவிலுக்கு நுழைந்த 3 பேர் காவலாளியை தாக்கி கோவில் திறப்பை கேட்டுள்ளனர். பின்னர் கோவிலுக்குள் 24☛

## ஒட்டுசுட்டான் பகுதியில் இரு தலைகளுடன் பசுக்கன்று



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் புளியங்குளம் பகுதியில் இரண்டு தலைகளுடன் பசுக்கன்று ஒன்றை மாடு ஒன்று ஈன்றுள்ள சம்பவம் பிரதேச 23☛

## தையிட்டி விகாரைக்கு பிரதேசசபை அனுமதியில்லை


(யாழ்ப்பாணம்)

வடக்கு ஆளுநரால் அடிக்கல் நாட்டப்பட்ட விகாரைக்கு பிரதேச சபை அனுமதி வழங்கவில்லை என சபை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன

காங்கேசன்துறை தையிட்டி பகுதியில் திஸ்ஸ விகாரை இருந்ததாகவும் அதனை மீள புனர்நிர்மாணம் செய்வதற்கான அடிக்கல் நாட்டு விழா என நேற்று முன்தினம் புதன்கிழமை பாதகட விமல 23☛


## பொருளாதார முன்னேற்றத்தை விட
# அரசியல் ரீதியான தீர்வே தமிழர்களுக்கு தேவை

### ஜனாதிபதி செயலணியை புறக்கணிக்குமாறு சம்பந்தனுக்கு விக்னேஸ்வரன் கடிதம்



(யாழ்ப்பாணம்) அரசியல் தீர்வை விட பொருளாதார முன்னேற்றமே தமிழர்களுக்கு தேவை என நினைத்தால் ஜனாதிபதி செயலணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கலந்து கொள்ளுங்கள் என தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், "அரசியல் தீர்வு முதலில் பொருளாதார முன்னேற்றம் அதன் பின்னர்" என தெரிவித்து கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் விடுவதே சிறந்தது எனவும் தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

## கப்ரக வாகனம் - மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி கோர விபத்து
### இரு இளைஞர்கள் உயிரிழப்பு
### மாங்குளத்தில் சம்பவம்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாங்குளம் வெள்ளாங்குளம் வீதியில் நேற்று பிற்பகல் கப்ரக வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாங் 24☛

## 21 ஆயிரத்துக்கு அதிகமானோர் காணாமலாக்கப்பட்டிருக்கலாம்
### - சாலிய பீரிஸ்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த காலங்களில் 21 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காணாமலாக்கப்பட்டிருக்கலாம் என்றும், எனினும் இந்த எண்ணிக்கை இறுதியானது என்ற முடிவுக்கு வரமுடியாது எனவும், காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்ட ஏனைய ஆணைக்குழுக்களை போல் அல்லாது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்துள்ளது 23☛

## வடக்கு மக்களின் காணிகளை இராணுவம் விடுக்க வேண்டும்
### பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்

(கொழும்பு)

யுத்தம் முடிவடைந்த பின்னரும் வடக்கு மக்களின் காணிகளை இராணுவம் கையகப்படுத்தி வைத்திருப்பது ஏற்புடையதல்ல. பாதிக்கப்பட்ட மக்களின் பூர்வீக காணிகளை அரசாங்கம் உடனடியாக விடுவிக்க வேண்டும்.

வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுவது தொடர்பில் அரசாங்கம் விரைவில் மாற்று வழிமுறைகளை கையாள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து 23☛

## மக்கள் விரும்பிய ஆட்சி அமைக்க தேர்தல் வேண்டும்
### மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



(கொழும்பு)

மக்கள் விருப்பத்தின் அடிப்படையிலேயே ஜனநாயக நாட்டின் ஆட்சி அதிகாரம் அமைக்கப்படுகின்றது. எனவே உரிய நேரத்தில் தேர்தலை நடத்த வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். 23☛

## எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை
### பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

மாகாணசபைகளுக்கான எல்லை நிர்ணயக்குழுவின் அறிக்கை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபைகளுக்கான எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கையை சபை முதல்வர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பித்தார். (ம)

# எனக்கு எதிரான ஆதாரங்களை தாருங்கள்-அர்ஜுன் மகேந்திரன்

(கொழும்பு)

தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்களின் பிரதிகளை தமக்கு அனுப்பி வைக்குமாறு இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் கோரியுள்ளார்.

சர்வதேச பொலிஸாரின் சிங்கப்பூர் கிளையின் ஊடாக குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் கோரியுள்ளார்.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஹரிப்பிரிய ஜயசுந்தர இது பற்றிய தகவல்களை நேற்றைய தினம் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளார்.

மத்திய வங்கி பிணை முறி மோசடி குறித்த வழக்கின் முதல் பிரதிவாதியாக அர்ஜுன் மகேந்திரனின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அர்ஜுன் மகேந்திரன் எந்த நாட்டில் இருக்கின்றார் என்பது பற்றி ஆராயப்பட்டுள்ளதாக கொழும்பு கோட்டே நீதவான் லங்கா ஜயரட்ன, சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் நேற்று வினவியிருந்தார்.

சந்தேக நபரான அர்ஜுன் மகேந்திரன் கோரியுள்ள ஆவணங்களை அனுப்பி வைப்பதில் ஏதேனும் சட்ட சிக்கல்கள் காணப்பட்டால் அதனையும் அடுத்த வழக்கு விசாரணைகளின் போது அறிவிக்குமாறு நீதவான் தெரிவித்துள்ளார். (ம)

# வடக்கில் சிவில் பாதுகாப்பை பலப்படுத்த தமிழ் இளையோர் பொலிஸ் சேவையில் இணைய வேண்டும்

## சட்ட ஒழுங்கு அமைச்சர் ரஞ்சத் மத்தும

(கொழும்பு)

வடக்கில் சிவில் பாதுகாப்பை பலப்படுத்த தமிழ் இளையோர்கள் பொலிஸ் சேவையில் இணைந்துகொள்ளவேண்டும். அவர்களை பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ள நாம் தயாராக உள்ளோம். இந்தச் செய்தியை தமிழ் அரசியல்வாதிகள் வடக்கு இளைஞர்களிடம் எடுத்துச் செல்லவேண்டும் என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சத் மத்தும பண்டார நாடாளுமன்றில் நேற்று தெரிவித்தார்.

வடக்கில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்களுடன் ஆவா குழு உள்ளிட்டவை தொடர்புபட்டுள்ளன என குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்தக் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 38 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கில் தமிழ் மக்களை கையாள தமிழ் தெரிந்த பொலிஸார் இல்லை. தமிழ் மொழிமூல தேர்ச்சி பெற்ற பொலிஸார் இல்லாமை ஒரு பிரச்சினையே. 15 வீதமான பொலிஸார் மட்டுமே தமிழ் பேசுகின்றனர். முடிந்த அளவில் தமிழ் மக்கள் பொலிஸ் துறையில் இணைந்துகொள்ள வேண்டும்.

தமிழர்களை இணைத்துக்கொண்டு வடக்கில் சிவில் பாதுகாப்பை பலப்படுத்த நாமும் தயாராகவே உள்ளோம். ஆகவே தமிழ் அரசியல்வாதிகள் இந்தச் செய்தியை வடக்கில் தமிழ் இளைஞர்களிடம் கொண்டுசெல்ல வேண்டும்.

வெற்றிடங்கள் உள்ளன. அதற்கு தமிழ் பொலிஸார் இணைந்துகொள்ளப்படுவது ஆரோக்கியமானது என்றார். (ம)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னத்தம்பி சின்னம்மா

(ஓய்வு நிலை ஆசிரியை)

தோற்றம் 10 - 04 - 1926



மறைவு 23 - 08 - 2018

யாழ்.வடமராட்சி கரவெட்டி மத்தி வாழையப்பா வீட்டை பிறப்பிடமாகவும் முடக்காடு நெல்லியடி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி சின்னம்மா நேற்று (23.08.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்கள் சிற்றம்பலம்-லட்சுமி தம்பதியினரின் புதல்வியும், அமரர் க.சின்னத்தம்பி (ஓய்வுநிலை ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர் க.தெய்வானை, அமரர் க.வள்ளிப்பிள்ளை மற்றும் திருமதி வ.பத்தினி (பிரான்ஸ்), அமரர் சி.கிருஸ்ணபிள்ளை, திருமதி வி.பொன்னம்மா ஆகியோரின் சகோதரியும், அமரர்.சி.சத்தியேஸ்வரன், அமரர்.சி.விக்னேஸ்வரன், திருமதி யோ.பரிமளா (லண்டன்), திருமதி சி.சியாமளா (ஆசிரியை-வவுனியா சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலை-வவுனியா), சி.செந்தன் (ஜேர்மனி), சி.சிவநேசன் (பொறுப்பாசிரியர்-வலய கணித மூலவள நிலையம்), திருமதி சி.மஞ்சுளா (ஆசிரியை-யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை-பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர் சி.கமலாதேவி, திருமதி வி.செல்வநாயகி, க.யோகேஸ்வரன் (லண்டன்), இ.கிருஷ்ணானந்தன் (ஆசிரியர்-வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயம்), திருமதி சே.ரஜனி (ஜேர்மனி), திருமதி சி.பிறேமாதேவி, க.சிவபாலன் (ஆசிரியர்-யா/வட இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.08.2018) சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.129, முடக்காடு வீதி, நெல்லியடி கிழக்கு, கரவெட்டி

தகவல்:-குடும்பத்தினர் 0212264386

(சி-3618)

# நாடாளுமன்ற பெரும்பான்மையின்றி எல்லை நிர்ணயத்தை நடைமுறைப்படுத்த முடியும்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கான எல்லை நிர்ணயத்தை நாடாளுமன்றின் பெரும்பான்மை இல்லாமல் கூட நடைமுறைப்படுத்தலாம் என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பிலான விவாதம் இன்று நாடாளுமன்றில் இடம்பெறவுள்ளது. இந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எல்லை நிர்ணய அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொள்ள சிலர் எதிர்பார்க்கின்றனர். எல்லை நிர்ணய அறிக்கை இன்று சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதால், இதனை தெரிந்து கொள்ளவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆவலுடன் இருக்கிறார்கள்.

இதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்குமா? இல்லையா? என்பது தொடர்பில் எமக்கு தற்போது கருத்து கூற முடியாது. இதனை நிறைவேற்ற மாற்று வழியும் இருக்கிறது.

அதாவது, இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக பிரதமர் தலைமையிலான ஐவர் அடங்கிய குழுவொன்றை சபாநாயகர் நியமிக்க வேண்டும். இந்தக் குழு, இரண்டு மாதங்களில் இதன் அறிக்கையை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பில் சாதகமான பதில் வழங்கப்பட்டிருந்தால், எல்லை நிர்ணயத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். இவ்வாறான நடைமுறை யைப் பின்பற்றும் போது நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது.

ஏனெனில், நாடாளுமன்றில் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்வது என்பது அவ்வளவு எளிதான விடயமல்ல. எல்லோரும் தமது கட்சிக்கான சாதக-பாதக விடயங்கள் தொடர்பிலேயே இதன்போது அதிக கவனம் செலுத்துவார்கள்.

இதனாலேயே, எல்லை நிர்ணய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மாற்று வழிகள் உள்ளது என்பதை சுட்டிக்காட்டினோம் என கூறினார். (ம)


### சொர்க்கம் திருமண சேவை

கனடாவில் வசிக்கும் 29 வயதுடைய பட்டதாரி மணமகளுக்கு வெளிநாட்டில் படித்து பட்டம் பெற்ற சூரியன் செவ்வாய் உள்ள மணமகனை இலங்கையில் தேடுகிறோம். கனடாவில் வசிக்கும் 36 வயதை உடைய ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகிறோம். கனடாவில் வசிக்கும் 30, 32 வயதை உடைய மணமகன்களுக்கு அழகான மணமகள்களை தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு:
TP & Viber:0016475043336 & 0014166661855

(சி-3619)


## ஸ்ரீமதி நாகபூஷணி சோமசுந்தரக்குருக்கள்



நல்லூர் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட ஸ்ரீமதி நாகபூஷணி சோமசுந்தரக் குருக்கள் அவர்கள் 21.08.2018 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் மட்டுவில் சிவஸ்ரீ கி.சோம சுந்தரக்குருக்களின் மனைவியும், அமரர் சிவஸ்ரீ.கனகசபாபதிக்குருக்கள்-அழகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், திருமதி குமுதா உமாகாந்தனின் அன்புத் தாயாரும் க.கமலாதேவி, சிவஸ்ரீ.க.இரகுநாதகுருக்கள், திருமதி காந்திபாலச்சந்திரன், சிவஸ்ரீ. க.கிருஷ்ணநாதக்குருக்கள் ஆகியோரின் மூத்த சகோதரியும், ப.உமாகாந்தனின் மாமியாரும், உ.தீக்‌ஷனாவின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.08.2018 அன்று அவரது சோமராகம் இல்லத்தில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

"சோமராகம்"
323/8D கோவில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.
0776407643, 0212225685

தகவல்:-மகள் உ.குமுதா

(சி-3621)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## அமரர் காசிநாதர் பாலகிருஸ்ணன்

அவர்களின்
ஆத்மசாந்தி பிரார்த்தனையும்
17ஆம் நாள் நினைவஞ்சலியும்



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்தின் நிழலில்
சங்கமமாகி விட்ட உயிரே
உம்மைப் பிரிந்து தவிக்கும்
மனைவி, மகள், மருமகன்,
உற்றார், உறவினர்
அனைவருக்கும்
எங்களது அனுதாபத்தையும்
இரங்கலையும் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய
கேசாவில் முத்து விநாயகர்
பாதங்களில் வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கேசாவில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்


என்றும் உங்கள் நினைவுகளுடன்
தவராசா புவனேஸ்வரி
அருள்ராசா பிரபா
நித்தியானந்தம் கலாரஞ்சிதம்
குடும்பத்தினர்

# யாழில் 'குள்ள மனிதர்கள்' குறித்து எவ்வித முறைப்பாடுகளும் இல்லை

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழில் தமிழ் மக்களை அச்சுறுத்தி வருவதாகக் கூறப்படும் "குள்ள மனிதர்கள்" தொடர்பாக இதுவரை எவ்வித முறைப்பாடுகளும் பதிவு செய்யப்படவில்லை என, சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.



27 இன் கீழ் 2ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ஈ.பி.டிபியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவினால் நாடாளுமன்றத்தில் நேற்று (வியாழக்கிழமை) எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் கிறிஸ் பூதங்களால் அச்சுறுத்தப்பட்டு வந்த மக்கள் தற்போது குள்ள மனிதர்களின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர். இதன் பின்னணி என்ன என டக்ளஸ் தேவானந்தா மன்றில் வினவினார்.

அத்துடன், யாழில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் சமூகவிரோதச் செயற்பாடுகளால், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுபவர்கள் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், அவருக்கு பதிலளித்த சட்டம் ஒழுங்கு அமைச்சர், "குள்ள மனிதர்களின் அச்சுறுத்தல் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையங்களில் இதுவரை எவ்விதமான முறைப்பாடுகளும் பதிவு செய்யப்படவில்லை.

வடக்கில் இடம்பெறும் சமூகவிரோத செயற்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி ஆவாக் குழுவுடன் தொடர்புடை 31 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# பிரபாகரனின் மரணத்தால் மகிழ்ச்சியடையவில்லை

## ராகுல் காந்தி மீண்டும் தெரிவிப்பு



(ஹம்போர்க்)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்ட போது, தானோ அல்லது தனது சகோதரியான பிரியங்கா காந்தியோ மகிழ்ச்சியடையவில்லை என்று இந்தியாவின் காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியில் ஹம்பேர்க் நகரில் Bucerius Summer School இல் கடந்த 21 ஆம் திகதி நடந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சிங்கப்பூரில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பங்கேற்றிருந்த போதும் ராகுல் காந்தி இதேபோன்று கருத்து வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஞானசாரரின் சிறைத் தண்டனை குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவேன்

(கொழும்பு)

பொதுபலசேனாவின்பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு விதிக்கப்பட்டுள்ள சிறைத் தண்டனை தொடர்பில் ஜனாதிபதி மற்றும் அமைச்சரவைகளுடன் கலந்துரையாடுவேன் என புத்தசாசன அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.



பொதுபல சேனா அமைப்பின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று புத்தசாசன அமைச்சுக்கு சென்று ஞானசார தேரர் தொடர்பில் கலந்துரையாடிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, ஞானசார தேரருக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்க புத்தசாசன அமைச்சினூடாக செய்யக்கூடிய அனைத்து விடயங்களையும் செய்வதாக இதன் போது அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

## 900 மில்லியன் ரூபா செலவில்

# வெள்ளவத்தையில் மும்மொழி தேசிய கலவன் பாடசாலை

(கொழும்பு)

அனைத்து இன மாணவர்களையும் உள்ளடக்கி மும்மொழிகளில் கல்வியை வழங்குவதற்காக புதிய தேசிய பாடசாலையொன்றை கொழும்பு மாவட்டத்தில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.


இதற்கமைவாக 900 மில்லியன் ரூபா செலவில் இந்த மும்மொழி கலவன் பாடசாலை கொழும்பு வெள்ளவத்தையில் அமைக்கப்படவுள்ளது.

இந்தப் பாடசாலைக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பதற்காக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசாங்கத்தகவல்திணைக்களம் இது தொடர்பிலான தகவலை வெளியிட்டுள்ளது. (இ-7)

# 'விடுதலைப்புலிகள்' என பொறிக்கப்பட்ட துப்பாக்கி, ஆயுதங்களுடன் 7 பேர் கைது!

## தாக்குதலுக்கு திட்டமிட்டிருக்கலாமென சந்தேகம்



(கண்டி)

கண்டி புஸ்பதான மாவத்தையிலுள்ள இரு மாடிக்கட்டடம் ஒன்றிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் எனப் பெயர் குறிப்பிட்ட ஆயுதம் ஒன்றுடன் மற்றும் சில ஆயுதங்களுடன் சந்தேக நபர்கள் ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட பொலிஸ் அதிரடிப்படைப்பிரிவினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது துப்பாக்கிகள் மூன்றும், அதற்கான ரவைகளும் வாள் மற்றும் போலியான வாகன இலக்கத்தகடுகள், கைதிகளுக்குப் போடப்படும் கைவிலங்கு சோடி ஒன்று என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி துப்பாக்கிகளில் 'ரிபிடர் கண்' வகையைச் சேர்ந்த துப்பாக்கி ஒன்றும் பிஸ்டல் வகை கைத்துப்பாக்கி ஒன்றும் ரிவோல்வர் ஒன்றும் இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிஸ்டலில் 'தமிழீழ விடுதலைப்புலிகள்' என்று தமிழில் பெயர் பொறிக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ரிவோல்வருக்குப் பயன்படுத்தப்படும் ரவைகள் 25, 'ரிபிடர்' துப்பாக்கிக்கான ரவைகள் 13, போலி வாகன இலக்கத் தகடு 6, கஞ்சா போதைப் பொருள் மற்றும் கைவிலங்கு ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

வீட்டு உரிமையாளர் அரசியல்வாதி ஒருவருடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படுகிறது. சந்தேக நபரும் அவரது மகனும் வீட்டிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் அவர்களை கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேநேரம் மேற்படி வீட்டுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அதி நவீன உயர் வலுக்கொண்ட இரண்டு மோட்டார்சைக்கிள்களும்பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் முற்றுகையின் போது வீட்டிலிருந்த ஏழுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் ஆறுபேர் சிங்களவர்கள் என்றும் ஒருவர் தமிழர் என்றும் தெரியவருகிறது.

கைதுசெய்யப்பட்டவர்கள் பன்வில, பேராதனை, குருநாகல் முதலான இடங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

பிரதான சந்தேக நபர் ஏற்கனவே சில குற்றங்களுக்காக தேடப்பட்ட அல்லது சந்தேகிக்கப்பட்ட ஒருவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட பொலிஸ் பிரிவின் பிரதானி பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.ஆர்.லதீப் மற்றும் மத்திய பிராந்திய பிரதி பொலிஸ்மாஅதிபர் டி.ஆர்.எல். ரணவீர ஆகியோரின் வழிகாட்டலில் மேற்படி முற்றுகை மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்ததனர்.

பாரியதொரு சம்பவத்தை மேற்கொள்வதற்கு இவர்கள் இவ்வாறு மேற்படி வீட்டில் தங்கி இருக்கலாமென்றகோணத்தில் விசாரணைகள் நடைபெறுவதுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதம் எவ்வாறு கிடைத்துள்ளது என்பது பற்றியும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-7)

# ஜூலன் ஓய்வு




இந்திய கிரிக்கெட் வீராங்கனை ஜூலன் கோஸ்வாமி, 'ரி20' போட்டியிலிருந்து ஓய்வு பெற்றார்.

இந்திய பெண்கள் கிரிக்கெட்டின் 'சீனியர்' வேகப் பந்துவீச்சாளர் ஜூலன் கோஸ்வாமி (வயது - 35), இதுவரை 169 ஒரு நாள் (203 விக்.), 68 'ரி20' (56) போட்டிகளில் விளையாடி உள்ளார்.

சர்வதேச ஒரு நாள் அரங்கில் அதிக விக்கெட் வீழ்த்திய வீராங்கனை என்ற சாதனை படைத்தவர், சமீபத்தில், மலேசியாவில் நடந்த ஆசிய கிண்ண 'ரி20' இல் (4 போட்டி, ஒரு விக். . ) சோபிக்கவில்லை.

இந்நிலையில், சர்வதேச 'ரி20'இலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளில் எதிர் வரும் நவம்பர்மாதம் நடக்கவுள்ள உலக கிண்ண 'ரி20' தொடரில் இவர் பங்கேற்க முடியாமல்போவது இந்திய அணிக்கு பின்னடைவாக அமையலாம்.

இது குறித்து இந்திய கிரிக்கெட் சபை வெளியிட்ட செய்தியில்,' ஜூலன் கோஸ்வாமி 'ரி20' போட்டியிலிருந்து ஓய்வு அறிவித்துள்ளார்.

இதுவரை ஒத்துழைப்பு அளித்த சக வீராங்கனைகள் மற்றும் நிர்வாகத்திற்கு நன்றி தெரிவித்துள்ளார்.' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரிபியன் பிரிமியர் லீக்

# பார்படோஸ் திரில் வெற்றி

கரிபியன் பிரீமியர் லீக்கில் ஜமைக்கா தல்லாவாஸ் அணியை 2 ஓட்டங்களால் வீழ்த்தி திரில் வெற்றி பெற்றது பார்படோஸ் டிரிடென்ட்ஸ்

கரிபியின் பிரீமியர் லீக் ரி20 போட்டியில் புளோரிடாவில் நடைபெற்ற ஆட்டத்தில் ஜமைக்கா தல்லாவாஸ் - பார்படோஸ் டிரிடென்ட்ஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ஜமைக்கா பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி பார்படோஸ் அணியின் வெயின் ஸ்மித், ஹசிம் அம்லா ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். வெயின் ஸ்மித் 18, ஹசிம் அம்லா 15 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். அதன்பின் வந்த மார்ட்டின் கப்டில் டக்அவுட் ஆனார்.

அதன்பின் வந்த ஸ்டீவன் ஸ்மித் 44 பந்துகளில் 63, ஷாய் ஹோப் 35 பந்துகளில் 43 ஓட்டங்கள் எடுக்க 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 156 ஓட் டங்களை எடுத்தது.

157 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஜமைக்கா அணி களம் இறங்கியது. தொடக்க வீரர் க்ளென் பிலிப்ஸ் 36, ஜோன்சன் சார்ள்ஸ் 42 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினர். 3ஆவது வீரராக களம் இறங்கிய கென்னார் லெவிஸ் 17 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

4ஆவது விக்கெட்டுக்கு ரோஸ் டெய்லருடன் டேவிட் மில்லர் ஜோடி சேர்ந்தார். அவ்வேளை ஜமைக்கா அணியின் வெற்றிக்கு 7.1ஓவர்களில் (43 பந்துகள்) 57 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

ஆனால் இருவரும் கடைசி வரை களத்தில் நின்றபோதும் 57 வெற்றியிலக்கை எட்ட அவர்களால் முடியவில்லை.

இறுதியில் ஜமைக்கா அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களை மட்டுமே எடுத்து 2 ஓட்டங்களால் வெற்றியை பார்படோஸ் அணியிடம் தாரைவார்த்தது.



அரைச்சதம் அடித்த ஸ்மித்தின் அதிரடிகளில் ஒன்று

# ஹோலி செம ஜாலி

## டெஸ்டில் நம்பர் 1




ஐ.சி.சி., டெஸ்ட் போட்டிக்கான துடுப்பாட்ட தரவரிசைப் பட்டியலில் இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி மீண்டும் முதலிடத்தை எட்டினார்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) சார்பில் டெஸ்ட் அரங்கில் சிறந்து விளங்கும் நட்சத்திரங்களுக்கான பட்டியல் வெளியிடப்பட்டது.

துடுப்பாட்ட வீரர்களுக்கான பட்டியலில் இந்திய அணித் தலைவர் ஹோலி ஒரு இடம் முன்னேறி, 'நம்பர் வன் இடத்தை (937 புள்ளி) மீண்டும் எட்டினார்.

இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் 'ரன் மெஷினாக' (97, 103) மாறிய இவர் வெற்றிக்கும் கைகொடுத்ததால், இந்த முன்னேற்றம் அடைந்துள்ளார்.

இரண்டாவது, மூன்றாவது இடங்களில் முறையே அவுஸ்திரேலியாவின் ஸ்மித் (929), நியூசிலாந்தின் வில்லியம்சன் (847) உள்ளனர்.

ஹோலி இன்னும் ஒரு புள்ளி (938) கூடுதலாக பெற்றால், தரவரிசை வரலாற்றில் ஒட்டு மொத்தமாக அதிக புள்ளிகள் எடுத்த 'ரொப் 10' வீரர்கள் பட்டியலில் இடம்பெறலாம்.

தற்போது, 10ஆவது இடத்தில் இலங்கையின் முன்னாள் நட்சத்திர வீரர் சங்கக்கார, மே.தீவுகளின் ரிச்சர்ட்ஸ் உள்ளிட்டோர் தலா 938 புள்ளியுடன் உள்ளனர். முதலிடத்தை அவுஸ்திரேலியாவின் பிரட்மன் (961) வகிக்கிறார். மற்றைய இந்திய வீரர்களில் ரகானே (19ஆவது இடம்), தவான் (22) தலா 4 இடம் முன்னேறி உள்ளனர்.

### பாண்ட்யா முன்னேற்றம்

பந்துவீச்சாளரர்களுக்கான பட்டியலில், மூன்றாவது டெஸ்டின் முதல் இன்னிங்சில் 5 விக்கெட்டுக்கள் வீழ்த்திய பாண்ட்யா 23 இடம் முன்னேறி 51ஆவது இடத்தை எட்டி உள்ளார். முதல் மூன்று இடங்களில் முறையே இங்கிலாந்தின் அண்டர்சன், தென்னாபிரிக்காவின் ரபாடா, இந்தியாவின் ஜடேஜா உள்ளனர்.

# இந்திய அணியில் பிரித்வி

## இங்கிலாந்து தொடரில் வாய்ப்பு



இங்கிலாந்துக்கு எதிராக மீதமுள்ள இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடருக்கான இந்திய அணியில் இளம் வீரர்களான பிரித்வி ஷா, ஹனுமா விஹாரி வாய்ப்பு பெற்றுள்ளனர்.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் மூன்று போட்டிகள் முடிவில், இந்திய அணி 1-2 என பின்தங்கி உள்ளது. இந்நிலையில் நான்காவது டெஸ்ட் எதிர்வரும் 30ஆம் திகதி சவுத்தாம்ப்டனில் ஆரம்பமாகிறது.

இதற்கிடையே, கடைசி இரண்டு போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப வீரர் முரளி விஜய், சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் நீக்கப்பட்டனர்.

### முரளி விஜய் நீக்கம்

முரளி விஜயை பொறுத்தவரை, பேர்மிங்காம் (20, 6 ஓட்.,) லோர்ட்ஸ் (0,0) டெஸ்டில் சொதப்பியதால் வாய்ப்பு மறுக்கப்பட்டது.

இங்கிலாந்து தட்பவெப்ப நிலை, 'வேகத்திற்கு' சாதகமாக இருப்பதால்அஷ்வினை மட்டும் தக்கவைத்துக் கொள்ள அணி நிர்வாகம் விரும்புகிறது. இதனால், குல்தீப் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவருக்குப் பதில், இளம் வீரர்களான பிரித்வி ஷா,ஹனுமாவிஹாரி தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

18 வயதாகும் பிரித்வி, சமீபத்தில் 19 வயதுக்குட்பட்டோருக்கான இந்திய அணிக்கு உலகக்கிண்ணம்வென்று கொடுத்தார். இவரைப் போல, உள்ளூர்போட்டியில் கலக்கி வரும் ஹனுமா விகாரிக்கும் (வயது-24) வாய்ப்பு கிடைத் துள்ளது.

**இந்திய அணி விபரம்:**

ஹோலி (தலைவர்), தவான், லோகேஷ் ராகுல், பிரித்வி ஷா, புஜாரா, ரகானே, ரிஷாப் பண்ட், பாண்ட்யா, அஷ்வின், ஜடேஜா, பும்ரா, இஷாந்த், ஷமி, உமேஷ், ஷர்துல் தாகூர், கருண் நாயர், கார்த்திக், விஹாரி.

# பழிவாங்கும் நோக்கில் செயற்படுகிறது அரசு

## கம்மன்பில காட்டம்



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இருந்த இராணுவ அதிகாரிகள் மற்றும் புலனாய்வுப் பிரிவினரிடம் பழி வாங்கும் நோக்கில் தற்போதைய அரசாங்கம் செயற்படுகிறதென, பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் பிவித்துரு ஹெல உறுமய கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)


## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய

## மஹோற்சவ தற்காலிக கடை அமைத்தல்-2018

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவத்தையிட்டு கீழ்வரும் கடைகளுக்கான இட ஒதுக்கீடு எதிர்வரும் 01.09.2018 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் வழங்கப்படவுள்ளன. கடைகளை ஏலத்தில் எடுப்பவர்கள் காலை 9.30 மணிக்கு சமுகமளித்து வாடகைப் பணத்தினை அன்றைய தினமே முழுமையாகச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

1.ஐஸ்கிறீம் கடை
2.இனிப்புக்கடை
3.கச்சான் கடை
4.புடைவைக் கடை

(சி-3300)

தொ.இல: 021 226 3074, 021 205 6644

அறங்காவலர் சபை.
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில்,
புன்னாலை வடக்கு, புலோலி





World Class UK Degree @ICBT Jaffna Campus

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

Apply now for New Intake 2018

ICBT HND IN BUSINESS MANAGEMENT

Finance/ Marketing/ Human Resource Management

TVEC REGISTERED

Duration
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications: GCE A/L + Work Experience

Cardiff Metropolitan University

BSc (Hons) BUSINESS MANAGEMENT

Offered by Cardiff Metropolitan University, UK

Duration
- 1 year

UGC RECOGNIZED

Entry Qualifications
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

Why Study ICBT?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls
- Easy Payment schemes

Week End Part Time Classes

0770 746 553 | 021 477 7888

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector
www.icbt.lk

(சி-3589)



World Class British IT Degree Programme @ ICBT Jaffna Campus

Apply Now For New Intake 2018

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

ICBT DUAL HNDs Software Engineering + Computing

Duration 2 Years

Cardiff Metropolitan University

UGC RECOGNIZED

BSc (Hons) SOFTWARE ENGINEERING

Offered by Cardiff Metropolitan University, UK

Duration 1 year

Entry Qualifications
Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs.

Why Study ICBT?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

A/L O/L → HND → BSc DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 021 477 7888

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector
www.icbt.lk


# இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம் புனர்பூசம்

ராகு, புத — சூரி — சுக் — குரு — சனி — கேது, சந், செவ்,

24.08.2018
ஆவணி 08, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 2.06 மணிவரை
உத்தராடம் முற்பகல் 8.57 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
வரலட்சுமி விரதம்,
ஆவணி ஓணம்

வளவன்

**மேடம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**இடபம்:** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், முயற்சிகளில் முன்னேற்றமுண்டு.

**சிம்மம்:** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், கௌரவமான நாள்.

**கன்னி:** வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சி வெற்றி தரும், பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும்.

**விருச்சிகம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பாராட்டும் புகழும் கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் கூடும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கும்பம்:** தொழிலில் சில மாற்றங்கள் செய்வது பற்றி யோசிப்பீர்கள், இறை வழிபாட்டில் ஆர்வம் கூடும், பயணத்தால் பலன் கிடைக்கும், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**மீனம்:** எதிர்பாராத முன்னேற்றங்கள் ஏற்படலாம், நட்பு வட்டம் விரிவடையும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் அதிகரிக்கும் நாள்.

# வல்லிபுர ஆழ்வார் மஹோற்சவ காலத்தில் பச்சை குத்துதல், காது குத்துதலுக்கு தடை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான ஆலய வருடாந்த மஹோற்சவ முன்னாயத்தக் கூட்டம் கடந்த 17.08. 2018 வெள்ளிக்கிழமை ஆலய கண்ணன் மண்டபத்தில் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

• ஆலயச் சுற்றாடலில் உணவு கையாளும் நிலையங்கள் ,அமைப்பவர்கள் நாட்டின் எப்பாகத்திலாவது பதிவு செய்யப்பட்ட உணவுச் சாலைகள் நடத்துபவர்களாக இருத்தல் வேண்டும்.

• சகல உணவு கையாள்பவர்களும் தாங்கள் பணி புரியும் பதிவு செய்யப்பட்ட உணவுச்சாலை அமைந்துள்ள பிரதேசத்திற்கான சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலிருந்து பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழ் பெற்றிருப்பதுடன் அதனை தங்களுடன் வைத்திருத்தல் வேண்டும். (ஐஸ்கிறீம் கடைகள் உள்ளடங்கலாக)

• பொதுச்சுகாதார பரிசோதகரின் கண்காணிப்புக்கு உட்பட்ட கிணறுகளிலிருந்து பெறப்படும் குடிநீரையே உபயோகித்தல் வேண்டும்.

• ஆலயச்சுற்றாடலில் இனிப்புக்கடைகள், கச்சான் விற்பவர்கள் உற்பத்தியை இவ்விடங்களில் மேற்கொள்ள முடியாது. விற்பனையை மட்டும் செய்யமுடியும். (கச்சான் வறுத்தல், இனிப்பு பண்டங்கள் தயாரித்தல்)

• அன்னதான மடங்களில் உணவு தயாரிப்பவர்கள் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

• கொத்துரொட்டிக் கடை அமைப்பவர்கள் கடையின் முன்பக்கம் கொத்துரொட்டி தயாரிக்காது பின்பக்கம் வைத்து தயாரித்தல் வேண்டும். (தூசிகளிலிருந்து பாதுகாப்பதற்கு)

• சகல கடை உரிமையாளர்களும் ஒவ்வொரு நாளும் வரும் கழிவுகளை வெளியில் வீசாது ஒன்றாகச் சேர்த்து பிரதேசசபை வாகனம் வரும்பொழுது கொடுத்தல் வேண்டும்.

• சகல கடைகளிலும் வேலைசெய்பவர்கள் ஆலயச்சூழலில் உள்ள நீரடைப்பு மலசலகூடங்களைப் பாவித்தல் வேண்டும்.

• அனுமதியற்ற விதத்தில் நடத்தப்படும் பச்சை குத்துதல், காதுகுத்துதல் போன்ற செயற்பாடுகள் ஆலயச் சூற்றாடலில் அனுமதிக்கப் படமாட்டாது.

• ஐஸ்கிறீம் விற்பனை செய்பவர்கள் குளிரூட்டியை தொடர்ந்து உரிய குளிர் நிலையில் பேணவேண்டும். அத்துடன் மின்சாரம் துண்டிக்கப்படும் சந்தர்ப்பத்தில் மாற்று ஒழுங்கு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

• பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

• புகைத்தல், மதுபாவனைப் பொருட்கள், போதை வஸ்துப் பொருட்கள் என்பவற்றின் பாவனை, விற்பனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# உத்தியோகபூர்வ பணி (நிலமெஹெவர) ஜனாதிபதி பொதுமக்கள் சேவை இன்று

(யாழ்ப்புாணம்)

ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேனவின் பணிப்பின் பேரிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரிலும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன வழிகாட்டலிலும் யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் பொது மக்களுக்கான "உத்தியோகபூர்வ பணி" நடமாடும் சேவை நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள் ளது.

இதற்கமைய சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் உத்தியோகபூர்வ பணி (நிலமெஹெவர) ஜனாதிபதி பொதுமக்கள் சேவை தேசிய வேலைத்திட்டம் இன்று 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

இந்நிகழ்வில்தேசிய அடையாள அட்டை வழங்குதல், காலங்கடந்த பிறப்பு இறப்பு விவாகப்பதிவுகள் மேற்கொள்ளல் மோட்டார்வாகனத்திணைக்களத்திற்குரிய சேவைகள், ஓய்வூதியத் திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகள், முதியோர் அடையாள அட்டை வழங்குதல், பொது மருத்துவ மற்றும் கண்வில்லை மருத்துவ சேவைகள், பல் மருத்துவ சேவைகள், அரச காணி சம்பந்தமான சேவைகள், தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குரிய சேவைகள், மூக்கு கண்ணாடி வழங்குதல், சமுர்த்தி திணைக்களம் தொடர்பான சேவைகள் எனப் பல சேவைகள் இடம்பெறும் என பிரதேச செயலாளர் திருமதி யு.யசோதா அறிவித்துள்ளார். (இ)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புதிய சோனகத்தெரு ஜே/88 கிராம அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் புதிய குடியிருப்பு இளைய நிலா சனசமூக நிலையத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் சங்கத் தலைவர் சி.க. தம்பிராசா தலைமையில் யாழ்.பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோத்தர் எஸ்.அன்று முன்னிலையில்நடைபெறும்.இ

# "அர்ச்சனை பாட்டேயாகும்" சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு கதிர் தொலைக் காட்சியின் ஏற்பாட்டில் நல்லூர் செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் தினமும் மாலை 4.30 மணியிலிருந்து ஆன்மீக நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன. இதில் "அர்ச்சனை பாட்டேயாகும்" எனும்தலைப்பில் சமூக சேவை உத்தியோகத்தர் வே.சிவராசா சொற்பொழிவாற்றுவார். தொடர்ந்து பஜனை நிகழ்வுகள் இடம்பெறும். (இ)

# தலையில் காயத்துடன் ஆசிரியரின் சடலம் மீட்பு

(சாவகச்சேரி)

கச்சாய் தெற்கு கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 8 மணியளவில் ஆசிரியர் ஒருவர் அவரது வீட்டுக் கிணற்றடியில் தலையில் காயத்துடன் சடலமாக உறவினர்களால் மீட்கப்பட்டுள்ளார்.

கச்சாய் தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 49 வயது நவசிவாயம் பாலசுப்பிரமணியம் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் வரலாற்று ஆசிரியராகக் கடமையாற்றி வந்தவர். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

தனிமையில் இருந்த குறித்த ஆசிரியர் நேற்று வியாழக்கிழமை விடத்தற்பளையிலுள்ள தனது காணியில் வேலை செய்து விட்டு மதியம் கச்சாயில் உள்ள தனது வீட்டிற்கு திரும்பியுள்ளார்.

பின்னர் இரவு உணவிற்கு வராமையால் அவரை தேடி உறவினர்கள் சென்ற போதே கிணற்றடியில் சடலமாகக் காணப்பட்டுள்ளார். உடனடியாக 1990 அவசர அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாரடைப்புக் காரணமாக உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-9-30)

# மக்கள் நல ஆட்சிக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்பொது நூலக கேட்போர் கூடத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்ப்பாணம்மாவட்ட அமைப்பாளர் தோழர் அம்பலவாணர் கணபதிப்பிள்ளை தலைமையில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் தோழர் ரில்வின் சில்வா மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் தோழர் இ.சந்திரசேகர் ஆகியோரின் பங்களிப்புடன் "நாட்டைக் காக்கும் நாட்டைக்கட்டியெழுப்பும் மக்கள் நல ஆட்சி" என்ற தொனிப் பொருளில் உரையாடல் மிக்க கருத்தரங்கு நடைபெறும். (இ)

# யாழ்.தேசிய கல்வியற் கல்லூரியிலிருந்து வெளியேறியவர்கள் தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் பட்டமளிப்பு நிகழ்வு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ளது.

இதை முன்னிட்டு பட்டமளிப்பு நிகழ்வை ஒழுங்கமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமைய கடந்தாண்டுகளில் கல்வி கற்று வெளியேறியவர்களைத் தொடர்பு கொள்ளுமாறு யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி அறிவித்துள்ளார்.

இதன்படி பட்டமளிப்பு நிகழ்விற்கான ஒழுங்கமைப்பிற்காக (2012-2014), (2013-2015), (2014-2016) ஆகிய ஆண்டுகளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் கல்வி கற்று வெளியேறியவர்கள் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் (077 613 2270, 021 223 0036) அவர்களுடன் அல்லது பதிவாளருடன் (077 618 4363) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி ச.அமிர்தலிங்கத்தால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# விவசாய போதனாசிரியர்களுக்கு யாழில் திறந்த போட்டிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவையின் விவசாயப் பேதனாசிரியர் சேவையின் தரம் மற்றும் பயிற்சித்தரம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது எதிர்வரும் 2018.09.02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்து தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே 2018.08.29 ஆம் திகதிக்குப் பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் "செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியுடனோ 021 221 9939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்காத பரீட்சார்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார்.(இ)

# முஸ்லிம் மக்கள் ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்-கிளிநொச்சி முஸ்லிம் மக்கள் ஒன்றுகூடல் இன்று 24 ஆம் திகதி தொடக்கம் நாளை மறுதினம் 26 ஆம் திகதி வரை யாழ்.ஒஸ்மானியாக்கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் - கிளிநொச்சி முஸ்லிம் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த ஒன்றுகூடல் நிகழ்வின் முதலாம் நாள் - அங்குரார்ப்பண அமர்வு இன்று மாலை 4 மணிமுதல் இரவு 9.30 மணி வரை யாழ்-கிளிநொச்சி முஸ்லிம் பேரவைச் செயலாளர் ஏ.சீ மஹானாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்துகொள்வார். (இ-9)

# பொன்னாலையில் பக்திரச கீதங்கள்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மஹோற்சவத்தில் தினமும் இரவு 7-8 மணி வரை உற்சவகால கலை நிகழ்வுகள் ஆலய முதன்மை மண்டபத்தில் நடைபெற்று வருகிறது. இதில் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை கலாபூஷணம் க.லோகேஸ்வரனின் பக்திரசக் கீதங்கள் பக்க வாத்திய சகிதம் இடம் பெறும். (இ)



தொண்டைமானாறு நீரேரியில் அமைக்கப்பட்ட பாலம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது. நீர்ப்பாசன திணைக்களப் பொறியியலாளர் சுதாகரன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் வடமாகாணசபை அவைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆ.சிறி மற்றும் பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். இதேவேளை மரநடுகை நிகழ்வும் இடம்பெற்றது. (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

THE YOUNG MEN'S CHRISTIAN ASSOCIATION
JAFFNA
Proudly Presents

**THE BEST PERFORMANCE APPRECIATION AWARD**
for students of GCE A/L Examination 2017, Northern Province

- First Rank: Rs.35,000/= Cash Prize, Shield & Certificate
- Second Rank: Rs.25,000/= Cash Prize, Shield & Certificate
- Poobalasingam Debate Shield to the winner of Inter School Debate each Participant will receive a cash voucher of Rs.5,000/=
- Arumuganavalar Award and a Cash Award of Rs. 40,000/= to a Teacher who has served in an undeveloped Area for more than fifteen Years
- Trilingual Award Rs. 25,000/= each for a Male and Female
- Best All-rounder Award Rs. 35,000/= each for a Male and Female
- Best Medical Student Rs. 35,000/= at University of Jaffna
- Best Physical & Science Student Rs. 35,000/= at University of Jaffna
- Best Engineering Student Rs. 35,000/= at University of Jaffna

**Chief Guest**
Hon. Dr Kandiah Sarveswaran
Minister of Education, Cultural Affairs, Sports and Youth Affairs Northern Province

**Guest of Honor**
Pro. S. Ratnajeevan H Hoole
Member, Election Commission

**Special Guest**
Mr.PonnampalamThayananthan
Divisional Secretary/ District Registrar
Divisional Secretariat
Jaffna

**Mr.S.Suntharasivam**
Zonal Director of Education
Jaffna

**Mr. S.E.Reginold**
Senior Assistant Registrar / Admissions,
University of Jaffna

We have great pleasure in inviting the Members and Well- wishers to participate at the Award Ceremony to be held on Saturday 25th2018 at 4.00pm, at the Main Hall, YMCA.

President, Board of Directors,
General Secretary & Staff, YMCA Jaffna.
(C-3590)


# சீனாவிடமிருந்து கடன் பெறுமாறு எந்த அழுத்தமும் இல்லை

## தூதுவர் கருணாசேன விளக்கம்



(கொழும்பு)

**சீனாவிடமிருந்து கடன் பெறுமாறு இலங்கைக்கு எந்த அழுத்தமும் கொடுக்கப்படவில்லை என சீனாவிற்கான இலங்கைத் தூதுவர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். சீனாவின் குளோபல் டைம்ஸிற்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

முதலீடுகளையும் கடன்களையும் சீனாவிடமிருந்து பெறுமாறு இலங்கைக்கு எந்த அழுத்தமும் பிரயோகிக்கப்படவில்லை என தெரிவித்துள்ள தூதுவர் சீனாவின் புதிய பட்டுப்பாதை திட்டத்தின் கீழ் அந்த நாட்டுடன் இலங்கை தொடர்ந்தும் ஒத்துழைப்பை பேண விரும்புகின்றது எனவும் தெரிவித்தார்.

இலங்கை அபிவிருத்தித் திட்டங்களுக்கான கடன்களைத்தான் கோரியது என்பதை முக்கியமாக சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் எனவும் இலங்கை தூதுவர் தெரிவித்துள்ளார்.

கடன்களைப் பெற்றுக்கொள்ளுமாறு எங்களுக்கு எந்த அழுத்தமும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கான சீனாவின் நிதியுதவி கூட இலங்கை அரசாங்கம் வேண்டுகோள் விடுத்ததை தொடர்ந்தே கிடைத்தது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணித்த நிறுவனங்களையோ அல்லது சீனாவையோ குறை சொல்வது தவறு எனவும் தெரிவித்துள்ள தூதுவர் துறைமுகம் தொடர்பான தீர்மானத்தை இலங்கை அரசாங்கமே எடுத்தது எனவும் தெரிவித்தார்.

எங்கள் முடிவுகள் காரணமாக ஏதாவது பிழையேற்பட்டிருந்தால் அதற்கு இலங்கை அரசாங்கமே பொறுப்பு எனவும் சீனாவிற்கான தூதுவர் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் சீனாவின் அதிகரித்த பங்களிப்பை இலங்கை எதிர்பார்க்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# மலர் வெளியீடு

**ஓம் சக்திவேல் ஆலயம் கந்தன்குளம் செல்வாநகர் கிளிநொச்சியில் அமைந்து உள்ளது. 25.08.2018 அன்று காலை 10.00 மணிக்கு விசேட பூஜைகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து வேலனின் அருளில் உலகம் உய்ய அற்புதங்கள் எனும் மலரும் வெளியிடப்படும்.**

இம் மலர் சந்நிதி முருகன் ஆலயத்திலும் வெளியிடப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

ஆலய நிர்வாகம்
021 435 4316
(5445)


# பருத்தித்துறை பிரதேச சபை மீள்கேள்வி அறிவித்தல்கள்

மேற்படி விடயம் தொடர்பில் பின்வரும் விபரங்களுக்கு அமைவாக துவிச்சக்கரவண்டி மற்றும் வாகன பாதுகாப்பு நிலையங்களை குறித்த காலப்பகுதியில் நடாத்துவதற்கு பொருத்தமானவர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1.வல்லிபுரஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் 2018 இன் போது 09.09.2018 தொடக்கம் 25.09.2018 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கீழே விபரிக்கப்பட்ட இடங்கள்

| நிலைய இல. | நிலையம் அமைந்துள்ள இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கமுடியாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| 01 | ஆலயசுற்றாடலில் பருத்தித்துறை மருதங்கேணிவீதியில் கோவிலுக்கு வடக்குப்புறம் | 1,28,500.00 | 200.00 | 1000.00 |
| 02 | முறாவில் வீதியில் குருக்கட்டு பிள்ளையார் கோவிலுக்கு வடக்குப்புறம் | 19,300.00 | 200.00 | 1000.00 |
| 03 | ஆலய சுற்றாடலில் பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் கோவிலுக்கு தெற்குப்புறம் | 61,400.00 | 200.00 | 1000.00 |

2. நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 2018 இன் போது 25.09.2018 தொடக்கம் 29.09.2018 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் கீழே விபரிக்கப்பட்ட இடம்

| நிலைய இல. | நிலையம் அமைந்துள்ள இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கமுடியாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| 01 | ஆலய சுற்றாடல் நாகர்கோவில் | 11,650.00 | 200.00 | 1000.00 |

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:- 27.08.2018 தொடக்கம் 03.09.2018 மு.ப 10.00 மணி வரை

2.கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி:- 03.09.2018 மு.ப.10.30 மணி வரை

3.கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:- 04.09.2018 மு.ப. 11.00 மணி

**கேள்வி நிபந்தனைகள்:-**

1.கேள்விப்படிவங்களை அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வல்லிபுரஆழ்வார் ஆலய துவிச்சக்கரவண்டி, வாகன பாதுகாப்பு நிலைய கேள்விப்படிவங்களை பிரதேசசபை, புலோலி உப அலுவலகத்திலும் நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய துவிச்சக்கரவண்டி, வாகன பாதுகாப்பு நிலைய கேள்விப்படிவங்களை பிரதேசசபை, குடத்தனை உப அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்.

2.கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தபால் உறையில் இடப்பட்டு உறையினது இடது பக்கமேல் மூலையில் கேள்வி விபரம் தெளிவாக எழுதப்படுவதுடன் தபால் உறைக்கு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 04.09.2018 மு.ப. 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்புதல் வேண்டும். மறு பிரதியை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் ஊடாகவோ உரிய காலப்பகுதிக்குள் அனுப்பப்படல் வேண்டும்.

3.கேள்வி திறத்தலின் போது கேள்விகாரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்க முடியும்.

4.இது விடயமான மேலதிக விபரங்கள், ஏனைய நிபந்தனைகளை காரியாலயத்திலும் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களிலும் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர், பெறுகைக்குழு, பருத்தித்துறைப் பிரதேச சபை, புலோலி.**
**24.08.2018**
(சி-3598)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 28<br>உயரம்: 6'3"<br>தகைமை/தொழில்: A/Lதனியார் தொழில் குவைத்<br>தொ.இ: B/436 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 37 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/Lதனியார் தொழில்<br>தொ.இ: G/733 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 21 சூரி செவ் 4 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: கால்நடை வைத்தியர்<br>தொ.இ: B/449 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 17செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Bed/ஆசிரியர்<br>தொ.இ: G/735 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 37சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BEdஆசிரியர்<br>தொ.இ: B/455 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 24<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc தனியார் தொழில்<br>தொ.இ: G/739 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 51<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/Lதனியார் தொழில்<br>தொ.இ: B/456 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 69 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/760 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



வடக்கு மாகாண மகளிர் விவகார சமூக சேவைகள் அமைச்சர் அனந்தி சசிதரன் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் நால்வருக்கு தையல் இயந்திரங்களை நேற்று கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் வைத்து பிற்பகல் 2 மணியளவில் வழங்கியுள்ளார். வடக்கு மாகாண தொழில்துறைத் திணைக்களத்தின் ஊடாக பயனாளிகள் தெரிவு இடம்பெற்றது.

# கிளிநொச்சி சந்தை வர்த்தகர்களுடன் எதிர்காலத்திட்டங்கள் குறித்து கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சேவைச் சந்தையிலுள்ள தேங்காய், பழக்கடை மற்றும் புடைவை வர்த்தகர்களை அழைத்து சந்தையினுடைய சுகாதார நிலைமைகள், அதனுடைய எதிர்கால திட்டங்கள் பற்றி பகுதி பகுதியாக கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர், உத்தியோகத்தர்கள், வர்த்தக சங்கத் தலைவர், காப்பாளர் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடலொன்றை மேற்கொண்டனர்.

இச் சந்திப்பு கடந்த 21 ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் கரைச்சிப் பிரதேச சபையில் வைத்து கலந்துரையாடப்பட்டது.

பிரதேச சபையினால் பொதுச் சந்தையில் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடு குறித்தும் அவர்களுடைய தேவைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டு வர்த்தகர்களால் குறிப்பிடப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்வதற்காக உரிய அறிவுறுத்தல் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதுதவிர கிளிநொச்சிக்கு தரப்பட இருக்கின்ற 765 மில்லியன் ரூபாவிலான நவீன சந்தைத்தொகுதி தொடர்பாகவும் வர்த்தகர்கள் சிலரிடம் ஏற்பட்டிருக்கக் கூடிய சந்தேகங்கள் குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இக் கலந்துரையாடலில் சுகாதார நிலைமைகள், கிளிநொச்சி சேவை சந்தையின் மரக்கறி வியாபாரிகளின் வியாபார நிலைய நடைபாதையில் வைக்கும் பொருட்களை அகற்ற வேண்டும், சந்தைக்குள் உள்ள கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து உரிமையாளருக்கு தண்டப்பணம் விதித்தல், சந்தை வளாகத்தில் 80 இலட்சம் ரூபாய் செலவிலான மலசலகூடம் அமையவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய நிறைவேற்ற வேண்டிய செயற்பாடு குறித்தும் வர்த்தகர்களுடைய தேவைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

புடைவை, அழகு சாதனம், நகையகம் போன்ற வர்த்தக நிலையங்கள் 765 மில்லியன் ரூபாய் செலவிலான நவீன சந்தை தொடர்பாக சில வர்த்தகர்களால் இக்கட்டடம் மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடம் என்பதாலும் கிளிநொச்சி மக்கள் தொகை குறைந்த இடம் என்பதால் 3 மாடி கட்டடத்தில் வியாபாரம் செய்ய முடியாது என்பதுடன் கனகபுரம் ஏ-9 வீதிகளை உள்ளும் வெளியிலும் பார்க்கக் கூடியவாறான சாதாரண கட்டடங்களே தங்களுக்கு போதுமானவை என துண்டுப் பிரசுரங்கள் பொதுமக்களுக்கும், வர்த்தகர்களுக்கும் வழங்கியமையால் வியாபாரிகளிடையே ஏற்பட்ட குழப்ப நிலையை தெளிவுபடுத்தினார்.

இந்த பொதுச் சந்தை கிளிநொச்சியின் தற்போது உள்ள சனத் தொகையை வைத்து மதிப்பீடு செய்யப்படவில்லை. இனிவரும் காலங்களில் சனத்தொகை அதிகரித்து வருகிற காலம்.

அதற்கான திட்டமிடல் இக்கட்டடம் 3 மாடிகளைக் கொண்டதாகவும் கட்டடத்தின் மேல் கரப்பந்தாட்ட மைதானமும் திரையரங்கமும் கட்டடத்தின் கீழே நிலத்தடியில் 400 கார்களை நிறுத்துமளவிலான கார் தரிப்பிடமும் 765 மில்லியன் ரூபாய் பெறுமதியில் கட்டுவதற்கான வரைபடம் கட்டட நிபுணர்களால் வரைந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கட்டடங்கள் கிளிநொச்சி மக்களுடைய எதிர்காலத்தை கருத்தில் கொண்டே முன்வைக்கப்படுகின்றன எனவும் சிலரிடம் ஏற்பட்டிருக்கும் சந்தேகங்கள் குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

மற்றும் ஏனைய நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (2-271-315)

# பரந்தன் சந்தியில் விபத்து இருவர் படுகாயம்



(பரந்தன்)

கிளிநொச்சி பரந்தன் சந்தியில் கார் ஒன்றும் பேருந்து ஒன்றும் விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்த் இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்கு உள்ளான பேருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் வீதியில் நின்ற இராணுவ வீரர் ஒருவரும் வேறொரு பேருந்தின் நடத்துநர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-312)

# மோ.சைக்கிள்-ஹன்டர் வாகனம் விபத்து; தந்தை, மகள் வைத்தியசாலையில் அனுமதி!

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு அரச போக்குவரத்து திணைக்களத்திற்கு முன்பாக இடம்பெற்ற வாகன விபத்தில் தந்தை கால் முறிந்த நிலையிலும் மகள் காயமடைந்த நிலையிலும் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இச் சம்பவம் நேற்று முன்தினம்நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருகையில்.

முல்லைத்தீவு- மாங்குளம் பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த யோகராசா மோகனதாஸ் (வயது-42) மற்றும் அவரது மகளான மோ.சிந்துஜா (வயது-15) ஆகிய இருவரும் சிறிய ஹன்டர் வாகனம் ஒன்று வீதியில் திருப்ப முற்பட்ட போது மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் கால் முறிந்த நிலையில் குடும்பஸ்தரும் காயமடைந்த நிலையில் அவர்து மகளும் மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் குறித்த ஹன்டர் ரக வாகனத்தை செலுத்திச் சென்ற சாரதியை கைதுசெய்து பதில் நீதவான் ரி.பரஞ்சோதியின் வாசல் தலத்தில் முன்னிலைப்படுத்தியுள்ளார்கள்.

இதன்போது சாரதியை எதிர்வரும் 04.09.18 வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட பதில் நீதிபதி ரி.பரஞ்சோதி உத்தரவிட்டுள்ளார். (2-281)



# Youth With Talent Reality Show

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்படும் Youth With Talent Reality Show நிகழ்வின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களுக்கான மாகாணப் போட்டிகள் நாளை 25 ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 15 தொடக்கம் 35 வயதுக்குட்பட்ட இளைஞர்-யுவதிகள் பங்கேற்க முடியும். மேலும் நிகழ்த்தப்படும் Reality show நிகழ்வானது 20 நிமிடங்களுக்கு உட்பட்டதாகவும் மேடையில் அரங்கேற்றக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு மாவட்ட காரியாலயத்துடன் அல்லது 021 222 2526 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்களின் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-9)

# பிரமோற்சவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி ஸ்ரீரங்க நாதப் பெருமாள் கோவில் பிரமோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி சனிக்கிழமை இரவு 12 மணிக்கு வேட்டை சப்பறத் திருவிழாவும், மறுநாள் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திருவிழா நடைபெறும்.

இன்றைய தினம் மாலை கொடிச்சீலை உபயகாரர்களுடைய இல்லத்தில் இருந்து ஆலயத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படவுள்ளது. (2)

# பொலிஸாரின் இரவு ரோந்து நடவடிக்கையில் கஞ்சா, கசிப்புடன் பலர் கைதாகினர்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்ட இரவு கண்காணிப்பு நடவடிக்கையின் போது கஞ்சாவுடன் இருவரும் கசிப்புடன் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

கடந்த 19 ஆம் திகதி கொக்குத்தொடுவாய் கருநாட்டுக்கேணிப்பகுதியில் உடைமையில் 5 லீற்றரும் 250 மில்லி லீற்றரும் கசிப்பு வைத்திருந்த நபர் ஒருவரை கைதுசெய்து அன்றே நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளார்கள்.

இவர் மீது ஏற்கனவே நான்கு குற்றங்கள் காணப்படுவதால் இவருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப் பணம் விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

இதனை செலுத்தத் தவறிய தன் காரணமாக அவரை சிறையில் அடைத்துள்ளார் கள்.

கடந்த 20 ஆம் திகதி முல்லைத்தீவு கள்ளப்பாட்டுப்பகுதியில் உடைமையில் 980 மில்லி கிராம் கஞ்சா வைத்திருந்த நபரை கைது செய்த முல்லைத்தீவு பொலிஸார் அன்றைய தினம் மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளார்கள். இவருக்கு 7 ஆயிரத்து ஐந்நூறு ரூபா தண்டப் பணம் நீதிபதியினால் விதிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கொக்குளாய் பகுதியில் கடந்த 18 ஆம் திகதி 4 ஆயிரத்து ஐந்நூறு மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த நபரை கைது செய்த முல்லைத்தீவு பொலிஸார் கடந்த 21 ஆம் திகதி மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளார்கள். இவருக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியினால் 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கள்ளப்பாடு பகுதியில் நேற்று முன்தினம் பொலிஸாரின் இரவு நேர கண்காணிப்பின் போது உடைமையில் 650 மில்லி கிராம் கஞ்சா வைத்திருந்த நபரை கைதுசெய்து அன்றைய தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளார்கள்.

இதன்போது இருவரும் தலா ஐம்பதாயிரம் ரூபா ஆட்பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். (2-281)

# பேருந்தின் மீது கல்வீச்சுத் தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தங்காலை வழிப்போக்குவரத்து பேருந்தின் மீது நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் உடுப்புக் குளம் பகுதியில் வைத்து அடையாளம் தெரியாத நபர்களினால் கல்வீச்சு தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

இந்த கல்வீச்சு தாக்குதல் உடுப்புக்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதன்போது தங்காலையைச் சேர்ந்த பேருந்தின் சாரதி சிறு காயங்களுக்கு உள்ளான நிலையில் மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பேருந்தின் நடத்துநர் மற்றும் உரிமையாளர்களினால் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (2-281)

# மேய்ச்சல் தரவைகள் இன்மையால் பயிர்ச்செய்கை காலங்களில் அவதி

## பண்ணையாளர்கள் கவலை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக வருமானத்தைப் பெற்றுகொள்ளக் கூடிய வகையில் கால்நடை வளர்ப்பு காணப்படுகின்ற போதும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இன்மையால் பண்ணையாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்ற போதும், கூடுதலான பண்ணையாளர்கள் திறந்தவெளி வளர்ப்பு முறையிலான கால்நடை வளர்ப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் திறந்தவெளி வளர்ப்பு முறைகளை மேற்கொண்டு வரும் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை பயிர்ச்செய்கை காலங்களில் பாதுகாப்பதிலும் பராமரிப்பதிலும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஏற்கனவே மேய்ச்சல்தரவைகளாக அடையாளப்படுத்தப்பட்ட நிலங்கள் குடியிருப்பு நிலங்களாகவும் பயிர்ச்செய்கைநிலங்களாகவும் மாற்றப்பட்ட நிலையில் புதிய மேய்ச்சல் தரவைகளை அமைக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

கடந்த 2010ஆம் ஆண்டு முதல் இவ்வாறு கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளை அமைத்துத் தருமாறு பண்ணையாளர்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு வினவியபோது மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பாளர்களும் விவசாயிகளும் அதிகளவில் காணப்படுகின்றனர்.

இவ்வாறு கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளை அமைப்பதில் பல்வேறு சிரமங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு மேய்ச்சல் தரவைகளுக்காக அடையாளப்படுத்தப்படும் இடங்கள் வேறு வேறு திணைக்களங்களுக்கு சொந்தமான காணிகளாக காணப்படுவதனால் அவற்றை விடுவித்து கொள்வதிலும் பாரிய பிரச்சினைகள் காணப்படுகின்றன. (2-315)

# விபத்துக்களை கட்டுப்படுத்த பொலிஸாருக்கு பிரதேச சபை உறுப்பினர் கடிதம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் உள்ள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் மாவட்ட பொலிஸ் அதிகாரிக்கும் இது தொடர்பில் கடிதம் ஒன்றை கடந்த 22 ஆம் திகதி கரைதுறைப்பற்று பிரதேசபை உறுப்பினர் க.விஜிந்தன் அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தின்படி முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்திற்கு உட்பட்ட முள்ளியவளை, முல்லைத்தீவு, கொக்கிளாய் ஆகிய பகுதிகளில் அண்மைக்காலமாக அதிவேகமாகவும் விதிமுறைகளை மீறியும் வாகனங்கள் செலுத்துவதனால் பல உயிர் இழப்புக்களையும் அங்க இழப்புக்களையும் விலைமதிப்பற்ற மனித இனம் எதிர்கொண்டு வருகின்றது.

சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் தங்கள் திணைக்களத்திடம் இருப்பதால் பொதுமக்கள்,மாணவர்கள் கூடுகின்ற பகுதிகளில் வாகனங்கள் அதிவேகமாக செலுத்துவதை உடனடியாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# நாயாற்றில் வாடிகள் எரிப்பு; மூவர் தொடர்ந்தும் விளக்கமறியலில்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாற்றுப்பகுதியில் தமிழ் மக்களின் எட்டுவாடிகள் கடந்த 13 ஆம் திகதி எரியூட்டப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நீர்கொழும்பைச் சேர்ந்த மூவரை முல்லைத்தீவு பொலிஸார் அன்று இரவே கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியுள்ளார்கள். இவர்களை கடந்த 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதற்கமைய கடந்த 21ஆம் திகதி குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது முல்லைத்தீவு பொலிஸாரால் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் எரிக்கப்பட்ட பகுதியின் சாம்பல்கள் எடுக்கப்பட்டு இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் தீ தானாக ஏற்பட்டதா? அல்லது வைக்கப்பட்டு எரிந்ததா? என்பது தொடர்பான அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் மன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

இதற்கமைய குறித்த சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும் 04.09.18 வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.டெனிஸ்குமார் உத்தரவிட்டுள்ளார். (2-315)

# கௌதாரிமுனை கிராம மக்கள் போக்குவரத்து இன்றி அவதி

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கௌதாரிமுனை கிராம மக்கள் போக்குவரத்தில் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

குறித்த கிராமத்தில் வாழ்கின்ற நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பூநகரி நகருடான தேவைகளுக்கு வந்து செல்வதில் நாளாந்தம் பெரும் நெருக்கடிகளை முகம் கொடுத்து வருகின்றனர்.குறிப்பாக மருத்துவ தேவைகளின் நிமித்தம் வந்து போகின்ற பொதுமக்களின் நிலைமை பரிதாபமாகக் காணப்படுகின்றது.

கௌதாரிமுனையிலிருந்து தினமும் காலை ஏழு மணிக்கு பூநகரி வாடியடி சந்தியை நோக்கி புறப்படும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து பின்னர் வாடியடியிலிருந்து மாலை ஐந்து மணிக்கு கௌதாரிமுனை நோக்கிச் செல்கிறது. இதற்கிடையில் எவ்வித போக்குவரத்து ஏற்பாடுகளும் இல்லை.

பூநகரி-யாழ்ப்பாணம் ஏ-32 வீதியிலிருந்து 18 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் கௌதாரிமுனை கிராமம் அமைந்துள்ளது. காலையில் புறப்படுகின்ற பேருந்தில் கிராமத்தில் இருந்து புறப்படும் மக்கள் தங்களின் தேவைகள் சில மணித்தியாலயங்களில் நிறைவுற்ற பின்னர் மாலை ஐந்து மணிவரை பூநகரி வாடியடியில் காத்திருக்க வேண்டும். அல்லது மன்னார் யாழ்ப்பாண பேருந்தில் பயணித்து கௌதாரிமுனைக்குச் செல்கின்ற சந்தியில் இறங்கி கிராமத்திற்கு செல்கின்ற உந்துருளிகள், வாகனங்கள் மற்றும் டிப்பர்களை மறித்து ஏறிச் செல்ல வேண்டும். சில சமயங்களில் எவையும் இல்லாது விடத்து 18 கிலோ மீற்றர் நடந்து சென்று ஊரை அடைய வேண்டும். கைக்குழந்தைகளுடன் காணப்படும் தாய்மார்களின் நிலைமை பரிதாபமாகக் காணப்படுகிறது.

அத்தோடு குறித்த சந்தியில் வெயிலுக்கு ஒதுங்கி நிற்பதற்கு கூட பேருந்து தரிப்பிடம் கூட இல்லாத நிலை காணப்படுகிறது. இதனால் கடும் வெயிலில் பொதுமக்கள் காத்திருக்கும் நிலைமையும் காணப்படுகின்றது.

தங்களின் நிலைமை தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் மற்றும் ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களில் பல தடவைகள் எடுத்துக் கூறிய போது இதுவரை எவ்வித நன்மையும் ஏற்படவில்லை என கௌதாரிமுனை மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (2-312)

# புதுக்குடியிருப்பில் நடமாடும் சேவை

(முல்லைத்தீவு)

தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் குறைந்த வசதிகளையுடைய மக்களுக்கு சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 8.30-பிற்பகல் 3.30 மணி வரை புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் நடத்துவதற்கு ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளல், பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ் வழங்கல், பிறப்பு,இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்களின் மொழி பெயர்ப்பு வழங்கல், காலங்கடந்த பிறப்பு, இறப்பு பதிதல், தெரிவு செய்யப்பட்ட 250 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலைச் சீருடைத்துணி மற்றும் புத்தகத் தொகுதி வழங்கல்.

முதியோர் அடையாள அட்டை வழங்கல் மற்றும் தொழில் திணைக்களம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழு, காணிச் சீர்திருத்த ஆணைக்குழு, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, ஓய்வூதியத் திணைக்களம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, ஊழியர் சேமலாப நிதியம், அரச கரும மொழிகள் ஆணைக்குழு போன்ற திணைக்களங்களினால் வழங்கப்படும் சேவைகள் என்பன பொது மக்களுக்காக வழங்கப்படும்.

இதேவேளை தேசிய அடையாள அட்டை மற்றும் முதியோர் அடையாள அட்டைக்கான புகைப்படம் மற்றும் முத்திரை என்பன இலவசமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# குற்றவாளிகளுக்கு உடந்தையாக இருந்த இரு பெண்களுக்கு விளக்கமறியல்

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றிலிருந்து கடந்த 7 ஆம் திகதி நான்கு கைதிகள் தப்பியோடியுள்ளார்கள். கடந்த ஐந்தாம் மாதம் மற்றும் ஆறாம் மாத காலப் பகுதிகளில் இந்த கைதிகள் செய்த குற்றச்செயலுக்கு உடந்தையாக இருந்த இரு பெண்களும் நீதிமன்றத்திற்கு அழைத்துவரப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட நிலையில்மீண்டும் இரண்டு பெண்களும் நீதிமன்றிலிருந்து தப்பியோடிய கைதிகளுக்கு துணையாக இருந்து செயற்பட்டதன் காரணமாக தப்பியோடிய கைதிகளின் வழக்கு கடந்த 21.08.18 அன்று நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றவாளிகளுக்கு உடந்தையாக இருந்த இரண்டு பெண்களை எதிர்வரும் 04.09.18 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (2-315)






கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் புதிய கட்டடம் நேற்று முன்தினம் பிற்பகல் 5.30 மணியளவில் கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அமைச்சர் காமினி விஜித் விஜயமுனி சொய்சாவினால் திறந்து வைக்கப்பட்டது. முப்பது மில்லியன் ரூபா செலவில் 155 ஆம் கட்டை ஏ-9 வீதி கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட குறித்த திணைக்களத்தின் புதிய கட்டடமே திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர், பணிப்பாளர் மற்றும் திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர்கள், கடற்றொழில் சமாசத் தலைவர், கடற்றொழிலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர். (படங்கள்:- பரந்தன், கண்டாவளை செய்தியாளர்கள்)


## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# இனங்களின் ஆக்கிரமிப்பு!

# சூழலியல் சார்ந்த ஓர் பார்வை

(தொடர்ச்சி)

**இலங்கையை ஆக்கிரமிக்கும் சில விலங்கினங்கள்**



**1.Pterygoplichthys sp**


இக்கட்டுரைத் தலைப்பை தேர்ந்தெடுப்பதற்கு மிக முக்கிய காரணமே இம்மீனினமாகும். **Tank cleaner** என பொதுவாக அழைக்கப்படும் இம் மீன் நன்னீருக்குரிய கெளுத்தி **(catfish)** வகையாகும்.

பிரேசிலின் அமேசன் நதியை தனது பூர்வீகமாகக் கொண்ட இம் மீனினம் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் அலங்கார மீனினமாக **(ornamental fish)** அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் இதன் உடலமைப்பு மற்றும் கறுப்பில் மஞ்சள் நிற வரி/வலையமைப்பு. தொட்டியில் உள்ள ஏனைய மீன்களுக்கு பாதிப்பின்மை மற்றும் மீன் தொட்டியில் சேரும் கழிவுகள், அல்கா என்பவற்றை உணவாக உட்கொண்டு தொட்டியை சுத்தம் செய்வதாகும்.

எனவே இம் மீனினம் எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தும் என்ற வினா நியாயமானதே. தற்போது அறிமுகப்படுத்தப்பட்ட எல்லா நாடுகளினதும் உயிர்ப்பல்வகைமைக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

உயிர்ப்பல்வகைமையில் இம் மீனினத்தின் பாதிப்பு மற்றும் இம் மீனினத்தை கட்டுப்படுத்தும் முறைகள், வேறு பயன்கள் உள்ளனவா? எனும் நோக்கில் பல்வேறு உயிரியலாளர்களாலும் கையாளப்படுகிற ஓர் மீனினமாக உள்ளது. வலைத் தேடல் மேற்கொள்ளின் இதன் முக்கியத்துவம் இலகுவில் புலப்படும்.

நன்னீரில் அடித்தள வாழியான இம் மீனினம் ஏறத்தாள 35cm வரை வளரும். 50cm வரை வளரக்கூடியது.



உடலானது செதில்களின் சேர்க்கையாலான தட்டுக்களால் சூழப்பட்டு காணப்படுவதுடன் கறுப்பு நிறத்தில் அலையுருவான மஞ்சள் நிற கோடுகளைக் கொண்டுள்ளது. சற்று வயிற்றுப்புறமாகவுள்ள வாய் பற்களைக் கொண்டுள்ளதுடன் உள்ளிருக்கும் பகுதியால் **(suckers)** சூழப்பட்டுள்ளது. இது தனது விசேடித்த வாய் அமைப்பால் அடித்தளம் மற்றும் ஒட்டி வாழும் பாசி, தாவரங்கள், பூழுக்கள் பூச்சிகள், சிறு நத்தைகள், மீன் முட்டைகள் என பல்தரப்பட்ட உணவுகளையும் உண்ணும். எனவே பல்வேறுபட்ட நீர்வாழ் உயிரினங்களுக்கும் அச்சுறுத்தலாகியுள்ளது. அத்துடன் எப்போதும் அடித்தளத்தை கிளறுவதால் ஏனைய நீர்வாழிகள் குறிப்பாக மீன்களின் இனப்பெருக்க வாழிடம், நடத்தை மற்றும் இளம்பருவங்களை பாதிக்கின்றது. குறிப்பாக ஆண் மினினம் நீண்ட துவாரங்களை ஆழம் குறைந்த பகுதியில் உருவாக்குகின்றது.

இவ்வகையில் பல்வேறு நீர்வாழ் உயிரினங்களுக்கும் அச்சுறுத்தலாய் உள்ளது.

இதன் கடினமான உடலமைப்பு எதிரிகளிடம் இருந்து பாதுகாப்பை வழங்குவதால் குடித்தொகை தொடர்ச்சியான வளர்ச்சியைக் காட்டுகிறது. உடலின் முதுகுப்புறச் செட்டையில் காணப்படும் நீண்ட கூரிய முள் இரை கௌவி விலங்குகளுக்கு இடையூறு செய்கிறது.

அத்துடன் மீனவர் வலைகளைச் சேதப்படுத்துவதால் பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்துகிறது. நீர் நிலைகளில் இதன் பெருக்கம், ஏனைய நீர்வாழ் விலங்குகளில் பரம்பல் மற்றும் குடித்தொகையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. நீர் வற்றும் காலங்களிலும் சேற்றில் மறைந்து உயிர் வாழக்கூடியது. நீருக்கு வெளியே சிலமணி நேரம் இயல்பாக இருக்கும். இதற்கான உடற்கட்டமைப்பு தொழில்சார் இயைபாக்கம் இதன் உடலில் உள்ளது.

இலங்கையில் பல்வேறு ஏரிகள், கால்வாய்கள், குளங்கள், ஆறுகள், நீர்த்தேக்கங்கள் என பல்வேறு நன்னீர் நிலைகளிலும் குறிப்பாக கண்டி, கொழும்பு மாவட்டங்களிலும் பாரிய பிரச்சினையாக உள்ளது. சதைப்பகுதியுடன் ஒப்பிடும்போது அதிக என்புப் பகுதியைக் கொண்டுள்ளதால் உணவுக்கான கேள்வி குறைவு இல்லை.

எனினும் இந்தோனேஷிய மக்களால் உண்ணப்படுகிறது. எவ்வாறெனினும் தற்போது வடக்கு மாகாண இயற்கை/செயற்கை நீர் வழிடங்களில் இவற்றின் இருப்பு உத்தியோகபூர்வமாக பதிவு செய்யப்படவில்லை. ஆனால் கட்டுரையாளர் மற்றும் யாழ்.பல்கலைக் கழக விலங்கியல் துறையினரின் வெளிக்கள ஆய்வுகளில் இம் மீனின் பரம்பல் யாழ்.மாவட்டத்திலுள்ள குளங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கிலுள்ள குளம் ஒன்றில் மீன் பிடிக்கும் தொழிலாளியின் கருத்துப்படி அண்மைக்காலங்களில் இம்மீனானது பல்வேறு அளவுகளில் வலைகளில் சிக்குவதுடன் இதன் வருகையின் பின்னர் ஏனைய உண்ணக்கூடிய மீன்களின் இருப்பு வெகுவாக குறைந்துள்ளது. அத்துடன் வலைகளும் அதிகமாக பாதிக்கப்படுகின்றன.

இந்நிலைமைக்கான காரணத்தை விரிவாக நோக்கின் A-9 பாதை திறக்கப்பட்ட பின்னர்



ஏனைய வரவுகளைப் போல மிகச் சாதாரணமாக அலங்கார மீன் வளர்ப்புக்காய் நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள பண்ணைகளில் இருந்து அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

நாங்களும் வெகு இயல்பாக இவற்றை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொண்டு மீன் தொட்டிகளில் வளர்க்கத் தொடங்கினோம். ஆனால் குறிப்பிட்ட அளவு வளர்ந்ததன் பின்னர் மீன் தொட்டிகளில் பேண முடியாது என தெரிந்ததும் என்ன செய்தோம்?

அலங்கார மீன் விற்பனை நிலையங்களுக்கு செல்வது எனது வாடிக்கையான செயல். இதே வினாவை விற்பனையாளரிடம் வினவினேன். அதேநேரம் வாங்குவதற்கு வந்த சிறுவர்களையும் வினவினேன். சிறுவர்கள் இயல்பாகவும் மிகத் தெளிவாகவும் ஏளனத்துடன் கூறிய பதில், பெரிதாக வளர்ந்ததும் அருகிலுள்ள குளத்தில் விடுவோம்!

உலகளாவிய ரீதியில் இம் மீனின் பரம்பல் மற்றும் குடித்தொகையை கட்டுப்படுத்த பாரிய முயற்சிகள் பெருந்தொகைப் பணத்தைக்கொண்டு ஆராய்ச்சிகள் ஏன் இலங்கையிலும் கூட நடைபெறுகையில் நாம் மிகச் சாதாரணமாக குளங்களில்தான் விடுகின்றோம். அண்மையில் பாடசாலை ஆசிரியர்களுடனான கலந்துரையாடலிலும் இதே கருத்து. அதாவது வளர்ந்ததும் குளத்தில்தான் விடுவோர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

எனவே சூழலியல் சார்ந்த சிந்தனைகளும் விழிப்புணர்வுகளும் உரிய நேரத்தில், உரிய வயதில் வழங்கப்படுவது மட்டுமன்றி சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இம் மீனைக் கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறை உத்தியோகபூர்வ ரீதியில் அதிகாரமுள்ளவர்களாலும் முன்னெடுக்கப்பட வேண்டும். ஆனால் சூழலியல் முக்கியத்துவம் சார்ந்த விதை பாடசாலைகளில் இடப்பட வேண்டும். அனுபவம் சார்ந்த கல்வி அவசியம். (தொடரும்...)

**கலாநிதி.வி.சா.துஷசிதா**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
விலங்கியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# வெட்டுக்காயங்களுக்குள்ளான மலைப்பாம்பிற்கு சத்திர சிகிச்சை

(கொழும்பு)

இலங்கையில் பாரிய காயங்களுக்குள்ளான மலைப் பாம்பிற்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புல்லு வெட்டும் இயந்திரத்தில் சிக்கி பாரிய வெட்டுக் காயங்களுக்குள்ளான பாம்பிற்கே சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சையின் பின்னர் ஹியாரே மிருக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில், தற்போது குறித்த பாம்பு குணமடைந்து வருவதாக காலி வன விலங்குப் பாதுகாப்புச் சங்கம் தெரிவித்துள்ளது.

பட்டபொல பிரதேசத்தில் புல்லு வெட்டு இயந்திரத்தில் சிக்கிய பாம்பிந்த வயிற்றுப் பகுதியில் 3 காயங்கள் ஏற்பட்டுள்ளதாக வனவிலங்குப் பாதுகாப்புச் சங்கம் தெரிவித்துள்ளது.

காயமடைந்த பாம்பிற்கு 45 நிமிடங்கள் வரை சத்திரசிக்சை



மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வன விலங்குப் பாதுகாப்புச் சங்க அதிகாரி சிசிர ஜெயசிங்க தெரிவித்துள்ளார். (இ-7)

# 5 ஆயிரம் ஏற்றுமதி உற்பத்தி கிராமங்களை அமைக்கத்திட்டம்

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

5 ஆயிரம் ஏற்றுமதி உற்பத்தி கிராமங்களை அமைக்க சமூக சேமநல ஆரம்ப கைத்தொழில்துறை அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் முக்கிய உற்பத்திகளை ஏற்றுமதி சந்தைகளுக்கு பொருத்தமான வகையில் பெறுமதி சேர்க்கப்பட்ட ஒன்றிணைந்த செயற்பாடுகளின் மூலம் மேம்படுத்தும் நோக்கிலான திட்டத்தினாலான இரண்டாம் கட்டத்தின் கீழ் நாட்டில் 5 ஆயிரம் ஏற்றுமதி கிராமங்களை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் கிராமங்களிலுள்ள வளங்களுக்கு அமைவாக கிராமத்துக்குத் தேவையான உற்பத்திகள் தெரிவு செய்யப்பட்டு அதற்கு அமைவாக விவசாயிகளுக்கு தேவையான நிதி வசதி, தொழில்நுட்பம், செயற்றிறன் வளங்களைப் பயன்படுத்துதல் விவசாயப்பண்ணை முகாமைத்துவம், அறுவடையை மேற்கொள்ளுதல் மற்றும் செயற்பாடுகள் போன்ற பிரிவுகளில் பயிற்சிகளும் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

இவர்களுக்குத் தேவையான உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைக்கான வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஏற்றுமதி கைத்தொழில் துறைக்காக ஆய்வு அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டு வேலைத் திட்டம் ஒன்றும் இத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும். முதல் கட்டத்தின் கீழ் 300 பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆயிரம் ஏற்றுமதி கிராமங்கள் அமைக்கப்படவுள்ளன. 2018-2020 ஆம் ஆண்டு காலப்பகுதி வரையில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் மொத்த கிராமங்களில் எண்ணிக்கையை 5 ஆயிரம் மாக அதிகரிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக சமூக சேமநல மற்றும் ஆரம்ப கைத்தொழில் துறை அமைச்சருமான தயா கமகே சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7)




## தமிழ் உலகம்

பொறுமையல்ல உரிமையோடு
உணரும் அன்புதான் கடவுள்
கருணைதான் வடிவமும் கண்கள்
காணும் உருவங்களும் கூட
திரு வருளே ஆதாரம் சித்தர்களால்
பெருமை பெற்ற நல்லூர்
முருகன் அருள்- தமிழ் உலகம்
போற்றும் அவன் புகழ்!

இ.ஜெ.பாலன்.

# பிரதமர் மோடி-ஜனாதிபதி மைத்திரி அடுத்த வாரம் நேபாளத்தில் சந்திப்பு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த வாரம் பேச்சுக்களை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக, இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிம்ஸ்ரெக் எனப்படும் வங்காள விரிகுடா விளிம்பு நாடுகள் ஒத்துழைப்பு அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாடு நேபாளத்தில் எதிர்வரும் 30, 31 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

காத்மண்டுவில் நடைபெறும் இந்த மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட பல நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர். இந்த மாநாட்டின்போது, பக்க நிகழ்வாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் சந்தித்துப் பேச்சு நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் அதிகரித்து வரும் சீனத் தலையீடுகள், இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து இதன் போது பேசப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

## சம்ஹார முருகன் தோளும் கடம்புமாய் வந்திடுவான்

"முழுமுதற் பொருளாம் விக்னேஸ்வரன்-உடனாய்
சேல் அனைய வேல்விழிமா திருவருடன்
கொடியேறும் கண்காட்சி கண்டோம்
நாளும் ஓர் அழகனென நம் இனத்தார்
ஒன்று கூடி கண்டிடுவார் நல்லையிலே
வாடுமெம்மினத்தார் காணாமல் இருப்பவர்க்கு
கருணை காட்ட வந்திடுவான் அயில் முருகன்
சூழும் கொடிய மறவோர் சூழ்ச்சிகளும்
துவேச மனங்களையும் சம்கார
முருகனாய் சுட்டெரிப்பான்
எம் தோளும் கடம்புமாய் வரும்
நல்லை அழகு முருகன்"

ப.பாலசுப்பிரமணியம்
வேலணை.

# தீர்மானங்களைச் செயற்படுத்த முடியாமைக்குக்காரணம் என்ன?

## நகரசபை உறுப்பினர் கஜிதன் கேள்வி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையில் உறுப்பினர்களால் முன்வைக்கப்படுகின்ற பிரேரணைகள் தீர்மானங்கள் ஆக்கப்படுகின்ற போதிலும் அந்தத் தீர்மானங்களைச் செயற்படுத்த முடியாமைக்குக் காரணம் என்ன? என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜிதன் கேள்வி எழுப்பியுள்ளார். கடந்த அமர்வின் போதே அவர் இக் கேள்வியை தவிசாளரிடம் முன்வைத்திருந்தார். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் எந்தளவில் உள்ளன? தீர்மானங்களைச் செயற்படுத்த முடியாமைக்கான காரணம் என்ன? காரணத்தைக் கூறுங்கள் அதற்கான தீர்வினை நாம் பெற்றுத் தருகிறோம். தீர்மானங்கள் எவையும் நடைமுறைக்கு வரவில்லை என்பது மன வருத்தத்தை ஏற்படுத்துகிறது. மக்கள் எம்மிடம் அபிவிருத்தி தொடர்பாக கேள்வி எழுப்புகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார் (இ-30)

# கந்தபுராண எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், "கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்" என்ற தொனிப்பொருளில், நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் "கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா - 2018" நிகழ்வுகளை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத் திலும் சிறப்புற முன்னெடுத்து வருகிறது.

அந்தவகையில், ஒன்பதாம் நாள் நிகழ்வுகள், 24.08.2018 இன்று வெள்ளிக்கிழமை, ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கந்தரோடை வற்றாக்கை அம்மன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் திரு முன்னிலையில், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பிரதி முதல்வர் ச.லலீசன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க, காரைநகர் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் உடுவில் பிரதேச செயலகக் காலாசார உத்தியோகத்தர், சைவப்புலவர் பொன். சந்திரவேல் "நீதியால் உலகு அளிப்பதே அரசர் தம் நெறியே" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற் பொழிவும் பிரம்ஸ்ரீ தி.ஸ்ரீசந்திர மௌலீசுரசர்மாவின் (மலேசியா) தனியிசை அரங்கு சிறப்பு நிகழ்வாகவும் இடம்பெறும்

உற்சவ காலச் சிறப்புச் சொற்பொழிவின்போது பத்து வினாக்கள் அடங்கிய வினாக் கொத்து அன்றைய நிகழ்வுச் சொற்பொழிவினை உள்ளடக்கியதாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு, அன்றைய தினமே விடைத்தாள்கள் மாணவர்களிடமிருந்து பெறப்படும். முதல் இருபது நாட்களிலும் விடையளித்த மாணவர்களில் முன்னிலை பெறும் ஐந்து மாணவர்களுக்கு ஐந்து துவிச்சக்கர வண்டிகளும் ஏனைய மாண வர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## நல்லைக் குமரப் "பா"

சூரன் கொடுமை தாங்காது
சொல்லித் துடித்த தேவர்களின்
பாரத் துயரைப் போக்கிடவே
பற்றும் வேலாற் கூறிட்டு
சூரத் தனத்தை யொழித்தங்கு
சுடரும் சேவல் மயிலாக்கி
ஆரஞ் சூடி யமர்ந்தவனே
ஐயன் நல்லைக் குமரப்பா!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

# தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு இலங்கை இளங் கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் தினமும் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8.15 மணிவரை தெய்வீக இசையரங்கு நடைபெறுகிறது.

இசைக்கச்சேரி

இதில் இன்று பாட்டு-புண்ணியா செல்வ முருகானந்தம், வயலின்-அ.ஜெயராமன், மிருதங்கம்-சதா. வேல்மாறன், பாட்டு-தார்ஷணி அருளானந்தம், வயலின்-எஸ். தியாகரன், மிருதங்கம்-வை.வேனிலான், கடம்-மு.சுலக்சன், கெஞ்சிரா-கி. அனந்தகோபன் ஆகியோர் வழங்குவர். (இ

95 இலட்சம் பெறுமதியான

# தங்க நகைகளுடன் 4 பெண்கள் கைது!



(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் ஒரு தொகை தங்க நணயங்கள் உட்பட தங்க நகைகளை எடுத்து வந்த இலங்கைப் பெண்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளால் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பெண்கள் சிங்கப்பூரிலிருந்து மும்பை வந்து அங்கிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பெண்களிடமிருந்து 95 இலட்சத்து 71 ஆயிரத்து 320 ரூபா பெறுமதியான தங்க நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். ஒரு கிலோ 595 கிராம் நிறையுடைய தங்க நகைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)



# பாரதம்

# பேரறிவாளன் உட்பட ஏழு தமிழர்களையும் மத்திய அரசு விடுதலை செய்ய வேண்டும்

## ராமதாஸ் வலியுறுத்து




(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன் உட்பட ஏழு பேரையும் மத்திய அரசு விடுதலை செய்யவேண்டும்என பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தமிழர்களிற்கு ஆதரவாக எந்த முடிவும் எடுக்கப்படக்கூடாது என்பதற்காக வழக்கு விசாரணை ஆணையத்திற்கு உள்ளே செல்கின்றது. இது பெரும் அநீதி என அவர் தெரிவித்துள்ளார்.

ஏழு தமிழர்களையும் மத்திய அரசு உடனடியாக விடுதலை செய்யவேண்டும் இல்லாவிட்டால் உச்சநீதி மன்றம் தலையிட்டு முடிவெடுக்க மத்திய அரசாங்கம் அனுமதியளிக்கவேண்டும் எனவும் ராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஏழு தமிழர்களையும் விடுதலை செய்ய முடியாது என இந்திய மத்திய அரசு அண்மையில் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# தவறு செய்தவர்களை மன்னிப்பதே உகந்தது

## ராஜீவ் காந்தி கொலை குறித்து ராகுல்



(ஹம்பாக்)

"எனது பாட்டி மற்றும் தந்தையை வன்முறையில் இழந்தவன் நான். இவ்வாறு வன்முறையினால் தனிப்பட்ட முறையில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளேன். இதிலிருந்து மீண்டு வர எனக்கு கிடைத்த ஒரே வழி தவறு செய்தவர்களை மன்னிப்பதேயாகும்" என காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

ஜேர்மனி மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு நான்கு நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ராகுல், நேற்று முன்தினம் புதன்கிழமை ஜேர்மனியை சென்றடைந்தார்.

அங்கு ஹம்பர்க் நகரில் இடம்பெற்ற கலந்துரையாடலொன்றில் பங்கேற்று உரையாடிய ராகுல் மேற்படி தெரிவித்திருந்தார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி குற்றவாளிகளான பேரறிவாளன் மற்றும் நளினி உள்ளிட்டோரை விடுவிப்பதில் தமக்கு எந்த அட்சேபனையும் இல்லை என்றும், குற்றவாளிகளை தாம் மன்னிப்பதாகவும் ராகுல் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.


இந்நிலையில் குற்றவாளிகளை மன்னிப்பதே தமது கொள்கையென மீண்டும் ராகுல்தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் கூறிய அவர்,

"நம்மீது மற்றவர்கள் வெறுப்பை வெளிப்படுத்தினாலும், பதிலுக்கு நாம் வெறுப்பை தூண்டும் வகையில் பேசக் கூடாது. என் மீது வெறுப்பை தூண்டும் விதமாக பிரதமர் தொடர்ந்து பேசி வருகிறார். ஆனால், அவரைப் போலவே பதிலுக்கு நானும் பேசாமல், இந்த உலகம் மிகவும் மோசமானது அல்ல என்பதை அவரிடம் கூற விரும்பினேன்.

அதற்காகவே அவர் இருக்கும் இடத்திற்குச் சென்று அவரை கட்டித் தழுவினேன். இந்த நற்குணத்தையே மகாத்மா காந்தியிடம் இருந்து கற்றுக்கொண்டோம்.

நாடாளுமன்றத்தில் நான் பிரதமரை கட்டித்தழுவியது காங்கிரஸ் கட்சியில் உள்ள சிலருக்கு பிடிக்கவில்லை. ஆனாலும் அவர்களின் எண்ணத்தை நான் ஆதரிக்கவில்லை" என ராகுல் தெரிவித்துள்ளார். அத்துடன் ஏழு தமிழர்களையும் விடுவிப்பதில் தமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என உறுதிபடக் கூறியமை குறிப்பிடத்தக்கது. (7)

# பிரபல எழுத்தாளர் குல்தீப் காலமானார்



(டில்லி)

மூத்த பத்திரிகையாளரும் பிரபல எழுத்தாளருமான குல்தீப் நய்யார் டில்லியில் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது-95.

பாகிஸ்தானின் சியால் கோட் பகுதியில் 1923ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி பிறந்தவர் குல்தீப் நய்யார். பத்திரிகையாளராக தன் பணியைத் தொடங்கிய இவர் எழுத்தாளராகவும் அரசியல் விமர்சகராகவும் பிரபலம் ஆனார்.

குல்தீப் நய்யார் 11 புத்தகங்களை எழுதியுள்ளார். "எல்லைகளுக்கு இடையே", "தூரத்து உறவினர்கள்: துணைக் கண்டத்தின் கதை", "நேருவுக்குப் பிறகு இந்தியா" மற்றும் "ஸ்கூப்" போன்றவை இவருடைய புகழ்பெற்ற புத்தகங்கள்.

இடதுசாரி பார்வை கொண்ட அரசியல் விமர்சகரான இவர் மாநிலங்களவை உறுப்பினராகவும் ஐ.நா அவையில் இந்தியப் பிரதிநிதியாகவும் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# கேரளாவில் கந்துவட்டிக் கொடுமையால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் தற்கொலை



(கேரளா)

கேரளாவில் கந்து வட்டி கொடுமையால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் விஷ ஊசி போட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் பொன்குன்னம் பகுதியைச் சேர்ந்தவர் பிஜு (வயது-38). பாலா நகரில் இரும்பு கடையில் வேலை செய்து வருகிறார். இவரது மனைவி மனு (வயது-32).

இவர்களுக்கு மணிக்குட்டி (வயது-10), உன்னிகுட்டி (வயது-5) ஆகிய 2 பெண் குழந்தைகள் இருந்தனர். பிஜுவுடன் அவரது தாய் பொன்னம்மாள் (வயது-65) என்பவரும் வசித்து வந்தார்.

நேற்றுக் காலை வழக்கம் போல் பிஜு வேலைக்கு சென்று விட்டார். வேலை முடிந்ததும் இரவு 11 மணிக்கு வீடு திரும்பினார். வீட்டில்வந்து பார்த்தபோது லைட்போடாமல் இருட்டில் இருந்தது.

சந்தேகம் அடைந்த பிஜு கதவை திறந்து பார்த்தபோது தாய், மனைவி மற்றும் 2 பெண் குழந்தைகள் ஆகியோர் இறந்து கிடந்தனர். அதிர்ச்சியடைந்த அவர் கதறி அழுதார்.

இது குறித்து பொன்குன்னம் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை நடத்தினர்.

இறந்து கிடந்தவர்கள் அருகில் ஒரு விஷப்போத்தலும் ஊசியும் இருந்தது. குழந்தைகளை விஷ ஊசி போட்டு கொன்றுவிட்டு அதே ஊசி மூலம் மனுவும் பொன்னம்மாளும் தற்கொலை செய்தது தெரியவந்தது. (7)

# ஈராக்கில் ...

# 6 போரா...



(திக்ரித்)

ஈராக்கில் முன்னாள் எம்.பி. வீட்டில் நிகழ்ந்த தற்கொலைப்படைத்...

# அடுக்குமா... 5 பேர் உ...

(மும்பை)

மும்பையின் கிழக்கு நகர் தாதர் பகுதியில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

கிழக்கு ஹின்மாடா திரையரங்குக்கு அருகே அமைந்துள்ள கிரிஸ்டல் டவர் அடுக்குமாடி குடியிருப்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை குறித்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த 20 தீ அணைப்பு வாகனங்கள் தீயை கட்டுகள் கொண்டுவரும் பணியில் தீவிரம் அடைந்தன.

# கேரளாவில் மீட்புப் ப... வீரர்களுக்கு நன்றி ...



(கேரளா)

கேரளாவில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட வீரர்களுக்காக நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி நடத்தப்படவுள்ளது.

அண்மையில் நிலவிய சீரற்ற

# ல் தற்கொலைத் தாக்குதல்
# ாளிகள் உடல் சிதறிப் பலி!



தாக்குத லில் சன்னி இனத்தைச் சேர்ந்த பழங்குடி போராளிகள் 6 பேர் உடல் சிதறிப் பலியாகி னர். 7 பேர் படுகாயம் அடை ந்தனர்.

ஈராக் நாட்டில் சலாகுதீன் மாகாணத்தின் தலைநகரான திக்ரித்துக்கு வடக்கே சிர்கத் நகரம் உள்ளது. இதையொட்டிய ஆஸ்திரா என்ற கிராமத்தில், அந்த நாட்டின் முன்னாள் எம்.பி. அத்னன் அல் கானத் வீடு உள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை நேரம், இடுப்பில் வெடிகுண்டுகள் பொருத்திய 'பெல்ட்' அணிந்து வந்த தற்கொலைப்படை பயங்கரவாதி ஒருவர், அங்கு சென்று குண்டுகளை வெடிக்க வைத்தார். பலத்த சத்தத்துடன் குண்டுகள் வெடித்து சிதறின.

இதில் அங்கு இருந்த சன்னி இனத்தைச் சேர்ந்த பழங்குடி போராளிகள் 6 பேர் உடல் சிதறிப் பலியாகினர். 7 பேர் படுகாயமடைந்தனர். (7)

## பாகிஸ்தான் ஜனாதிபதித் தேர்தல்

# ஆளும் கட்சிக்கு எதிராக கைகோர்க்கும் ஆண்ட கட்சிகள்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஜனாதிபதி பதவிக்கு நடக்க உள்ள தேர்தலில் பிரதமர் இம்ரான் கான் நிறுத்தியுள்ள வேட்பாளரை எதிர்த்து, நவாஸ் ஷெரீப் மற்றும் பிலாவல் பூட்டோ கட்சி பொது வேட்பாளரை நிறுத்த முடிவு செய்துள்ளது.






பாகிஸ்தானின் தற்போதைய ஜனாதிபதி மம்னூன் உசைனின் பதவிக்காலம் வரும் செப்டெம்பர் மாதத்துடன் முடிவடையவுள்ளது. இதனால், செப்டெம்பர் 4 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்த அந்நாட்டு தேர்தல் ஆணையம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அண்மையில் பிரதமராக பதவியேற்ற இம்ரான் கான் தனது பிடிஐ கட்சியின் மூத்த தலைவர் ஆரிப் அல்வியை வேட்பாளராக நிறுத்தியுள்ளது. அவருக்கு பல்வேறு சிறிய கட்சிகள் ஆதரவு அளிக்க முன்வந்துள்ளன.

இந்நிலையில், பாகிஸ்தானின் முன்னாள் ஆண்ட கட்சிகளான நவாஸ் .ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி, பிலாவல் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி இணைந்து ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்த முடிவு செய்துள்ளன. (7)

# மாடிக் குடியிருப்பில் தீ உடல் கருகி உயிரிழப்பு!

ாதர் மாடி தில் ... யர ரிஸ் யில் மை ற்பட் ... ற்கு கள் ணி



கிரிஸ்டல் டவரின் 12 ஆவது தலத்தில் தீ விபத்து ஏற்பட்டதையடுத்து அங்கு சிக்கியவர்களை மீட்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

தீ விபத்தின் காரணமாக குடியிருப்பின் மாடிப்படிகள் முழுவதும்புகை மண்டலமாக காட்சியளித்தது. தீ விபத்தில் சிக்கியவர்கள் கிரேன்கல் மூலம் மீட்கப்பட்டனர். சிலருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ள நிலையில் அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (7)

## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முறைகேடு

# சொந்த ஆதாயத்துக்காக சட்டத்தரணி பொய்க் கதைகளை அவிழ்த்து விடுகிறார்

### ட்ரம்ப் பாய்ச்சல்

சொந்த ஆதாயத்துக்காக தேர்தலில் முறைகேடு நடந்ததாக சட்டத்தரணி கோஹன் கட்டுக்கதைகளை அவிழ்த்து விடுவதாக டொனால்ட் ட்ரம்ப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அமெரிக்காவில் 2016 ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி ஜனாதிபதித்தேர்தல்நடந்தது. ஹிலாரி கிளின்டனும், ட்ரம்பும் போட்டியிட்டதில் ட்ரம்ப் வெற்றி பெற்றார்.

தேர்தலின்போது ட்ரம்பின் மீது பல பெண்கள் பாலியல் குற்றச்சாட்டுகளை கூறினார்கள். அவ்வாறு புகார்கூறிய பெண்களுக்கு பணம் கொடுத்து அவர்களை அமைதிப்படுத்தியதாகவும் கூறப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் அப்போது ட்ரம்பிடம் சட்டத்தரணியாக இருந்த மைக்கேல் கோஹன் செய்ததாகவும் கூறினார்கள்.

இந்த நிலையில் மைக்கேல்கோஹன்மீதுநியூயோர்க் நீதிமன்றில் இதுசம்பந்தமாக வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, மைக்கேல் கோஹன் பெண்களுக்கு பணம் கொடுத்தது உண்மை என்று கூறினார். இதுசம்பந்தமாக ட்ரம்ப் கருத்து வெளியிட்டுள்ளார். அவர் கூறியதாவது,

மைக்கேல் கோஹன் என்மீது உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக தவறான குற்றச்சாட்டுகளைக் கூறுகிறார். அவர் தனக்கு ஆதாயம் கிடைக்க வேண்டும் என்பதற்காக இப்படி கட்டுக்கதைகளை கூறி வருகிறார்.

சில பெண்களுக்கு எனது பெயரில் பணம் கொடுத்தது உண்மை தான். ஆனால் அதற்கும் தேர்தல் பிரசாரத்திற்கும் சம்பந்தம் இல்லை. எனவே நான் தேர்தல் விதிகளை மீறியதாக கூற முடியாது. இவ்வாறு அவர் தெரிவித்தார். (7)

## புப் பணிகளில் ஈடுபட்ட ன்றி தெரிவிக்கும் விழா

காலநிலை காரணமாக, கேரள மாநிலம் முழுவதும் வெள்ளத்தால் சூழப்பட்ட நிலையில், பல இலட்சம் மக்கள் பாதிப்படைத்திருந்தனர்.


இந்நிலையில் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்து மீட்புக் படையினர், முப்படையினர் எனப் பலர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக ஒகஸ்ட் 26 ஆம் திகதி நிகழ்ச்சி ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

மேலும் ஏனைய நாடுகள் நல்லெண்ண அடிப்படையில் நிதியுதவி வழங்கினால் மத்திய அரசு அதனை ஏற்க வேண்டும் எனவும் அது தொடர்பில் 2016 தேசிய பேரிடர் மேலாண்மை கொள்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் முதல்வர் தெரிவித்தார். (7)

# எங்கள் வளங்களை கைப்பற்ற விரும்பும் இராணுவ சக்திகளுக்கு எதிராகப் போராட வேண்டும்

# ஈரான் ஜனாதிபதி உறுதி



(தெஹ்றான்)

மத்திய கிழக்கில் இடம் பெறும் மோதல்கள் தொடர்பான அமரிக்காவுடனும் பிராந்திய போட்டியாளர்களுடனும் அதிகரித்துவரும் பதற்றங்களுக்கு மத்தியில் ஈரான் கடந்த செவ்வாய்க் கிழமை புதிய போர் விமானம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

கௌஸர் (Kowsar) என அழைக்கப்படும் இந்த போர் விமானம் முற்று முழுதாக ஈரானிலேயே தயாரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பல்வேறு ஆயுதங்களை சுமக்கும் திறனுடனும் குறுகிய வான்வழி ஆதரவுப் பணிகளுக்காவும் பயன்படுத்தப்படும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அதுமட்டுமின்றி, அமெரிக்காவின் எப்-5 விமானத்துக்கு நிகராக தயாரிக்கப்பட்டுள்ள இந்த போர் விமானம், ஈரானின் இராணுவ வலிமையை உயர்த்திக் காட்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தெஹ்றானில் நடைபெற்ற போர் விமான அறிமுக விழாவை மாநில தொலைக்காட்சி ஊடகம் ஒன்று நேரடியாக ஒளிபரப்பு செய்தது.

இந்நிலையில தேசிய பாதுகாப்புத்துறை நாள்நேற்று முன்தினம் புதன்கிழமை ஈரானில் கொண்டாடப்படும் நிலையில் கருத்துரைத்த ஈரானிய ஜனாதிபதி ஹசன் ருகானி, 'இஸ்லாமிய குடியரசின் இராணுவ வலிமை வோஷிங்டனைத் தாக்குவதற்குத் தடையாக இருந்தது.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் கீழான அமெரிக்கா அதன் சொந்த நட்பு நாடுகளிலிருந்தும் தனிமைப்படுத்தப்பட்டு வருகிறது.

எமது பிராந்தியத்தையும் எங்கள் வளங்களையும் கைப்பற்ற விரும்பும் இராணுவ சக்திகளுக்கு எதிராக நாம் போராட தயாராக இருக்க வேண்டும்' என்று தெரிவித்துள்ளார்.

மேலும், ஈரானின்வலிமை காரணமாகவும் விளைவுகளை அறிந்திருப்பதாலுமே அமெரிக்கா ஈரானை தாக்குவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (7)

# நிறைவேற்றதிகார ஜனாதிபதியால் நாடாளுமன்று பெறுமதியிழந்தது

## நிதி இராஜாங்க அமைச்சர் எரான் தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையினால் நாட்டின் நாடாளு மன்றம் பெறுமதியிழந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிர மரட்ன தெரிவித்துள்ளார்.



ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியா ளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், "புதிய அரசியல் அமைப்பில் அமைச்சர்களின் எண் ணிக்கை கட்டாயம் வரை யறுக்கப்பட வேண்டும்.

அமைச்சர்கள் எண் ணிக்கை வரையறை குறி த்து கல்லில் எழுதப்பட வேண்டும். அப்போதுதான் அந்த எண்ணிக்கையில் மாற்றம் இருக்காது.

2020 ஆம் ஆண்டு தேர் தலில் வெற்றியீட்டி நாடா ளுமன்றை வலுப்படுத்து வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அர்ப்பணிப்புடன் செயற்படும்" என அவர் மேலும் தெரிவித் தார். (இ-7)

# அம்பாந்தோட்டை, கொழும்பு துறைமுகங்களில் ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் நேரில் ஆய்வு





(கொழும்பு)

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜப் பானிய பாதுகாப்பு அமை ச்சர் இட்சுனோரி ஒனோ டெரா நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு துறைமுகங்க ளுக்குச் சென்று பார்வை யிட்டார்.

சீன நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அம்பாந் தோட்டை துறைமுகத்துக்கு ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் சென்ற போது, அவருடன் செய்தியாளர்கள் எவரும் உள்ளே அனுமதிக் கப்படவில்லை.

பலத்த பாதுகாப்புடன் அம்பாந்தோட்டை துறை முகத்துக்குச் சென்ற ஜப் பானிய பாதுகாப்பு அமை ச்சர் அங்குள்ள நிலை மைகளை நேரில் பார்வை யிட்டதுடன், துறைமுகத்தின் செயற்பாடுகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டார்.

அதேவேளை, கொழும்பு துறைமுகத்துக்கும் சென்று அதன் செயற்பாடுகள், முன் னேற்றங்களையும் ஜப்பா னிய பாதுகாப்பு அமைச்சர் ஆய்வு செய்தார்.

இதன்போது, இந்த ஆண்டின் முதல் காலா ண்டில், அதிக வளர்ச்சி வீதத்தை எட்டிய உலகின் முன்னணித் துறைமுகங் களில் கொழும்பு துறை முகம் இடம்பிடித்துள்ளதாக இலங்கை துறைமுக அதிகார சபையின் தலை வர் பராக்கிரம திச நாயக்க தெரிவித்தார்.

ஜப்பானின் நிதியுதவி யு டன் கட்டப்பட்ட ஜெயா கொள் கலன் முனையம், கொழு ம்பு துறைமுகத்தின் 80 வீத வருமானத்தை ஈட்டித் தருவ தாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஜனாதிபதி, பிரதமர் தேவையில்லை

## கூட்டு எதிரணி கூறுகிறது

(கொழும்பு)

நாட்டுக்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச் சர்கள் தேவையில்லை என மலையக தேசிய முன்ன ணியின் தலைவரும் கூட்டு எதிர்க்கட்சியின் தமிழ்ப் பிரிவு பொறுப்பாளருமான கலாநிதி ரிஷி செந்தில்ராஜ் தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க் கட்சிகளின் தலைமையகமான நெழும் மாவத்தையில், "ஜன பலய கொழம்பட்ட" (கொழும்பிற்கு மக்கள் பலம்) என்ற தொனிப்பொருளில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளி யிட்ட போதே அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரி விக்கையில்,

நாட்டில் எந்தவொரு பிரச் சினை நடந்தாலும் ராஜ பக்ஷ ஆட்சியே அதற்குப் பொறுப்பு. இது கூட்டு எதிர்க் கட்சியின் சதி வேலை என்று நல்லாட்சி அரசாங்கம் குற்றம் சுமத்தி வருகின்றது.

உண்மையில் எல்லா வற்றுக்கும் எம்மீது குற்றம் சுமத்தும் இவ்வாறான ஓர் நிலையில், நாட்டில் ஜனா திபதியொருவர், பிரதமர் ஒருவர் மற்றும் அமைச் சர்கள் தேவைதானா?

இந்த நல்லாட்சி அர சாங்கம் நாட்டு மக்கள் குறித்து கரிசனை கொள் ளாது, வெளிநாடுகளுக்கு நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்து வரு கின்றது.

இலங்கை வரலாற்றில் இந்தளவிற்கு அதிகளவான தொழிற்சங்கப் போராட் டங்கள் எந்தக் காலத்திலும் இடம்பெற்றதில்லை. தற் போதைய ஜனாதிபதி ஆச் சரியமான கருத்து ஒன்றை தெரிவித்து வருகின்றார்.

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அமைச்சராக இருந்த காலத்தில் முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமக்கு வேலை செய்ய விடவில்லை என குற்றம் சுமத்தினார்.

தற்பொழுது ஜனாதிபதி யாக பதவி வகிக்கும் நிலை யில், அமைச்சர்களினால் தம்மால் சிறந்த முறையில் சேவையாற்ற முடியவில்லை என்று கூறுகின்றார். இது ஆச்சரியமான கதையல் லவா?

இந்த அரசாங்கம் நுட் மான முறையில் பொருட் களின் விலைகளை அதி கரித்து வருகின்றது. கொஞ் சம் கொஞ்சமாக பொருட் களின் விலையை உயர்த்தி மக்களின் மீது சுமைகளை திணிக்கின்றது. இந்த அரசா ங்கத்தின் பயணம் ஆரோக் கியமானதல்ல.

நாட்டில் தற்பொழுது மக்களுக்கு விரோதமான ஆட்சி நடத்தப்படுகின்றது என்பதனை உலகிற்கு உணர்த்தும் நோக்கில் கூட்டு எதிர்க்கட்சியில் அங் கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் இணைந்து இலட்சக்கணக்கான பொது மக்களை அடுத்த மாதம் 5 ஆம் திகதி கொழும்பிற்கு அழைத்து வந்து போராட்டம் நடத்துவோம்.

பெருந்தோட்டத் தொழி லாளர்களின் சம்பளங்கள் உயர்த்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படும் என அவர் மேலும் தெரி வித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## உறவென்ன வியாபாரமா?

மனித இனம் வரவர ரொம்பத்தான் கணக்குப் பார்க்க ஆரம்பித்து விட்டது. ஒவ்வொரு தனிமனிதனும் சரி, தொழி லால் நல்ல வியாபாரியோ இல்லையோ நட்பிலும் உறவிலும் பக்கா வியாபாரியாக இருக்கிறான்.

பெற்றோர், மனைவி, பிள்ளைகள், இரத்தவழிச் சொந்தம் என்று எல்லோர் விடயத்திலும் ரொம்பத்தான் வியாபாரி போல நடந்து கொள்கிறான்.

தாய்வழிச் சொந்தம் என்றால் ஒரு கணக்கு, அண்ணன், தம்பி, கூடப் பிறந்த சகோதரிகள் என்றால் ஒரு கணக்கு; எட்டச் சொந்தம் என்றால் அதற்கொரு கணக்கு என்று தனித்தனிப் பேரேடுகளை வைத்துக் கொண்டு எதையும் மகா கெட்டிக்காரத் தனத்துடன் கைதேர்ந்த வியாபாரியைப் போல் அவர்களை அணுகுகிறான்.

இவர்களுக்கு இதைச் செய்வதால் நமக்கு என்ன இலாபம் என்று கணக்குப் போடும் மனிதர்கள் இன்று அதிகம்.

ஆமாம், மனிதர்களின் இதயங்கள் காற்றுப் பிடுங்கப்பட்ட பலூன்களாய் சுருங்கிப் போய்விட்டன.

இந்த அரக்கக் கும்பலில் நாமும் சேர்ந் துவிடக் கூடாது என்பது முக்கியம்.

"என் வீட்டுத் திருமணத்திற்கு அவள் முதல் நாள் வரவில்லை; முகூர்த்த நேர த்தின் போது தான் வந்தாள்" என்கிறாள் ஒருத்தி. இத்தனைக்கும் கூடப் பிறந்த சகோதரி,

"அவன் எனக்கு 50 ரூபாய் மதிப்புள்ள பொருளைத்தான் என் வீட்டுக் கிரகப் பிர வேசத்திற்கு கொடுத்தான். நானும் ஐம்பது ரூபாய் பொருள்தான் கொடுப்பேன்" என் கிறார் ஒருவர்.

"எங்கள் ஊருக்கு வந்ததும் என் வீட்டிற்கு வரவில்லை. எனவே நானும் அவன் ஊருக்குப் போனாலும் அவன் வீட்டிற்குப் போக மாட்டேன்" என்று சீறு கிறார் ஒருவர்.

சிறு சொத்திற்காக கூடப் பிறந்தவர்க ளுடன் சண்டை. தன் பங்கில் சல்லிச் காசு குறையக்கூடாது என்று நினைக்கும் மனோபாவம். இப்படி மனிதர்கள் கணக் குப் பார்த்துப் பார்த்து உறவினரிடமிருந்து விலகிவிலகிப் போய்க்கொண்டே இருக் கிறார்கள்.

உறவு என்பது இயற்கை கட்டிப் போட்ட அந்தச் சங்கிலியைத் தங்கச் சங்கிலியாக கருதுவதும் விலங்காக எண்ணுவதும் நம் பார்வையிலும் நம் அணுகுமுறையிலும் தான் இருக்கின்றன. மீண்டும் நாம் ஒரே தாயின் வயிற்றில் உருவாகப் போவ தில்லை; இயற்கை இணைத்த இந்தப் பந்தத்தை முடிந்தவரை காப்பாற்றிக் கொள் வோம்.

தொழிலில் கறாராகக் கணக்குப் பார்க் கலாம், தவறில்லை. உறவுக்குள் அது வேண்டாமே!

லேனா தமிழ்வாணன்

# திருமகளே வா... வா...

## வரம் தர வரும் வரலட்சுமி விரதம் இன்று

இன்று வெள்ளிக்கிழமை எல்லோருக்கும் அதிர்ஷ்ட கிழமையாக அமையப் போகிறது. ஆம்... இன்று தான் திருமகள் நம் இல்லம் தேடி வரப்போகிறாள். இன்றைய தினம் வரலட்சுமி விரதத்தை கடைப்பிடிப்பதன் மூலம் வாழ்வில் எல்லாவித ஐஸ்வர்யங்களையும் நாம் பெறலாம்.




மணமான ஒரு பெண் வரலட்சுமி விரதம் இருப்பதால் அவளது கணவனின் ஆயுள் அதிகரிக்கும். கன்னிப் பெண்களுக்கு விரைவிலேயே திருமணம் நடக்கும். அள்ள, அள்ள குறையாமல் செல்வம் பெருகும் என்பது இந்துக்களின் நம்பிக்கை.

வரலட்சுமி விரதம் இருந்த சாதாரண பெண் ஒருத்தி நாட்டுக்கே ராணி ஆனது பற்றியும், இந்த விரதத்தை மேற்கொள்ளாத ஒரு நாட்டின் ராணி மிகவும் ஏழை ஆனது பற்றியும் கூறுகிறது பத்மபுராணம்.

சிறப்புமிக்க இந்த வரலட்சுமி விரத பூஜை செய்வது எப்படி? அதுபற்றி இனி...

**தோரணம்:-** பூஜைக்கு முதல் நாளன்று வீட்டை நன்றாக தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். பிறகு அவரவர் வீட்டு வழக்கப்படி அம்மன் கலசத்தை தாமிரச் செம்பிலோ அல்லது வெள்ளியால் ஆன செம்பிலோ வைக்கலாம். இந்தச் செம்பை மரத்தால் ஆன சிறிய பீடம் அல்லது சிறிய மேஜை மீது வைத்து இருபுறமும் வாழை மரக்கன்றுகளை கட்டிக் கொள்ள வேண்டும். மாவிலை தோரணமும் கட்டுவது நல்லது.

தொடர்ந்து செம்பின் அடிப்பகுதியில் சிறிது சுண்ணாம்பைத் தடவிக்கொள்ள வேண்டும். செம்பின் மீது சந்தனத்தை அரைத்து பூச வேண்டும். விரும்பினால் இந்த சந்தனத்தின் மீது நகைக்கடைகளில் கிடைக்கும் வரலட்சுமி அம்மனின் முகத்தை வாங்கி பதிய வைக்கலாம்.



கலசத்தின் உள்ளே தேவையான அளவு அரிசியை இட்டு வைக்க வேண்டும். இப்படி செய்வதால் இந்த அரிசியானது அட்சயமாக (நிறைவாக) வளரும் என்பது நம்பிக்கை.

**மஞ்சள்-குங்குமம்:-** கலசம் தயார் ஆனவுடன் அதன் மேல் தேங்காயை வைத்து அதற்கு மஞ்சள் பூசி குங்குமப் பொட்டு இட வேண்டும். தேங்காயுடன் வெளியே தெரியும் படி 5 மாவிலைகள், 5 தாழம்பூ மடல்கள் ஆகியவற்றை கலசத்தை சுற்றி செம்பினுள் செருகி வைக்க வேண்டும். தாழம்பூ மடல்கள் கிடைத்தால் மாத்திரம் பயன்படுத்தினால் போதும்.

வாழையிலையில் பச்சரிசியை பரப்பி அதன்மீது அலங்கரிக்கப்பட்ட செம்பை வைக்க வேண்டும். இவற்றை எல்லாம் முதல் நாள் மாலையிலேயே தயார் செய்து விட வேண்டும். வசதி வாய்ப்பு உள்ளவர்கள் பூஜை மண்டபத்தை சுற்றி மின்விளக்கு அலங்காரமும் செய்து கொள்ளலாம். இது இன்னும் அழகாக இருக்கும்.

வரலட்சுமி விரதம் அன்று பூஜையை ஆரம்பிக்க வேண்டும். விரதம் இருக்கும் பெண்கள் அன்று காலையிலேயே எழுந்து மஞ்சள் பூசி குளித்து மங்களகரமாக இருக்க வேண்டும். பூஜை மண்டபத்தில் வரலட்சுமி அம்மன் படத்தை கிழக்கு முகமாக வைக்க வேண்டும். பூஜை செய்பவர் வலது புறமாக இருந்து பூஜை செய்ய வேண்டும்.

நிவேதனமாக சாதம், பாயாசம், வடை, கொழுக்கட்டை, இட்லி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை வைத்துக் கொள்ளுங்கள். வசதியானவர்கள் இந்த எல்லா நிவேதன பொருட்களையும் வைத்துக் கொள்ளலாம். தொடர்ந்து ஐந்து முக விளக்கேற்றி பூஜையை ஆரம்பிக்க வேண்டும். அப்போது ''எங்கள் வீட்டில் எழுந்தருளியிருக்கும் வரலட்சுமியே எங்கள் இல்லத்தில் நிரந்தரமாக குடியேறி எல்லா ஐஸ்வர்யங்களும் அருள்வாயே...!'' என்று போற்றி மனம் உருக வேண்டுங்கள்.

கேட்ட வரம் தரும் வரலட்சுமி உங்கள் இல்லத்திலும் குடியேறுவாள். உங்கள் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருவாள்.

பூஜையில் மஞ்சள் பூசிய நோன்பு சரடை வைத்த மணமான பெண்கள் அதை தங்கள் கணவன் கையால் கழுத்தில் கட்டிக்கொள்ளலாம். பூஜையில் பங்கேற்கும் திருமணம் ஆகாத கன்னிப் பெண்கள் எப்படிப்பட்ட கணவனை விரும்புகிறார்களோ அந்த கோரிக்கையை முன்வைத்து வரலட்சுமியை வழிபடலாம். அவர்கள் கேட்ட வரத்தை அப்படியே அருள்வாள் அவள்.

பூஜை முடிந்த பின் அன்று மதியம் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்குவது இன்னும் சிறப்பைத் தரும்.

**எளிய பூஜை:-** அன்று மாலையோ அல்லது மறுநாள் காலையோ வரலட்சுமி அம்மனுக்கு எளிமையான ஒரு பூஜை செய்துவிட்டு அலங்காரத்தை கலைத்துக் கொள்ளலாம். பூஜைக்கு பயன்படுத்திய பச்சரிசி, தேங்காய் போன்றவற்றை கொண்டு அடுத்த வெள்ளிக்கிழமை பாயசம் செய்து நைவேத்தியம் செய்யலாம்.

இப்படித் தான் வரலட்சுமி பூஜை செய்ய வேண்டும்.

நீங்களும் வரலட்சுமி விரதம் இருந்து பூஜை செய்யுங்கள். எல்லா ஐஸ்வர்யமும் பெறுங்கள்.

# நிதிமோசடி, இலஞ்ச ஊழல் குறித்த விசேட மேல் நீதிமன்றத்தின் முதலாவது அமர்வு இன்று

(கொழும்பு)

**நிதி மோசடி மற்றும் இலஞ்ச ஊழல் குறித்து விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட விசேட மேல் நீதிமன்றத்தின் முதலாவது அமர்வு இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும். முதலாவது வழக்கு விசாரணையாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அலுவலக பிரதம அதிகாரி மற்றும் ஏனைய மூவருக்கு எதிராக விசாரணை இடம்பெறும்.**

இவ்விசாரணைக்கு ஆஜராகுமாறு சந்தேக நபர்களுக்கு ஏற்கனவே அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

லிட்ரோ ஹாஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான 500 மில்லியன் ரூபாய் பணத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாக, பணச்சலவைச் சட்டமூலத்தின் கீழ் இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் முதலாவது விசாரணையாக இந்த விசாரணை இடம்பெறுகிறது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகளான சம்பத் விஜேரத்ன, சம்பத் அபேகோன் மற்றும் ஜானகி ராஜரத்ன ஆகியோர் அடங்கிய அமர்வின் முன் இந்த விசாரணை இடம்பெறும்.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பான வழக்கு கிடப்பில் போடப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு வந்த நிலையில், அவற்றை துரித கதியில் விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்கும் முனைப்பில் விசேட நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

புதுக்கடை நீதிமன்ற கட்டடத் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேல் நீதிமன்றத்தை, நீதியமைச்சர் தலதா அத்துகோரல கடந்த 21 ஆம் திகதி திறந்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பொதுப் போக்குவரத்துத் துறையை தனியார் மயப்படுத்த முயற்சி-சுனில்

(கொழும்பு)

மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக் களத்தின் போக்குவரத்து சோதனை பிரிவை தனியார் மயப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக ஜே.வி.பி குற்றம் சாட்டியுள்ளது.

முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, வெலிகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்தார். அனைவரும் தனியாக வாகனங்களை வைத்துக் கொள்ள முடியும். அது நல்லது.

எனினும், நாட்டில் பொதுப் போக்குவரத்து வலுவானதாக இருக்க வேண்டும்.

பொதுப் போக்குவரத்தை வலுவடையச் செய்ய வேண்டியது போக்குவரத்து அமைச்சரின் கடமை.

எனினும் அவர், தற்போது பொது போக்குவரத்து துறையை தனியார் மயப்படுத்தும் செயற்பாடுகளில் தான் ஈடுபடுகிறார்.



இது உடன் தடுக்கப்பட வேண்டும் எனவும் சுனில் ஹந்துன்நெத்தி மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆற்றிலிருந்து 3 வயது சிறுவன் சடலமாக மீட்பு

(ஹற்றன்)

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகாவலி பிரதான ஆறறுக்கு நீர்வழங்கும் கிளை ஆறானா ரொத்தஸ் பகுதியிலுள்ள ஆற்றிலிருந்து சிறுவன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹற்றன் ரொத்தஸ் பகுதியைச் சேர்ந்த ஸ்ரீதரன் சதீஸ் என்னும் 3 வயதும் 11 மாதங்களுமான சிறுவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளான். குறித்த சிறுவன் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்த வேளையில், அருகில் இருந்த ஆற்றில் தவறி விழுந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

காணாமல்போன சிறுவனை தேடும் பொழுது சிறுவனின் செருப்பு ஆற்றுக்கு அருகில் இருந்ததைக் கண்டு ஆற்றுப்பகுதியில் உறவினர்களால் தேடும் பொழுது சிறுவன் விழுந்த தூரத்திலிருந்து அடித்துச் செல்லப்பட்டு 100 மீற்றர் தூரத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளான். (இ-7)

# புதிதாக சமுர்த்தி நிவாரணம் கோரி 5 இலட்சத்துக்கும் அதிகமான விண்ணப்பம்

(கொழும்பு)

புதிதாக சமுர்த்தி நிவாரணம் கோரி 5 இலட்சத்துக்கும் அதிகமான விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜே.தடல்லகே தெரிவித்துள்ளார்.

குறித்த விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்துள்ளவர்களின் தகைமை குறித்து ஆராயும் நடவடிக்கை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், தகைமையுடைய ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு அடுத்த மாதத்திற்குள் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தற்போது 13 இலட்சத்துக்கும் அதிக குடும்பங்கள் சமுர்த்தி நிவாரணம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 5000 கண்ணீர்ப்புகைக் குண்டுகளை இறக்குமதி செய்துள்ள பொலிஸார்

(கொழும்பு)

இலங்கை பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை இறக்குமதிசெய்துள்ளனர்.

நாட்டில் இடம்பெற்று வரும் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கலகத் தடுப்புப் பொலிஸார், கண்ணீர புகைக் குண்டுகளை இறக்குமதி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இருப்பில் உள்ள கண்ணீர் புகைக் குண்டுகளுக்கு மேலதிகமாக சுமார் 5000 கண்ணீர புகைக் குண்டுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரியொருவர் கொழும்பு பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

கண்ணீர புகைக் குண்டுகளுக்கு மேலதிகமாக முகத்தை மூடக் கூடிய நவீன ரக தலைக்கவசங்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. (இ-7)

# மக்களின் உரிமையை உறுதிப்படுத்தும் புதிய வேலைத்திட்டம் முன்னெடுப்பு

(கொழும்பு)

மக்களுக்கென அமைச்சுக்கள் வழங்கிய நலன்புரி நடவடிக்கைகளை ஒன்றிணைக்கும் புதிய வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதாரத் திட்டமிடல் அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர்.எச்.டபிள்யூ குமாரசிறி இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்களின் உரிமையை மேலும் உறுதிப்படுத்தும் நோக்கில்இந்த புதியவேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பல்வேறு அமைச்சுக்கள் மேற்கொள்ளும் நலன்புரி நடவடிக்கைகள் சிறந்த முறையில் ஒருங்கிணைக்கும் நோக்கமாகவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, மக்களுக்கென அமைச்சுக்கள் வழங்கிய நலன்புரித் திட்டங்கள் மக்களை சரியான முறையில் சென்றடைவதில்லை எனத் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வந்தன.

இந்தநிலையில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதாரத் திட்டமிடல் அமைச்சின் குறித்த வேலைத்திட்டத்தின் ஊடாக, மக்களுக்கு நலன்புரித் திட்டங்கள் சரியான முறையில் சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)

# தேர்த்திருவிழாவை முன்னிட்டு நாளை பண்ணிசையரங்கு

அனலைதீவு தெற்கு புளியந்தீவு நாகேஸ்வரர் (சிவன்) கோயில் தேர்த் திருவிழா நாளை 25 ஆம் திகதி முற்பல் 10.45 மணியளவில் நடைபெறும்.

அன்றையதினம் சுவாமி தேரில் ஆரோகணித்த வேளை முதன்மை மண்டபத்தில் "பண்ணிசைப் பாவலன்" க.லோகேஸ்வரனின் பண்ணிசையரங்கு பக்கவாத்திய சகிதம் இடம்பெறும். (இ)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 4 விதி எண் 6

இராகு சுக்கிரன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கலைகளின் பிறப்பிடமாகத் திகழ்வார்கள். தன்னம்பிக்கை மிகுந்த இவர்கள் தைரியசாலிகளாக செயற்படுவார்கள். பிறரைக் கவரும் காந்தசக்தி உடையவர்கள். கேட்பவரைத் தன்வயப்படுத்தும் பேச்சாளர்கள் இவர்கள். அழகான பொருட்களையே மனம் நாடிச் செல்லும். பிறரைப் பல கோணங்களில் மகிழ்வித்துப் பொருள் சேர்க்கும் தொழில் செய்வார்கள். தன்னுடைய மனம் விரும்பியதைச் செய்வார்கள். மனைவியால் ஏற்றமுண்டாகும். உலக சுகங்களை அனுபவிக்க ஆர்வமிருக்கும். தனது மனம் விரும்பியதைச் சாதிப்பார்கள். சிறந்த கற்பனை வளமிக்கவர்கள். பொதுக்காரியத்தை முன்னின்று நடத்திப் பெரும் புகழ் சேர்ப்பார்கள். பேச்சில் வசீகரமிருக்கும். இசை, இலக்கியம், நடனம், விளையாட்டுத் துறை சிறப்புடையதாக இருக்கும். தன்னுடைய வீட்டை அழகுடையதாக வைத்துக் கொள்வார்கள்.

அரசியல் அறிவு உடையவர்கள். நல்ல வாழ்க்கைத் துணையால் வாழ்க்கையில் வசந்தம் வீசும். சுதந்திரப் பிரியர்கள். நல்ல அனுபவசாலிகள். மனதில் உள்ளதை வெளிப்படையாகப் பேசுவார்கள். குழந்தைகள் மீது பாசமுடைய நபர்கள். நடை, உடை, பாவனைகளில் கவர்ச்சியிருக்கும். நறுமணப் பொருட்களைப் பூசிக் கொள்வார்கள். வாசனைத் திரவியத்தின் மீது பிரியம் உடையவர்கள். வண்ண மலர்களை ரசிப்பார்கள். சட்ட வல்லுநர்கள். அரசியல் இராஜதந்திரிகள். இவர்கள் மனம் எப்போதும் இன்பகரமாக இருக்கும். நல்ல அன்புள்ளம் கொண்டவர்கள். தன்னைச் சார்ந்தவர்களுக்கு உயர்ந்த வாழ்க்கை அமைய உறுதுணையாக இருப்பார்கள். ஆனால் ஒரு வேலை செய்து கொண்டிருக்கும் போதே பாதியில் விட்டுவிட்டு அடுத்த காரியத்தில் இறங்கிவிடுவார்கள்.

சரீர பயிற்சிகள், தத்துவ ஆராய்ச்சிகள் செய்வார்கள். விஞ்ஞானிகள், சட்டத்தரணிகள், ஆன்மீகத் தலைவர்கள், கதாசிரியர்கள், பாடலாசிரியர்கள், சினிமா நடிகர்கள், இயக்குநர்கள், ஒளிப்பதிவாளர்கள், விளையாட்டு வீரர்கள், கடல் சார்ந்த வாணிகம் செய்பவர்கள், கம்பியூட்டர் வல்லுநர்கள் இந்த எண்ணில் பிறந்து சாதனை செய்கின்றார்கள். கலையின் கருவாக இருப்பார்கள். இளமையில் கடினமாக வாழ்க்கை வாழ்ந்த போதும் பின்வாழ்க்கையில் வசதியான வாழ்கை வாழ்வார்கள். சங்கீதம், நாட்டியம், வித்தைகள், சாகசங்களில் சிறந்தவர்கள். அறிவை உபயோகித்துப் பணம் சம்பாதிக்கும் தொழில் செய்வார்கள்.

பத்திரிகைத் தொழிலில் சிறந்த எழுத்தாளர்கள். மனோவசியம் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியில் மூழ்குவார்கள். சம்பாதிப்பதை விடவும் நல்ல பெயரெடுப்பதையே விரும்புவார்கள். சீர்திருத்தத் தொழில்களில் ஆர்வமிருக்கும்.

உயர்ந்த இலட்சியத்தோடு செயற்படுவார்கள். உதவி என்று தன் முன்னால் வந்தவருக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வீர்கள். அடிக்கடி வெளியூர் பிரயாணம் செய்து தொழில் விருத்திக்காக உழைப்பார்கள். புதிய விதமாகத் தெய்வங்களை வழிபடுவார்கள். எப்போதும் தனது குருநாதரை வணங்கிக் கொண்டே இருப்பார்




கள். புகழ்ந்து கொண்டே இருப்பார்கள்.

யோகம், மந்திரம், சந்நியாசம், ஞான சம்பந்தப்பட்ட விடயங்களில் அதிகமான ஈர்ப்பும் அவற்றில் மனம் ஒன்றி ஈடுபடுதலும் இருக்கும். வாழ்க்கையில் சரியான நேரத்தில் தகுதியான நபர்களின் ஆலோசனைகள் மூலம் உயர்வடைவார்கள். செல்வத்தைப் பாதுகாப்பார்கள். இரகசியம் காப்பார்கள். பலரிடம் விசாரித்து விட்டு தன்மனம் கூறும் விருப்பப்படியே செயற்படுவார்கள். சுவையான உணவினை விரும்பி உண்பார்கள். அதிகமான எண்ணிக்கையில் நண்பர்களைப் பெற்றிருப்பார்கள்.

இவர்களின் உதவிக்காக பலபேர் காத்துக் கொண்டிருப்பார்கள். ஜனவசிய சக்தி படைத்தவர்கள். எல்லாக் கலைகளையும் நன்கு அறிந்தவர்கள். நல்ல பண்புகளை உடையவர்கள். வீணான வெட்டிப்பேச்சினை விரும்ப மாட்டார்கள். எதையும் முன்னரே யூகித்தறியும் ஆற்றலுடையவர்கள். தான தர்மங்கள் செய்வதில் வல்லவர்கள். அழகான முகமும் வசீகரமான கண்களும் உடையவர்கள்.

எப்போதும் தூய்மையாகவே காட்சியளிப்பார்கள். அழகுபடுத்துவதில் தனித்திறமைவாய்ந்தவர்கள். மனம் குறுக்கு வழியை நாடிச் செல்லும். இதிலிருந்து விடுபட தெய்வ பலம் கைகொடுக்கும். சுகவாசிகள். சுதந்திரப் பிரியர்கள்.

யாரையும் எளிதில் கவரும் ஆற்றல் படைத்தவர்கள். அன்பிற்குக் கட்டுப்பட்டவர்கள். சுவையான உணவை விரும்பி உண்பார்கள். நண்பர்களிடம் விசுவாசமிருக்கும்.

இயக்க ஆற்றல் இருக்கும். பூரண சுதந்திரமே இவர்களின் குறிக்கோள். சீக்கிரத்தில் உணர்ச்சி வசப்படுவார்கள். சிறு சொல்லும் இவர் களை வெகுவாகப் பாதிக் கும். கற்பனையின் சிகரமாவார்கள். நல்ல வாழ்கைத் துணை அமையும். பெரியவர்களிடம் விசுவாசமிருக்கும். பரந்த மனப்பான்மை உடையவர்கள். மக்கள் சேவையும் செய்வார்கள். எளியவருக்கு உதவுவார்கள். அறிவு உள்ள இடத்தை உடனே அடையாளம் கண்டு கொள்வார்கள்.

அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
1, 10, 19, 28, 6, 15, 24.

துரதிர்ஷ்ட திகதிகள்
8, 17, 26, 3, 12, 21, 30.

அதிர்ஷ்ட நிறங்கள்
வெளிர் நீலம், மஞ்சள், பொன்னிறம், பச்சை.

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, சிவப்பு, இருண்ட நிறங்கள்.

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
கோமேதகம், நீலக்கல், மரகதம், அக்கோமரின், ஜேட், டெரிடாட்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்




சேரன், சோழன், பாண்டியன்

> "வரலாற்று ஆதாரங்கள் கிடைக்கப் பெறவில்லை என்ற காரணத்திற்காக, இக் காலப் பகுதியில், வடக்கு-கிழக்கு, வடமேற்கு பிரதேசங்களில், குறிப்பாகத் தமிழர் பிரதேசங்களில், அரசாட்சி நடைபெறவில்லை என்றோ, மத, மொழி, கலை, கலாசார, சமூக, பொருளா தார நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என்ற ஒரு முடிவுக்கோ வருவது தவறானதாகும்."

## ஓர் இருண்ட வரலாற்றுக்காலம் (கி.மு. 300-கி.பி. 900)

கி.பி.300களில் இருந்து கி.பி. 900 வரையுள்ள காலப்பகுதி, இலங்கைத் தமிழர்களின் வரலாறு பற்றி ஒரு தெளிவற்ற காலப்பகுதியாகக் காணப்படுகின்றது. இலங்கை வரலாறு, தென்னிந்திய, குறிப்பாகத் தமிழ்நாட்டு வரலாறு என்பன பற்றியும் இந்நிலைமையே பொதுவாக காணப்படுகின்றது.

இருந்தும் சிங்களமொழியின் பழைய வடிவமாகிய "ஹெள" என அழைக்கப்படும் (Hela) "எழு" (Elu) மொழியில் சிங்கள இனக்குழு பற்றிய பெயர் குறிக்கும் கல்வெட்டுக்கள் இக்காலப்பகுதியில் அநுராதபுரப் பகுதியில் காணப்படுகின்றன.

அதேபோன்று தமிழ் இனக்குழுவின் பெயராக 'தெமள' (Demela) என்ற பெயரும் இக்காலப்பகுதிக்குரிய கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

மேலும், இக்காலப் பகுதியில் எழுத்து மொழியாக இருந்த பிராகிருதம் மாற்றமடைந்து பழைய சிங்கள மொழியான ஹெள தோற்றம் பெற்று, வளர்ச்சி அடைந்தமையும் இக்காலப்பகுதிக்குரிய கல்வெட்டுக்களில் தமிழ்மொழி இடம் பெறுவதையும் காணமுடிகின்றது.

ஆனால் கி.பி.300-கி.பி.600க்கும் இடைப்பட்ட காலங்களில், அநுராதபுரப் பிரதேசத்தில் கல்வெட்டுகள் கிடைக்கப் பெற்ற பொழுதும் அநுராதபுரப் பிரதேசத்திற்கு வெளியே இன்று தமிழர்கள் பரந்து வாழும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மேற்படி காலத்துக்குரிய கல்வெட்டுகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அதனால், இக் காலப்பகுதி தமிழர் வரலாற்றைப் பொறுத்தமட்டில் மிகவும் தெளிவற்ற காலமாகக் காணப்படுகிறது.

ஆனால் அடுத்து வருகின்ற கி.பி.600-கி.பி.900 காலப்பகுதிகளில் கல்வெட்டு ஆதாரங்களை இலங்கையின் பல்வேறு இடங்களிலும் ஓரளவு பெறமுடிகிறது. இக்காலப் பகுதித் தமிழ், சிங்களக் கல்வெட்டுகளின் ஊடாக, இம்மொழிகளின் பரிணாம வளர்ச்சியை ஓரளவு அறியக் கூடியதாக உள்ளது.

அத்தோடு இக்கால கட்டத்தின் பிற்கூறுகளில் இவ்விரு மொழிகளும், தமது தனித்துவப் பண்புகளைக் கொண்ட மொழிகளாக வளர்ச்சியடைந்தது. தமிழ்மொழியைப் பேசுவர்கள் தமிழர் எனவும் சிங்கள மொழியைப் பேசுபவர்கள் சிங்களவர் எனவும் இரு வேறுபட்ட இனங்களாகச் செல்லும் போக்கினை இக்காலகட்ட கல்வெட்டு ஆதாரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

இருந்தபோதிலும் தமிழ், சிங்கள இனங்களின் அரசியல் வரலாறு குறித்து ஒரு தொடர்ச்சியான வரலாற்று மரபினை அறிந்து கொள்வதற்குரிய கல்வெட்டு ஆதாரங்கள், இக் காலப்பகுதியில் மிக அரிதாகவே காணப்படுகின்றன. இருந்தபோதிலும், பாளி வரலாற்று நூலாகிய மகாவம்சத்தைத் தொடர்ந்து, சூளவம்சம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து சிங்கள வரலாற்றைக் கூறிச் செல்கின்றது. ஆனால் அவ்வாறான ஒரு வரலாற்று நிகழ்வுகளைக் கூறும் ஒரு நூல் தமிழரைப் பற்றி இக்காலப் பகுதியில் எழுதப்படவில்லை.

வரலாற்று ஆதாரங்கள் கிடைக்கப் பெறவில்லை என்ற காரணத்திற்காக, இக் காலப்பகுதியில், வடக்கு-கிழக்கு, வடமேற்கு பிரதேசங்களில், குறிப்பாகத் தமிழர் பிரதேசங்களில், அரசாட்சி நடைபெறவில்லை என்றோ, மத, மொழி, கலை, கலாசார, சமூக, பொருளாதார நடவடிக்கைகள் இடம் பெறவில்லை என்ற ஒரு முடிவுக்கோ வருவது தவறானதாகும்.

ஏனெனில், கி.பி.500களைத் தொடர்ந்து, மேற்கூறப்பட்ட பிரதேசங்களில் தமிழர்கள் ஒரு பலமான சமூக, பொருளாதார அடித்தளத்தை நிறுவியிருப்பதை இக்கால வரலாற்றை நுணுகி ஆராயும் போது காணமுடிகிறது.

இவ்வாறான ஒரு நிலையினைத் தமிழர்கள் அடைவதற்கு, வரலாற்றுக் காலத்திலிருந்து, அவர்களின் தொடர்ச்சியான பல்வேறுபட்ட, செயற்பாடுகள் அடிப்படைக் காரணங்களாக அமைந்திருக்கின்றன. எனவே தமிழர் வரலாற்றில் இருண்ட காலம் என வர்ணிக்கப்படும் இக்காலம், மிக முக்கியமானதொரு காலப்பகுதியாக வரலாற்றில் இடம் பிடித்திருக்கின்றது. ஆகவே, வரலாற்று ஆதாரங்கள் தொடர்ச்சியாகக் கிடைக்கப் பெறாத காலம் என்பதன் அடிப்படையில் இக்காலப்பகுதியை அலட்சியம் செய்ய முடியாது.

அநுராதபுரத்தில், தொடர்ச்சியான மேலாய்வுகளும் அகழ்வாராய்ச்சிகளும் நடைபெற்றதன் விளைவாக, மேற்கூறப்பட்ட காலப்பகுதியின், பிற்கூற்றுக்குரிய தமிழ்க் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பதைச் சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம். அவ்வாறான ஒரு முயற்சி, இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களில் இதுவரை முழுமையாக நடைபெறவில்லை. அவ்வாறான ஒரு முயற்சி சுதந்திரமாக இப்பிரதேசங்களில் எதிர்காலத்தில் நடைபெறுமேயானால், பல வரலாற்று உண்மைகளைக் கண்டறிய முடியும்.

இக்காலப்பகுதியின் தமிழர் பற்றிய வரலாற்று நிகழ்வுகள் பற்றி ஆராய்வதற்கு முன்பு, இலங்கையின் தமிழர் பிரதேசத்துடன் மிக அண்மித்துள்ள தென்னிந்திய, தமிழ் நாட்டுப் பின்னணியை அறிய வேண்டியது அவசியமாகின்றது. இலங்கைத் தமிழர்களின் சமயம், மொழி, கலை, கலாசார, பொருளாதார, அரசியல் வாழ்வோடு, தமிழ் நாட்டின் வரலாறும் பின்னிப் பிணைந்துள்ளமையை மறுக்க முடியாது.

கி.பி.முதல் மூன்று நூற்றாண்டுகளில் தென்னிந்திய, தமிழ்நாட்டு அரசியலில் முக்கியம் பெற்றிருந்த சோழரும், பாண்டியரும் ஆட்சி புரிந்த காலம் ஒரு பொற்காலமென வரலாற்று ஆதாரங்கள் மூலமாகவும், அக்காலத்துக்குரிய தொல்லியல் இலக்கியங்கள் வாயிலாகவும் அறியமுடிகிறது.

ஆனால் கி.பி.300 நூற்றாண்டின் பின் சோழரும், பாண்டியரும் வலு விழுந்து, அரசிழந்து, தற்காலிகமாக வரலாற்றிலிருந்து மறைந்து போன நிகழ்வுகளையும் ஆதாரங்கள் காட்டி நிற்கின்றன. இந்நிலை, கி.பி.600கள் வரை தொடர்வதையும், கி.பி.600களிலிருந்து பல்லவர், பாண்டியர் ஆதிக்கம் எழுவதையும், கி.பி.900களிலிருந்து மறுபடியும் சோழர் ஆதிக்கம் மேலோங்கி மீண்டும் ஒரு பொற்காலம் தமிழ்நாட்டை மையமாகக் கொண்டு தென்னிந்தியாவில் மலர்வதையும் காண முடிகிறது.

கி.பி.300-கி.பி.600களுக்கு இடைப்பட்ட காலம் தென்னிந்திய வரலாற்றில் குறிப்பாக தமிழ் நாட்டைப் பொறுத்து வரலாற்று இருள் சூழ்ந்த ஒரு காலப்பகுதியாகவே ஆய்வாளர்கள் கொள்கின்றனர்.

இக்காலப்பகுதிக்குரிய அரசியல் வரலாறு பற்றி அறியப் போதுமான சான்றுகள் இல்லை. ஆனால் இக்காலப் பகுதியில் களப்பிரர் என்ற பிரிவினர் ஆட்சி செய்ததாகப் பாளி இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் கிடைக்கும் சான்றுகள் மூலம் அறியமுடிகிறது. மேலும், இக்களப்பிரர் ஆட்சிக் காலத்தில் குழப்பங்கள் நிகழ்ந்தமை அவர்கள் மீது முன்னைய சோழ, பாண்டிய அரசுகள் படையெடுத்தமை போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றதாக அறியச் சான்றுகள் எதுவும் இல்லை.

இக்காலகட்ட இலங்கை வரலாற்றில், சிறப்பாகத் தமிழர்களுடைய வரலாற்றில், அரசியல் ரீதியாக பெருமாற்றங்களோ, குழப்பங்களோ இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அடுத்து வருகின்ற கி.பி.600- 900ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் தமிழ் நாட்டு அரசியலில் மீண்டும் பெரும் மாற்றங்கள் இடம்பெறுவதைக் காணமுடிகிறது. இரண்டு பேரரசுகளின் தோற்றம் முதன் முதலில் தமிழ்நாட்டில் ஏற்படுவதைக் காணமுடிகிறது.

(தொடரும்)

# குறுந்தகவல் விசேட செயலி பாவனையை நாட்டுக்குள் தடைசெய்ய நடவடிக்கை

## அமைச்சர் ஹரீன் தெரிவிப்பு



(கொழும்பு)

பிறருடைய தொலைபேசி இலக்கத்தைக் கொண்டு அழைப்பு விடுக்கும் மற்றும் குறுந்தகவல் அனுப்பும் விசேட செயலி (எப்) பாவனையை நாட்டுக்குள் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அண்மைக்காலமாக இதுபோன்ற செயலியைப் பயன்படுத்தி பலர் மோசடியில் ஈடுபட்டு வருவதாக தனியார் தொலைக்காட்சியொன்றில் செய்தி வெளியாகியிருந்தது. இதனையடுத்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடலை முன்னெடுத்திருப்பதாக அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சிறிகொத்தவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இச்சம்பவத்தை வெளிச்சத்துக்கு கொண்டுவந்தமைக்காக தனியார் தொலைக் காட்சிக்கு நன்றியை தெரிவித்துக் கொண்ட அமைச்சர், இன்னும் ஓரிரு வாரங்களில் இச்செயலி பாவனை நாட்டுக்குள் முற்றாக செயலிழக்கச் செய்யப்படுமென்றும் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக விரைவில் ஒழுக்காற்று நடவடிக்கை

புதிய தண்டச் சீட்டு இல்லை என்று தெரிவித்து சாரதிகளுக்கு சிரமங்களை ஏற்படுத்தும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக விரைவில் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என போக்குவரத்து மற்றும் வீதி ஒழுங்குகள் தொடர்பான பிரிவு எச்சரித்துள்ளது.

கடந்த ஜுலை மாதம் 15 ஆம் திகதியிலிருந்து போக்குவரத்து தவறுகளுக்கான புதிய உடனடி அபராதம் அறவிட போக்குவரத்துப் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டனர்.

இருப்பினும் புதிய தண்டச் சீட்டு இல்லை என்று தெரிவித்து பொலிஸ் அதிகாரிகள் சிலர் ச்ாரதியை சிரமத்துக்கு உள்ளாக்கும் காணொலி ஒன்று அண்மையில் சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தது.

இது தொடர்பில் போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்பு தொடர்பான பிரிவின் அதிகாரி இந்திக ஹபுகொடகேவிடம் வினவிய போது,

அதற்குப் பதிலளித்த அவர்,

புதிய சட்டத் திட்டங்களுக்கு அமைய போதுமான தண்டச் சீட்டுகள் அச்சிடப்பட்டு பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் சட்டத்தை மீறுவோர் மீது விரைவில் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். (இ-7)

# J.C.B சாரதியின் தலையில் ஏறிய பவுசர்




(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் சூரியவெவ அந்தருவேவ பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

குறித்த பகுதியில் வீதி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடும் ஜே.சி.பி. வாகன சாரதி ஒருவர் மதிய நேர உணவிற்காக மோட்டார் சைக்கிளில் சென்று வேலைத் தளத்திற்கு திரும்பிக் கொண்டிருக்கையிலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

வேலைத் தளத்திற்கு திரும்பிக் கொண்டிருக்கையில் பின்னால் வந்த பவுசர் ஒன்று மோட்டார் சைக்கிளை மோதியதால் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

எரிபொருள் கொள்கலன் ஊர்தியின் சாரதி தலைமறைவாகியுள்ளதோடு மஸ்கெலியப் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய சமிந்த குமாரசிறி என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# குடும்பப் பின்னணியை ஆராய அமைச்சரவை உபகுழு நியமனம்

(கொழும்பு)

தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லும் பெண்களின் குடும்பப் பின்னணி அறிக்கையைப் பெற்றுக் கொள்ளும் விடயம் தொடர்பில் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் மீண்டும் ஆராயும் வகையில் அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதே அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களான, பேராசிரியர் சரத் அமுனுகம, விஜயதாச ராஜபக்ஷ, தலதா அத்துகோரல மற்றும் சந்ராணி பண்டார ஆகியோர் இவ் உப குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொழில் நிமித்தம் பெண்கள் வெளிநாடு செல்லும் போது அவர்களின் குடும்பப் பின்னணி அறிக்கையைப் பெற்றுக் கொள்ள எடுத்த தீர்மானத்தை நீக்குமாறு அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ முன்வைத்த கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்தியே அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1492

Search for people, places and things

### அனிருத்

காணுகின்ற பொழுதில் பேசத் தொடங்கும்போது



சாப்பிட்டியா எனத் தொடங்கும் தோழி கிடைப்பது இன்னொரு தாய்க்குச் சமம்.


### கிருஷ்ணஜோதி



தொப்பை விழாம இருக்க என்ன செய்யனும்? ரெண்டு கையாலயும் கெட்டியாப் புடிச்சுக்கனும்

### அகிலா

பேருந்தின் கடைசி சீட்டைப் போலவே வாழ்க்கை



திடீர் திடீர்னு தூக்கியடிச்சிடுது

### ஆதி

நடந்து போனால் உடம்பு குறையும் என்ற காலம் போய்



காசு மிச்சமாகும் என்ற காலத்திற்கு வந்துவிட்டோம்

### ஆரூரன்

சொந்தக்காலில் நிற்கும் போதுதான் தெரிகிறது



இத்தனை நாள் சுமந்தவருக்கு எப்படி வலித்திருக்கும் என்று

### ஆத்மிகா

வாங்கிய ஆடை கிழியும் வரை அணிந்திருந்தால் நீ ஏழை



கிழிந்த ஆடையை வாங்கி அணிந்திருந்தால் நீ பணக்காரன்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மகிந்தானந்த எம்.பிக்கு வெளிநாடு செல்ல அனுமதி



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்தகமகேவுக்கு வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சீனாவில் நடைபெறவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சி பட்டறையில் கலந்துகொள்வதற்காக வெளிநாடு செல்லவே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் அபேகோன் மூலம் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சராக இருந்த காலப்பகுதியில் முறையற்ற விதத்தில் பணத்தினை பயன்படுத்தி பொறளை பகுதியில் வீடொன்றை பெற்றுக் கொண்டமை தொடர்பில் மகிந்தானந்த அளுத்கமகேவிற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் பிரதிவாதியின் சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்ட வெளிநாடு செல்வதற்கான கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கிய நீதிபதி குறித்த வழக்கு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# பகிடிவதையை தடுத்து நிறுத்த வேண்டும்

## ஐ.தே.க. எம்.பி.விஜேபால வலியுறுத்து



(கொழும்பு)

இந்நாட்டில் பல்கலைக் கழக மாணவர்களுக்கு எதிரான பகிடிவதையை தடுத்து நிறுத்த வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டியாரச்சி வலியுறுத்தியுள்ளார்.

இதற்கு முன்னிலை சோசலிச கட்சியும் பொறுப்புக் கூற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காலி பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# வடக்கின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஒத்துழைப்பு



(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உறுதியளித்துள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கை குழுமத் தலைவராக அண்மையில் பொறுப்பேற்ற லூகாஸ் பெட்ரைட்ஸ், இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்கவை மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

குறித்த சந்திப்பு இராணுவத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றிருந்த நிலையில், அதன் போதே சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தலைவர் இந்த உறுதியை வழங்கியுள்ளார்.

குறித்த சந்திப்பின்போது, வடக்கிலும் கிழக்கிலும் பாதுகாப்புப் படையினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் நல்லிணக்க மற்றும் சமூக நலன் சார்ந்த திட்டங்கள் குறித்து இராணுவத் தளபதி எடுத்துரைத்துள்ளார்.

மேலும், இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் குறைந்த வருமானம் பெறுவோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், அவர்களது சுகாதாரத் தரத்தை மேம்படுத்தல், விவசாயத்துறைக்கான உதவிகள் போன்ற விடயங்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் திட்டங்களுக்கு இராணுவத் தரப்பில் 'அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கத் தயாராகவிருப்பதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்தார். (இ-7)

# புதிய விசேட நீதிமன்ற கட்டமைப்பை உருவாக்கியதற்கு நன்றி-விஜேசிறி



(கொழும்பு)

புதிய விசேட நீதிமன்ற கட்டமைப்பை உருவாக்கிய அரசாங்கத்திற்கு தனது நன்றியை தெரிவித்துக்கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார். இதனை உருவாக்கியதால் ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் தற்போதைய அரசாங்கத்தினால் குறித்த நபர்களுக்கு தண் டனை வழங்கப்படும் என நம்புவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# ஊவா மாகாண சபையில் நேற்று அமைதியின்மை

(கொழும்பு)

ஊவா மாகாண சபையில் நேற்று அமைதியின்மை ஏற்பட்டது.


ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்னணியினால் கடந்த சபை அமர்வின் போது ஊவா மாகாண முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர முயற்சிக்கப்பட்டது.

எனினும் போதிய உறுப்பினர்களது ஆதரவு இல்லாததன் காரணமாக அந்த பிரேரணையை சமர்ப்பிக்க அனுமதிக்கப்படவில்லை.

இந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் கைச்சாத்திட்டிருந்த மாகாண சபையின் உதவி தவிசாளர் நேற்று சபையின் செயற்பாட்டு தவிசாளராக அமர நேர்ந்த போது, அதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஐக்கிய தேசிய கட்சியின் 11 உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

இதனை அடுத்து சபையில் அமைதியின்மை ஏற்பட்டிருந்த நிலையில், சபை அமர்வு தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது. (இ-7)

# ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

மீன்பிடி படகு உரிமையாளர்கள் குழுவொன்று ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் நேற்று முன்னெடுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக காலிமுகத்திடலின் நுழைவு வீதி செரமின் சந்தியில் மூடப்பட்டுள்ளது.

பழைய விலைக்கே எரிபொருளை பெற்றுத்தருமாறு கோரி அவர்கள் இந்த எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உடனடியாக மசலை நிவாரண விலையில் பெற்றுத் தருமாறு இதன்போது எதிர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# மாகாண சபை எல்லை நிர்ணய அறிக்கைக்கு எதிர்க்கட்சி எதிர்ப்பு

## ஜே.வி.பி. ஆதரவு

(கொழும்பு)

மாகாண சபை எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றில் இன்று இடம்பெறவுள்ள விவாதத்தின் போது அதற்கு எதிராக வாக்களிக்க கூட்டு எதிர்க் கட்சி தீர்மானித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற குழு கூட்டத்தின் போது இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அதன் பிரதான அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை இந்த அறிக்கைக்கு தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களிக்கவுள்ளதாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார். (இ-7)

# ஜப்பான்-இலங்கை பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு



(கொழும்பு)

ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் இட்சுனோரி ஒனோடேரா மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன ஆகியோருக்கிடையிலான சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் கடந்த 21 ஆம் திகதி இடம் பெற்ற இச்சந்திப்பின்போது ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் மற்றும் இலங்கை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கிடையில் சுமுக கலந்துரையாடல் இடம் பெற்றது.

இலங்கைக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் கடந்த 20ஆம் திகதி மாலை வந்தடைந்தார். ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த கலந்துரையாடலில் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் கெனிச்சி சுகனுமா, மேலதிக செயலாளர் - பாராளுமன்ற அலுவல்கள், கொள்கை மற்றும் திட்டமிடல், பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி, இராணுவ மற்றும் விமானப் படை தளபதிகள், கடற்படை அதிகாரிகளின் பிரதானி, கடலோர பாதுகாப்புப்படை பணிப்பாளர் மற்றும் அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

# அலோசியஸ், பலிசேனவுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்



(கொழும்பு)

பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அதன் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இருவரையும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது. (இ-7)

# சிறுவர் அரங்கம்

## நாட்டின் அடுத்த மன்னன் யார்?



மணிபல்லவ நாடு அன்று ஒரே பரபரப்பாக இருந்தது. இன்னும் சற்று நேரத்தில் இந்த நாட்டை அடுத்து ஆளப்போகும் மன்னர் யார் என்று அறியும் ஆர்வத்தில் மக்கள் காத்திருந்தனர். மன்னர் மகேந்திர பூபதிக்கு ஒன்றல்ல இரண்டு புதல்வர்கள் இருக்கிறார்கள். இரட்டையாகப் பிறந்தவர்கள் வேறு. மூத்தவர் சுந்தர பல்லவன், அடுத்தவர் மகேச பல்லவன். இருவரும் சரிசமமான திறன் படைத்தவர்கள். அதனால் இருவரில் யாரை அடுத்த மன்னராக்குவது என்று குழப்பமாக இருந்தது.

பெரும் யோசனைக்குப் பிறகு "இருவரில் யார் நாட்டை ஆளத் தகுதியானவர் என்பதை அறிய நான் ஒரு போட்டி வைக்கப்போகிறேன். அதில் யார் வெற்றி பெறுகிறாரோ, அவருக்கே சிம்மாசனம்" என்று அறிவித்தார் மன்னர்.

மன்னர் போட்டி அறிவித்து சரியாக ஓராண்டு கடந்தோடி விட்டது. இதோ இன்று மன்னர் இருவரில் யார் போட்டியில் வெற்றி பெற்றவர் என்பதை அறிவிக்கப் போகும் நாள். ஆர்வத்தோடு அனைவருமே முடிவை அறியக் காத்திருந்தனர்.

மன்னர் நான்கு படைகள் புடை சூழ, அமைச்சர்களோடு அந்த காரண்யத்தை நோக்கி பயணமானார். தனக்குப் பிறகு நாட்டை ஆளப்போகும் மன்னருக்கான போட்டியை நடத்த மன்னர் தேர்வு செய்திருந்த இடம்தான் அந்த காரண்யம்.

அந்தக்காரண்யம் பெயருக்கேற்றாற்போல அடர்ந்த பெருங்காடு. முள்மரங்களும் செடிகளும் ஏராளமாக மண்டிக் கிடக்கும் பெருங்காடு அது. இடையில் மழை நாட்களில் சற்றே வெள்ளம் புரண்டோடும் காட்டாறு ஒன்றும் காட்டினுள் பாய்கிறது. அதன் வடக்குப் பகுதியை சுந்தர பல்லவனிடமும் தெற்குப் பகுதியை மகேச பல்லவனிடமும் ஒப்படைத்தார் மன்னர்.

சரியாக ஓராண்டுக்குள் யார் தன் பகுதியை சிறப்பாகச் சீர்படுத்திப் பராமரிக்கிறார்களோ, அவருக்குத்தான் நாட்டின் சிம்மாசனம் என்பதே மன்னரின் ஆணை. அதற்காக இருவருக்கும் தலா 10 ஆயிரம் பொற்காசுகளும் வழங்கப்பட்டன. உதவிக்கு இருவருக்கும் சில பணியாளர்களும் தரப்பட்டார்கள். இதுதவிர வேறு யாரும் அப்பகுதிக்குள் செல்ல அனுமதி கிடையாது.

போட்டி முடிகிற நாள் இன்று. ஆவலோடு அனைவரும் அந்தப் பெருங்காட்டினுள் நுழைந்தபோது அந்தக் காரண்யத்தைக் கண்ட அனைவருக்கும் பெருவியப்பு காத்திருந்தது. காடாய் கிடந்த வடக்குப் பகுதியை பளபளப்பாக பராமரித்திருந்தார் சுந்தர பல்லவன். கல்லோ, முள்ளோ, புல்லோ இன்றி அத்தனை தூய்மையாக இருந்தது அந்தப் பகுதி.

சுந்தர பல்லவன் அனைவரையும் வணங்கி வரவேற்றார். விருந்தினர் தங்குவதற்கென கட்டியிருந்த மாளிகைக்கு மன்னர் உள்ளிட்ட அனைவரையும் அழைத்துச் சென்றார். மேலும் அந்தப் பகுதியெங்கும் மரம் செடி கொடிகள் ஏதுமின்றிப் பளிச்சென்று இருந்தது. ஒரு அடர்ந்த காட்டினை வளப்படுத்தி இவ்வளவு தூய்மையாகப் பராமரித்து வரும் சுந்தர பல்லவனுக்குச் சிம்மாசனம் உறுதியென்று அமைச்சர்கள் அனைவரும் உறுதியாக நம்பினர்.

அடுத்து, தெற்குப் பகுதிக்குச் சென்றனர். அதன் நுழைவாயிலிலேயே நின்று, அனைவரையும் அன்போடு வணங்கி அழைத்துச் சென்றார் மகேச பல்லவன்.

வடக்குப் பகுதிபோல் தெற்குப் பகுதியும் அழகாகவும் பளபளப்பாகவும் இருக்குமா? என அறிய அனைவரும் ஆவலாக இருந்தார்கள். பெரும் மழைகாலத்தில் தெற்குப் பகுதியில் ஓடும் காட்டாற்றை எளிதாகக் கடந்து செல்லும் வகையில் சிறு பாலம் ஒன்று கட்டப்பட்டிருந்தது. அதன் அருகே பூங்காவும் அமைக்கப்படிருந்தது. பூங்காவில் வண்ண மலர்களின் நறுமணம் அப்படியே மனதை ஈர்த்தது. பூங்காவைச் சுற்றி ஏராளமாக பட்டாம் பூச்சிகளும் சிறுசிறு பறவைகளும் பறந்தன.

அனைத்துப் பகுதிகளுக்கும் வீதிகள் அமைக்கப்பட்டிருந்தன. வீதியின் இரு புறமுமிருந்த முள் மரங்கள் வேரோடு தோண்டப்பட்டு அக்காட்டின் எல்லை வேலிகளாக ஆக்கப்பட்டிருந்தன. ஆங்காங்கே பயன் தரும் மரங்களின் கன்றுகள் ஊன்றப்பட்டிருந்தன. ஈரம் மிகுந்த இடங்களில் புல்தரை மெத்தை போல் விரிந்திருந்தது. அனைவரையும் அங்கே அமர வைத்தான் மகேச பல்லவன்.

பிறகு அந்தக் காட்டில் விளைந்த கனிகள், காய்கள், இளநீர், மோர் ஆகியவற்றை அளித்து உபசரித்தான். சுந்தர பல்லவன் பராமரித்ததுபோல் பளிச்சென்று எதுவுமில்லை. ஆனாலும் திரும்பிய பக்கமெல்லாம் பசுமை தெரிந்தது.

மன்னர் ஏனோ முடிவேதும் அறிவிக்காமலேயே "இருவரும் வாருங்கள். நாளை அரசவை கூட்டும்" என்று கூறிப் புறப்பட்டுச் சென்றார்.

அடுத்த நாள் அரசவை கூடியது. மன்னர் முதலாவதாக சுந்தர பல்லவனை அழைத்தார். "கடந்த ஓராண்டில் உனது செயற்பாடுகள் பற்றிச் சொல்" என்றார்.

அனைவரையும் வணங்கிய சுந்தர பல்லவன், "காட்டைச் சீர்திருத்தி, சுத்தமாக்குவது மிகுந்த சிரமமாக இருந்தது. முள் மரங்கள் வெட்ட வெட்டத் துளிர்த்தன. அதைச் செம்மைப்படுத்தவே பெரும் செலவானது. மீதமிருந்த பொற்காசில் தான் விருந்தினர் தங்க அழகிய மாளிகையைக் கட்டினேன். வடக்குப் பகுதியைப் பராமரிக்கப் பத்தாயிரம் பொற்காசுகள் போதுமானதாக இல்லை. இன்னும் இருபதாயிரம் பொற்காசுகளாவது வேண்டும்" என்றான். அடுத்ததாக, மகேச பல்லவனை அழைத்தார். அவனும் அவையை வணங்கிவிட்டுப் பேசத் தொடங்கினான்.

"முதலில் தெற்குப் பகுதிக்கான நில வரைபடமொன்றைத் தயாரித்தேன். அதில், மழைகாலங்களில் நீரோட்டமுள்ள இடங்களில் வாய்க்கால்களை அமைத்தோம். பள்ளமான இடங்களில் குளங்களை, அமைத்தோம். தீங்கு தரும் முள் மரங்களையெல்லாம், வேரோடு பிடுங்கினோம். இருக்கிற மரம், செடி கொடிகளைச் சேதப்படுத்தாமல், அப்படியே பூங்காக்களாக மாற்றினோம்.

கால்நடைகள் வளர்ப்பதற்கான ஏற்ற சூழலை உருவாக்கினோம். தோட்டங்களில் கீரைகள், காய்கறிகள், மா, பலா, வாழை ஆகியவற்றைப் பயிரிட்டோம். நீங்கள் அளித்த பத்தாயிரம் பொற்காசுகளில் இன்னும் இரண்டாயிரம் மிச்சமிருக்கிறது. இன்னும் சில மாதங்களில் நாங்கள் பயிரிட்டிருக்கும் நிலங்களில் அறுவடை செய்யவிருக்கிறோம். அதிலிருந்து போதுமான வருவாய் கிட்டிவிடும். இனி, மன்னர் எங்கள் பகுதிக்கு ஏதும் தர வேண்டியதில்லை" என்று மகேச பல்லவன் கூறினார்.

மன்னர் சிம்மாசனத்தை விட்டு எழுந்து பேச ஆரம்பித்தார். "அனைவருக்கும் எனது அன்பான வணக்கம். இருவரும் காட்டைச் சீர்படுத்திப் பராமரித்து வருவதைப் பார்த்து, முதலில் முடிவெடுக்க முடியாத குழப்பத்துக்கு ஆளானேன். பிறகு யோசித்தேன். சுத்தம், தூய்மை என்பது வெறும் பளபளப்பில் மட்டுமல்ல அது எவருக்கும் இடையூறு செய்யாமலும் இருக்க வேண்டும்.

ஒரு நாடென்பது மனிதர்கள் மட்டும் வாழ்வதற்கு ஏற்ற இடமாக இல்லாமல், ஏனைய உயிர்களும் வாழ்வதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். இதை வைத்துப் பல கோணங்களில் யோசித்தேன். நீண்டகாலத் தேவையின் அடிப்படையில் ஒரு நாட்டின் நிலைத்த வளர்ச்சிக்கான செயற்பாடுகளைச் சரியாய் முன்கூட்டியே திட்டமிட்டு, அனைவரையும் குழுவாய் இணைத்து செயற்பட்ட மகேச பல்லவனே அடுத்த அரசனாக அரியணை ஏற தகுதி பெற்றவன்" என்றார்.

மன்னர் சொல்லி முடித்ததும் "சபாஷ்... சரியான தேர்வு" என்று அனைவரும் கரவொலி எழுப்பி மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். சுந்தர பல்லவனும் ஓடோடி வந்து, மகேச பல்லவனின் கழுத்தில் பூமாலை சூடி, "மகேச பல்லவனின் தலைமையின் கீழ் நடைபெறவுள்ள இந்த மணிபல்லவ நாட்டின் வளர்ச்சிக்கு நானும் என்றும் உறுதுணையாய் இருப்பேன்...!" என்று முகம் மலரக் கூறினான்.

"வாழ்க... வாழ்க... மணி பல்லவ நாடு" எனும் முழக்கம் விண்ணதிர எதிரொலித்தது.

---

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

**2018.08 24**

- ❖1349-ஜேர்மனியின் மாயின்ஸ் நகரில் 6,000 யூதர்கள் கொல்லப்பட்டனர்.
- ❖1690-கொல்கத்தா நகரம் அமைக்கப்பட்டது.
- ❖1814-பிரித்தானியப் படையினர் வோஷிங்டன் டி.சியை முற்றுகையிட்டு வெள்ளை மாளிகை உட்படப் பல கட்டடங்களுக்குத் தீ வைத்தனர்.
- ❖1931-பிரான்சும் சோவியத் ஒன்றியமும் தமக்கிடையே போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தினர்.
- ❖1936-அவுஸ்திரேலிய அண்டார்க்டிக் பிரதேசம் உருவாக்கப்பட்டது.
- ❖1939-நாசி-சோவியத் உடன்பாடு ஹிட்லருக்கும் ஜோசப் ஸ்டாலினுக்கும் இடையில் எட்டப்பட்டது.
- ❖1949 - நேட்டோ ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது.
- ❖1995 - விண்டோஸ் 95 வெளியிடப்பட்டது.
- ❖2006 - புளூட்டோ ஒரு கிரகம் அல்லவென அறிவிக்கப்பட்டது.
- ❖2006 - ஐக்கிய நாடுகளின் ஓர் அமைப்பான UNOPS அலுவலர் ஒருவர் அம்பாறை திருக்கோவில் பகுதியில் அலுவலகத்திற்கு அருகில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- ❖2008 - சீனாவில் 2008 பீஜிங் ஒலிம்பிக் போட்டிகள் முடிவடைந்தன.

### பிறப்புகள்

- ❖1863-தி. த. கனகசுந்தரம்பிள்ளை, ஈழத்து தமிழ் இலக்கிய பதிப்பாளர், தமிழறிஞர் (இ. 1922)
- ❖1888-பி.ஜி.கெர், மும்பை மாகாணத்தின் முதல் பிரதமர் (இ. 1957)
- ❖1908-சிவராம் ராஜகுரு, இந்தியச் செயற்பாட்டாளர் (இ. 1931)
- ❖1926-எஸ். அகஸ்தியர், ஈழத்து எழுத்தாளர் (இ. 1995)
- ❖1927-அஞ்சலிதேவி, தென்னிந்திய நடிகை, தயாரிப்பாளர் (இ. 2014)
- ❖1934-பி. எஸ். வெங்கடேசன், மலேசிய எழுத்தாளர்
- ❖1941-இ. பத்மநாப ஐயர், ஈழத்து இலக்கிய ஆர்வலர்
- ❖1963-தா. பாலகணேசன், ஈழத்து எழுத்தாளர்
- ❖1986-சாந்தனு பாக்யராஜ், தமிழகத் திரைப்பட நடிகர்

### இறப்புகள்

- ❖1961-வேதரத்தினம் பிள்ளை, இந்திய விடுதலை இயக்க செயற்பாட்டாளர், அரசியல்வாதி (பி. 1897)
- ❖1995-சுந்தரம் கரிவரதன், இந்தியாவின் தானுந்து விளையாட்டு வீரர் (பி. 1954)

### சிறப்பு நாள்

- ❖விடுதலை நாள் (உக்ரைன், சோவியத் ஒன்றியத்திடம் இருந்து, 1991)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 120 | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 100 | 95 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 180 | 140 | 150 | 110 | 250 | 100 |
| தக்காளி | 60 | 80 | 80 | 60 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 | 40 | 50 | 40 |
| கோவா | 150 | 140 | 140 | 75 | 160 | 150 |
| கரட் | 250 | 350 | 400 | 200 | 480 | 500 |
| பூசணி | 80 | 60 | 60 | 55 | 80 | 50 |
| புடோல் | 60 | 70 | 80 | 40 | 60 | 80 |
| வாழைக்காய் | 120 | 110 | 100 | 75 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 100 | 90 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 100 | 90 | 120 | 120 |
| பாகற்காய் | 150 | 120 | 140 | 150 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 40 | 40 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 60 | 100 | 120 |
| பயற்றங்காய் | 120 | 120 | 100 | 60 | 120 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 90 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 90 | 80 | 70 | 120 | 120 |
| கறிமிளகாய் | 150 | 200 | 160 | 150 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 80 | 70 | 80 | 60 | 120 | 50 |
| போஞ்சி | 250 | 220 | 200 | 130 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 80 | 90 | — | 60 | 100 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 25 | 30 | 30 | 40 | 50 |
| தேசிக்காய் | 40 | 40 | 40 | 40 | 40 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40 | 35 | 30-50 | 30-60 |
| இராசவள்ளி | 160 | 160 | 160 | 120 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 120 | 120 | 90 | 160 | 100 |
| முள்ளங்கி | 60 | 50 | 50 | 35 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 20 | 30 | 50 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 60 | 50 | 120 | 60 | 50 |

சத்தியம் தவறாத உத்தமன் போலவே நடிக்கிறார்
சமயம் பார்த்துப் பல வகையிலும் கொள்ளையடிக்
கிறார்... – தஞ்சை ராமையாதாஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜனாதிபதி மைத்திரியை எத்தனை தடவை சந்தித்தீர்கள்

மயிலிட்டி துறைமுகத்துக்கு அடிக்கல் நாட்டுவதற்காக நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார்.

மயிலிட்டி துறைமுகத்துக்கு அடிக்கல் நாட்டிவைத்த பின் நடந்த கூட்டத்தில் இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கேட்ட கேள்வி நியாயமானதாயினும் மயிலிட்டி துறைமுகத்துக்கு அடிக்கல் நாட்டுகின்ற இடத்தில் வைத்துக் கேட்பதன் ஊடாக இனப்பிரச்சினைக்கான தீர்வை ஜனாதிபதி மைத்திரி முன்வைத்து விடுவாரா இல்லை என்பது மாவை சேனாதிராசா அவர்களுக்கு நன்கு தெரியும்.

ஆக, மாவை சேனாதிராசாவின் மேற்போந்த கோரிக்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதற்கப்பால், தனது இந்தக் கோரிக்கையை தமிழ் மக்கள் அறிய வேண்டும்.

அவ்வாறு அறிந்தால் அது தனக்கான அரசியல் வெற்றி என்பது அவரின் உள்நோக்கம் என்பதாக இருந்துள்ளமை புரிதற்குரியது.

இவை ஒருபுறம் இருக்க, ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெறுவதற்கு தமிழ் மக்கள் அவருக்கு வழங்கிய வாக்குகளே காரணமாகும்.

அவருக்கான தமிழ் மக்களின் ஆதரவு என்பது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக் கொண்டதற்கமையவே வழங்கப்பட்டதாகும்.

எனினும் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை தமிழ் மக்கள் ஆதரிப்பதற்காக, அவர் வெற்றி பெறும் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும் என்றவாறான எந்த நிபந்தனைகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கவில்லை.

இதுதான் என்றால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு வழங்குகின்ற ஆதரவுக்காகவும் எந்த நிபந்தனையையும் கூட்டமைப்பு வெளிப்படுத்தவில்லை.

இவ்வாறு நல்ல சந்தர்ப்பங்களைத் தவறவிட்டு விட்டு மயிலிட்டியில், மன்னாரில், கிளிநொச்சியில் வைத்து பொதுவெளியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் எனக் கேட்பது எங்களின் பலவீனத்தையும் தமிழ் அரசியல் தரப்பின் பலவீனத்தையுமே காட்டி நிற்கும்.

ஆக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பக்கமாக நிற்பதால் ஜனாதிபதி மைத்திரியைச் சந்தித்து எங்கள் நிலைமையை எடுத்துரைக்க முடியாதவர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளனர்.

இதைக்கூறும்போது யாரேனும் முகத்தைச் சுழித்துக் கொண்டால்; நாம் கேட்பதெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவி நிலையில் இருக்கும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரும் அவர் தரப்பும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்த தடவைகள் எத்தனை என்பதைக் கூறினால் அதுபோதுமானதாக இருக்கும்.

தமிழ் அரசியல் தலைமை என்றால் ஆட்சித் தலைவர்களைச் சந்தித்து எங்கள் பிரச்சினையை ஆணித்தரமாக எடுத்துரைக்க வேண்டும். இதைவிடுத்து ஏதோ கேட்க வேண்டிய இடத்தில் எதையோ கேட்பது எந்த வகையிலும் பொருத்தப்பாடாகாது.

# மன்னார் மனித எச்சங்கள் மீட்பு பணிக்கு காணாமல்போனோர் அலுவலகம் முழு ஒத்துழைப்பு

## ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவிப்பு

மன்னார் சதொச நிலையத்துக்கான கட்டடப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பிலான விசாரணைகளுக்கு காணாமற் போனோர் அலுவலகம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என அதன் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

மீட்கப்படும் மனித எச்சங்கள் அடையாளம் காணப்படுமாயின் அவர்களின் உறவினர்களுக்கு உதவுவதற்கும் காணாமற் போனோர் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

"மன்னாரில் தற்போது இடம்பெற்றுவரும் மனித எச்சங்கள் தொடர்பான அகழ்வுப் பணிகளுக்கு காணாமற்போனோர் அலுவலகம் நேரடியான பங்களிப்பை வழங்குகின்றது. அத்துடன், அந்தப் பணி விடயங்களையும் மதிப்பீடு செய்து வருகின்றது" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, மன்னார் சதொச கட்டடப் பகுதியில் மனித எச்சங்களை அகழ்ந்து எடுக்கும் பணி மீளவும் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்படுகிறது.

முன்னணி சட்ட மருத்துவ நிபுணர் எஸ்.ராஜபக்ஷ தலைமையில் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப் படுகின்றன. (ம)

# ஆரோக்கியமான சமூக மாற்றத்துக்கான ஒன்றுகூடல் பயணம் இன்று

வல்லமை (சமூக மாற்றத்திற்காக பயணிக்கும் இயக்கம்) கடந்த ஐந்து வருட காலமாக பெண்கள் மற்றும் சமூகத்தில் ஏற்படும் வன்முறைகளிற்கு எதிராக குரல் கொடுப்பதை அடிநாதமாகக் கொண்டு பயணிக்கின்றது.

இப்பயணமானது சமூகப் பாகுபாடுகள் அனைத்தையும் கடந்து இயற்கையுடன் இயைந்து வாழ்தல், நடைமுறைச் சிக்கல்களைப் புரிந்து அவை சார்பாக கலந்துரையாடி விழிப்படைதல், தனிநபர் வளர்ச்சிக்கூடாக சமூகமாற்றத்திற்காகக் குழுவாகப் போராடுதல் போன்றவற்றை தனது பயணங்களாக கொண்டுள்ளது.

இப்பயணத்தின் ஒரு முன்னெடுப்பாக, இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 - மாலை 5.00 காட்டுபுலம், சுழிபுரம் மக்களுடன் இணைந்து சமூக சமத்துவத்திற்காகப் பயணிக்க தீர்மானித்துள்ளது.

இப்பயணத்தில் சமூக ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்ளவும். (ம)

## பலாலியில் இருந்து விமான சேவை

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும்

(கொழும்பு)

பலாலியிலிருந்து நேரடியாக தமிழ்நாட்டுக்கு விமான சேவைகளை ஆரம்பிப்பது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று புலனாய்வுப் பிரிவினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பலாலி விமான நிலையத்திலிருந்து தமிழகத்திற்கு நேரடி விமான சேவைகளை முன்னெடுப்பதனால் பாதுகாப்பு பிரச்சினைகள் உருவாகும் என புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை செய்துள்ளனர்.

பலாலி விமான நிலையத்தை விஸ்தரித்து, தமிழ் நாட்டுக்கும் பலாலிக்கும் இடையில் விமான சேவைகளை ஆரம்பிக்கும் நோக்கில், விமான நிலையத்தை கண்காணிப்பதற்காக மூவர் அடங்கிய இந்திய அதிகாரிகள் குழுவொன்று பலாலிக்கு விஜயம் செய்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது. (ம)

# மாட்டிறைச்சி விற்பனையை முதல்முறையாக தடை செய்தவரை கௌரவிக்கும் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

இறைச்சிக்காக மாடுகளை கொலை செய்வதையும் இறைச்சி விற்பனை செய்வதையும் இலங்கையில் முதன் முறையாக தடை செய்த களுத்துறை மாவட்ட மத்துகம பிரதேச சபை தவிசாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு யாழ்.நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய அமைப் புக்கள் ஒன்றிணைந்து நடத்தும் இந்த நிகழ்வில் விருந்துபசாரமும் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-9)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### மென்மையும் வலிமையும்

பெரும்பாலும் மக்கள் தைரியம் மற்றும் வலிமை இல்லாமையால் மென்மையாக இருக்கிறார்கள். அவர்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். சில நேரங்களில் அவர்கள் நிலையற்ற மனமுடையவராகிறார்கள்.

ஆனபோதிலும சிலா மனபபகுவம, பெருநதனமை, ஆன்மா பற்றிய அறிவு இவற்றால் வரும் மென்மையையுடையவர்களாக இருக்கின்றனர்.

மக்களில் காணும் வலிமையிலும்கூட இரண்டு விதங்கள் உள்ளன. தாக்கும் வலிமை, உள்ளதை உள்ளவாறே ஏற்கும் வலிமை. தாக்கும் தன்மையுடையவர் பலவீனம் அல்லது பயம் இவற்றால் வலிமையைக காடடுகிறாா. உளளமை உளளவாறே ஏறகும தன்மையுடையவர். அக்கறை, அன்பு, பரிவு இவைகளால் வலிமையைக் காட்டுகிறார்.

டேவிட்: தாக்கும் கட்டுப்பாடு மற்றும் ஏற்கும் ஆதரவு!

ஸ்ரீஸ்ரீ: உங்களுக்குள்ளே பாருங்கள், நீங்கள் எத்தகைய மென்மையும் வலிமையுமுடையவர் என்று விழிப்புணர்வு கொள்ளுங்கள்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### உங்கள் வீட்டில் எப்போதும் பணம் குறையாமல் இருக்கவேண்டுமா?

உங்களுடைய வீட்டில் எப்போதும் தன ஆகர்ஷணம அதிகரித்துக் கொண்டே இருக்க வேண்டுமென்றால் சின்ன சின்ன பரிகாரங்கள் உள்ளன.

அதை முழு மனதோடு நம்பி செய்தாலே போதும் வீட்டில் எப்போதும் செல்வம் குறையாமல் இருந்து கொண்டே இருக்கும். அப்படி என்ன பரிகாரங்கள் என்ன வேண்டும் என்று பார்ப்போம்.

லட்சுமிதேவி உங்களிடம் வந்து வீட்டில் குடிகொளளக கூடிய வகையிலாக பரிகாரஙகளசை? செயது வந்தீர்கள் என்றால், நீங்கள் நினைத்ததை விடவும் அதிகப்படியான செல்வத்தை, உங்களை விட்டுப் போகாமல் இருககுமபடியாக செயய முடியும.

**பச்சரிசியும் நாணயமும்**

ஒரு சிறிய கண்ணாடி பாட்டிலை எடுத்துக் கொள்ளுஙகள. அதறகுள முனை உடையாத (கைககுததல) பசசரிசி அலலது நெலலை கொஞசமாக எடுததுப போடுங்கள்.

அதன் மேல் ஒரு ரூபாய் நாணயம் ஒன்றை போடுங்கள். அதன் மேல் சிறிது அரிசியைப் போட்டு இரண்டு ரூபாய் நாணயத்தை போடுங்கள். (தொடரும்)





### வீட்டைச் சுத்தமாக்குங்கள்

- பரிசுத்த நினைவின் காரணமாக எத்தனையோ சிறிய நன்மைகள் பெரிய நன்மைகளாக ஆகி விடுகின்றன.
- பரிசுத்த எண்ணமில்லாத காரணத்தினால் எத்தனையோ பெரிய நன்மைகள் அற்பக் காரியங்களாகி விடுகின்றன.
- அல்லாஹ் பரிசுத்தமானவன். பரிசுத்தத்தையே விரும்புகிறான். எனவே, உங்கள் இல்லங்களை பரிசுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்.
- எவர் பள்ளிவாசலை கட்டுகிறாரோ அவருக்காக அபபளளிவாசலைப போனற வடு சொரககததில கட்டப்படுகின்றது.
- இறைவனை ந பாரபபது போல பயநதவனாகத தொழு! அவனை நீ பார்க்காவிட்டாலும் உன்னை அவன் பார்த்துக் கொண்டே இருக்கின்றான்.
- ஏழைகளின் துஆ (பிரார்த்தனை) இல்லை என்றால் செல்வந்தர்கள் அழிந்தே போவார்கள்.
- ஒருவருக்கு பொருள்வசதி இருந்தும் ஜகாத் (ஏழை வரி) கொடுக்கவில்லையானால் அவருக்கு ஒவ்வொரு நாளும் ஆயிரம் வானவர்கள் நரகத்தைப் பற்றி எச்சரிக்கை செய்து கொண்டே இருக்கிறார்கள்.

# ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணம்

## யாழ்.சென்றல் அணி கால் இறுதியில்




ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத்திற்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் வருடா வருடம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களை (30) கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 2ஆவது சுற்றில் யாழ்.சென்றல் அணி திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணியை88ஓட்டங்களால்வெற்றி பெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.


முதலில் துடுப்பொடுத்தாடிய யாழ்.சென்றல் அணி 27ஓவர்களில் 6 இலகுகளை இழந்து 188 ஓட்டங்களை பெற்றனர். றஜீவ்குமார்-40, மதூஸன்-29, லதூஸன்-25, பில்சன்-31, சலிஸ்ரன்-34 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் பிரணவன்-01, அருண்ராஜ்-01, டிசாந்தன்-01, சுபாஸ்-03 இலக்குகளை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி 24.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது.

அருண்-16, சுபாஸ்-33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் கிரிசாந்-03, தீபன்-03, லதூஸன்-01, சுபாதீஸ்-01, சலிஸ்ரன்-01, மதூஸன்-01 இலக்கினை கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 09 ஆண்டுகளாக நடத்திவரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் (RATING) யாழ். சென்றல் அணி 6.76 புள்ளிகளையும் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ அணி 1.60 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது. (க)

## யூனியன் அணி கால் இறுதியில்




ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத்திற்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் வருடா வருடம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட (30) ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 2ஆவது சுற்றில் யூனியன்ஸ் அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்று கால் இறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 27.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது.

மதூஸன்-13, கபிலன்-38, பிரகலாதன்-50 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தர்ஸன்-03, பிரசாந்தன்-04, சுஜன்தன்-03 இலக்குளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 14.1 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது. ஜான்சன்-12, தயாளன்-27, பிரசாந்தன்-13, சுஜந்தன்-84 ஓட்டங்களைப் பெற்றனர். மதூஸன், நிலோஸன் தலா 01 இலக்கினையும் கபிலன் 02 இலக்கினையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2010ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 9 ஆண்டுகளாக நடத்திவரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு (RATING) நிகழ்விற்கு யூனியன்ஸ் அணி 6.25 புள்ளிகளையும் கிறாஸ்கொப்பர்ஸ் அணி 2.03 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர். (க)

# வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக் இறுதிப்போட்டியில் றில்கோ



வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக்கின் இறுதிப்போட்டிக்கு, இலகுவான வெற்றியுடன் றில்கோ கொங்கியூறஸ் அணி உள்நுழைந்தது.

இரண்டாவது இறுதிப் போட்டி அணியினை தீர்மானிக்கும் போட்டியில், வல்லை எப்.சி அணயும் கிளியூர் கிங்ஸ் அணியும் மோதின.

வடக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக்கின் போட்டிகள் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி, யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு, கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானம் மற்றும் கழுகுகள் மைதானம் ஆகியவற்றில் நடைபெற்றது.

லீக் சுற்று ஆட்டத்தில் முன்னிலை வகித்த, றில்கோ கொங்கியூறஸ், கிளியூர் கிங்ஸ், வல்வை எப்.சி மற்றும் மன்னார் எப்.சி அணிகள் பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.

புள்ளிப்பட்டியலில் முதலிருடங்களிலும் முறையே இருந்த றில்கோ கொங்கியூறஸ் மற்றும் கிளியூர் கிங்ஸ் அணிகளுக்கிடையிலான முதலாவது தகுதிகாண் போட்டி 20 ஆம் திகதி நடைபெற்றது.

இதில், றில்கோ கொங்கி யூறஸ் அணி, 05:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. றில்கோ அணி சார்பாக, ஈவானா ஹன்சாரி, செ.தனேஸ், எடிசன், மில்ரோய், ராசா ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களை அடித்தனர்.

இந்நிலையில், பிளே ஓவ் சுற்றின் இரண்டாவது போட்டியானது புள்ளிப்பட்டியலில் 3 ஆம் மற்றும் 4 ஆம் இடங்களைப் பெற்ற மன்னார் எப்.சி மற்றும் வல்வை எப்.சி அணிகளுக் கிடையில் நடைபெற்றது.

தொடக்கத்தில் மன்னார் எப்.சி அணி சிறப்பாக ஆடியது. முதல் கோலை அவ் வணியின் ஜி.அன்ருடிலக்ஸன் பெற்றுக்கொடுத்தார்.

ஆனால், அதன்பிறகு, தமக்கே உரித்தான ஆட் டத்தில். ஆடிய வல்வை அணி, அடுத்தடுத்து 2 கோல்களையும் ஆட்டநேர முடிவில் ஒரு கோலையும் போட்டு, 03:01 எனப் போட்டியில் வெற்றி பெற்றனர்.

வல்வை அணி சார்பாக, பிறேம்குமார், கலிஸ்ரன் மற்றும் டிலக்ஸன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

இந்தப் போட்டியில் தோல்வியடைந்த மன்னார் எப்.சி அணி தொடரிலிருந்து வெளி யேறியது. வெற்றிபெற்ற வல்வை எப்.சி அணி, பிளே ஓவ் சுற்றின் மூன்றாவது போட்டியான, தகுதிகாண் போட்டியில் கிளியூர் கிங்ஸ் அணியுடன் மோதவுள்ளது. இந்தப் போட்டியில் வெற்றி பெறும் அணி இறுதிக்குத் தகுதி பெறும். (க-26)

# தாச்சிச்சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையமும் விளையாட்டுக்கழகமும் இணைந்து யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையில் ஆண், பெண் இருபாலாருக்குமான மாபெரும் தாச்சிச்சுற்றுப் போட்டி ஒன்று நடத்த தீர்மானித்துள்ளன.

எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் 077 583 4883 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் என கழகத் தலைவர் அறிவித்துள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## அரசியல் ரீதியான தீர்வே...

ஜனாதிபதி செயலணி கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு த.தே.கூ. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதியால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு முதலமைச்சர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கு மாகாணத்தின் பொருளாதார முன்னேற்றம் பற்றிய ஜனாதிபதி செயலணியில் பங்குபற்ற வடமாகாணத்தில் இருந்து ஆளுநரைத் தவிர நானும் எமது பிரதம செயலாளருமே அழைக்கப்பட்டமை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

கூட்டத்திற்கு நான் செல்லவில்லை. இது சம்பந்தமாக நான் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியை இத்துடன் அனுப்பி வைக்கின்றேன். குறித்த கூட்டத்தில் நான் பங்குபற்றியிருந்தால் நான் அரசியல் ரீதியாக பல நன்மைகளைப் பெற்றிருப்பேன். ஆனால தமிழர்கள் தங்கள் பிரச்சினைக்கான தக்க தீர்வொன்றை பெறமுடியாதே இருக்கும்.

தற்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற அங்கத்தவர்கள் 16 பேருக்கும் ஜனாதிபதி குறித்த செயலணிக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார். பொருளாதார ஊக்கிலோ அரசியல் தீர்விலும் பார்க்க தமிழர்களுக்கு இத்தருணத்தில் முக்கியத்துவம் அளிக்கக் கூடியவை என்று நீங்கள் நினைத்தால் குறித்த கூட்டத்தில் பங்கு பற்ற நீங்கள் முடிவெடுக்கலாம்.

ஆனால் அரசாங்கமானது பொருளாதார ரீதியாக எங்களுக்கு பல நன்மைகளைக் கொடுக்க எப்பொழுதும் ஆயத்தமாகவே உள்ளதென்றாலும் அரசியல் ரீதியாக ஒரு தீர்வைக் கொடுக்க மறுக்கின்றது என்பதே என்னுடைய தனிப்பட்ட கருத்து.

ஆகவே எமது 16 பாராளுமன்ற உறுப்பினர்களும் குறித்த செயலணி கூட்டங்களில் பங்குபற்றாது அரசியல் தீர்வு முதலில் பொருளாதார முன்னேற்றம் அதன் பின்னர் எனக் கூறுவதே உசிதம் என நான் கருதுகின்றேன்.

மத்திய அமைச்சர்கள் சுமார் 12 பேரும் அவர்களுடைய செயலாளர்களும் இன்னும் சிலரும் படையினரில் உயரதிகாரிகளும் தான் குறித்த செயலணியில் அங்கம் வகிக்கின்றார்கள். இவ்வாறான கூட்டங்களில் படையினருக்கு என்ன பங்கு என நான் கேட்டிருக்கின்றேன். உங்களுடைய கருத்தை எனக்குத் அறியத்தரவும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## வடக்கு மக்களின் காணி...

கொண்டு கருத்துரைக்கும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்.

வடக்கு முதலமைச்சர் மற்றும் தெற்கின் சில அரசியல்வாதிகளும் தொடர்ந்து இனவாதம் பேசி அரசியல் செல்வாக்கு செலுத்துகின்றனர். இவ்விடயம் ஒன்றும் புதிதல்ல வடக்கு முதலமைச்சரின் பிரதான கோரிக்கை வடக்கு மக்களின் காணி விடுவிப்பு விடயத்திலே தங்கியுள்ளது. இந்திய மீனவர்கள் எல்லை மீறி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுப்படுவது தொடர்பில் இவர் இதுரையில் எவ்விதமான கருத்துக்களையும் குறிப்பிடவில்லை. இவர்கள் குறுகிய வட்டத்தில் இருந்துகொண்டே செயற்படுகின்றனர்.

இராணுவம் வடக்கு மக்களின் காணிகளை தொடர்ந்து விடுவிக்காமல் இருப்பது பாதிக்கப்பட்ட மக்களினை மேலும் பாதிப்புற செய்யும் விடயமாவே காணப்படுகின்றது. பொருளாதார ரீதியில் இம்மக்கள் தொடர்ந்து பின்னடைவதற்கு இதுவும் ஒரு காரணமாக காணப்படலாம். தேசிய பாதுகாப்பு என்ற விடயத்தை கூறிக் கொண்டு யுத்தம் முடிவடைந்த பின்னரும் வடக்கில் இராணுவ கட்டுப்பாடு நிலவுவது வடக்கு மக்களை பிரித்தாளுவதாகவே காணப்படுகின்றது.

அரசாங்கம் காணிகளை விடுவித்து விட்டதாக கூறுகின்றது ஆனால் வடக்கு மக்கள் அது சர்வதேசத்தினை ஏமாற்றும் செயற்பாடு என்று குறிப்பிடுகின்றனர். மக்களின் கருத்துக்கள் உண்மையாகவே காணப்படும் வடக்கு மக்கள் அரசாங்கத்திடம் புதிய காணி களை கோரவில்லை அவர்களின் பூர்வீக காணிகளையே கேட்கின்றனர். இது இவர்களின் உரிமையாகவும் காணப்படுகின்றது.

தேசிய பாதுகாப்பு என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு அரசாங்கம் காணி விடுவிப்பினை வழங்காமல் காலம் தாழ்த்தி வருவது தமிழ் மக்களின் மனங்களில் பெரும்பான்மையினர் தொடர்பில் வேற்றுமையினை தோற்றுவிக்கும். விடுதலை புலிகளின் போராட்டம் 2009 ஆம் ஆண்டுடன் முடிவடைந்துவிட்டது.

ஆகவே யுத்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட காணிகளை இராணுவம் தொடர்ந்து பயன்படுத்துவதற்கு எவ்வித அவசியமும் ஏற்படவில்லை.

வடக்கில் காணிகளை அரசாங்கம் விடுவிக்கும் பொது தென்னிலங்கையில் உள்ள சில இயக்கங்களும், எதிர் தரப்பினரும் கடுமையாக எதிர்ப்பினை வெளிப்படுத்துகின்றனர். இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டால் மீண்டும் விடுதலை புலிகளின் இயக்கம் தோன்றும் என்று வதந்திகளை பரப்பி அரசியல் இலாபம் பெற்றுக் கொள்கின்றனர். வடக்கு மக்களின் விடயத்தில் அரசியல் விடயங்களை மையப்படுத்தி செயற்படாமல் யதார்த்த நிலைமைகளுக்கு முன்னுரிமை வழங்கி தீர்வு காணப்பட வேண்டும். இவ் விடயத்திற்கு மக்கள் விடுதலை முன்னணியினர் ஆதரவினை வழங்குவார்கள் என்றார். (ம)

## தையிட்டி விகாரைக்கு...

ஞான தேரர் தலைமையில் நடைபெற்றது.

அந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே கலந்து கொண்டு விகாரை அமைவதற்கான அடிக்கல்லினை நாட்டிவைத்தார்.

குறித்த விகாரையானது. கடந்த 1946 ஆம் ஆண்டு எழுதப்பட்ட உறுதி அடிப்படையில் அக் காணியில் அமைந்திருந்து எனவும், குறித்த விகாரை பல நூற்றாண்டுகளாக இப்பகுதியில் இருந்துவந்துள்ளது. 1954. 05.17ஆம் திகதி இறுதியாக வெசாக் பண்டிகை கொண்டாடப்பட்டுள்ளது.

எனவும் அதன் பின்னர் நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தினால் குறித்த விகாரை முற்றாக அழிவடைந்திருந்தது எனவும், அதனை மீள நிர்மாணம் செய்யும் பணிக்கான ஆரம்ப வேலை நேற்றுமுன் தினம் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டது என வடமாகாண ஆளுநர் தெரிவித்திருந்தார்.

அந்நிலையில் குறித்த விகாரை அமைந்துள்ள காணி முன்னர் பௌத்த மதகுருமருக்கு சொந்தமான காணி எனவும், உள்நாட்டு யுத்தம் காரணமாக பௌத்த மதகுருமார் அங்கிருந்து வெளியேறி இருந்தனர் எனவும், பின்னர் மீள தையிட்டி பகுதியில் மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர்கள் தமது காணியினை அடையாளப்படுத்தி சென்று இருந்தனர் எனவும், இந் நிலையில் குறித்த காணியினுள் விகாரை அமைப்பதற்கு வலி.வடக்கு பிரதேச சபை அனுமதி வழங்கி இருக்கவில்லை. வலி. வடக்கின் அனுமதியின்றி நேற்றைய தினம் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது என வலி.வடக்கு பிரதேச சபை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பெண்களுடன் சேட்டை விட்ட

## இருவர் இளைஞர்களால் நையப்புடைப்பு

(யாழ்ப்பாணம்)

கைபேசி இணைப்பு சிம் அட்டை விற்பனை செய்யும் இருவர், இளம் பெண்களுடன் சேட்டை விட்டதால், அவர்களை பெண் குரலில் கதைத்து அழைத்த இளைஞர்கள் சிலர் நையப்புடைத்து அனுப்பிவைத்தனர். அத்துடன், அவர்கள் இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிளும் தீயிட்டு எரிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு கொக்குவிலில் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"யாழ்ப்பாணத்தில் சிம் அட்டைகள் விற்பனை செய்து கொண்டிருந்தோம். அங்கு வந்த வாள்வெட்டுக் கும்பல் ஒன்று எம்மை வாள் முனையில் கடத்திச் சென்றது. கொக்குவில் பகுதிக்குக் கொண்டு சென்ற அந்தக் கும்பல் எம்மை வாள்களால் வெட்டிவிட்டு, எமது மோட்டார் சைக்கிளுக்கு தீவைத்து எரித்தது என்று கைபேசி இணைப்பு சிம் அட்டை விற்பனை செய்யும் இளைஞர்கள் இருவரும் வழங்கிய முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 7 மணிக்கு இடம்பெற்றது என்றும் அவர்கள் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் இருவரும் மானிப்பாயைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அவர்கள் இருவரும், இளம் பெண்களுக்கு விற்பனை செய்ய சிம் அட்டைகளுக்கு அழைப்பு எடுத்து தொந்தரவு வழங்குபவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

பெண் பிள்ளைகளுடன் சேட்டைவிட்ட காரணத்தால்தான். இளைஞர்கள் சிலர் அவர்கள் இருவரையும் கொக்குவில் பகுதிக்கு அழைத்து தாக்கியுள்ளனர். அவர்களுக்கு கதைப்பை எடுத்த பெண் குரலில் கதைத்துதான் கொக்குவிலுக்கு அழைத்துள்ளனர். பின்னர் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளுக்கும் தீவைக்கப்பட்டுள்ளது.

தம்மை வெட்டினார்கள் என்று இளைஞர்கள் இருவரும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ள போதும், அவர்களுக்கு அடி காயங்களே உள்ளன.

அத்துடன் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)

### கூட்டு எதிரணியின் ஆர்ப்பாட்டத்திற்கு

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்க்கட்சி குழு ஆதரவு-எஸ்.பி.திஸா

(கொழும்பு)

கொழும்பில் கூட்டு எதிரணியினர் ஏற்பாடு செய்துள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் எதிர்க்கட்சி குழு, ஆதரவு வழங்கவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசாங்கத்தின் நடவடிக்கையில் அதிருப்தியடைந்த மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணி அரசாங்கத்தை பதவியில் இருந்து விலகுமாறும் கோரிக்கை விடுத்து வருகின்றது.

அந்தவகையில் கொழும்பில் அவர்கள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 5ஆம் திகதி பாரிய ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றினை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையிலேயே தாமும் அதற்கு ஆதரவு வழங்கப்போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம)

அந்நிகழ்வில் பெருமளவான இராணுவத்தினர் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தையிட்டி பகுதியானது, உள்நாட்டு யுத்தம் தீவிரமடைந்த காலப் பகுதியில் இருந்து இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாகவே இருந்து வந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## மக்கள் விரும்பிய...

நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐ.நா சபையின் மனித உரிமைகள் தொடர்பான 30 ஆவது சரத்தின் 2ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, நாட்டின் ஆட்சி அதிகாரம் மக்கள் விருப்பத்தின் அடிப்படையில் அமைய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே உரிய நேரத்தில் தேர்தலை நடத்த வேண்டும் என மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கூட்டு எதிரணியினர் பல இடங்களை கைப்பற்றியிருந்த நிலையில், இந்த அரசாங்கம் மாகாண சபை தேர்தலை நடத்த அஞ்சுவதாக கூட்டு எதிரணி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஒட்டுசுட்டான் பகுதியில்...

மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

ஒட்டுசுட்டான் பகுதியில் விவசாயி ஒருவரின் வீட்டில் உள்ள மாடு ஒன்றே இந்த கன்றினை ஈன்றுள்ளது . கன்றும் தாய்ப்பசுவும் நலமாக இருப்பதாக மாட்டின் உரிமையாளர் தெரிவித்தார் . இந்த அதிசய பசுக்கன்றை நூற்றுக்கணக்கான மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.(ம-281)

## 21 ஆயிரத்துக்கு...

என்பதை கண்டறியும் செயற்பாடுகளில் காணாமல் போனோருக்கான அலுவலகம், ஈடுபடும். சர்வதேச செஞ்சிலுவை சங்கம் 2016ஆம் ஆண்டு வெளியிட்ட தரவுகளின் படி, 16 ஆயிரம் பேரும், காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் ஆராயும், பரணகம ஆணைக்குழுவின் தரவுகளின்படி, 21 ஆயிரத்துக்கு மேற்பட்டோரும், கிராம சேவகர்களூடாக, தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சு பெற்றுக்கொண்டுள்ள தரவுகளின்படி, 13 ஆயிரம் பேரும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். மேற்குறித்த தரவுகளின் அடிப்படையில், உறுதியாக கூறமுடியாவிட்டாலும், 21 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(ம)


நீரோகா
திகதி 2018/08/23
சீட்டிழுப்பு இலக்கம் 437
லக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 12 38 56 64
போனஸ் இலக்கம் 57
தேசிய லொத்தர் சபை

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1506
திகதி 2018/08/23
D N Z
வெற்றி இலக்கங்கள் 26 28 33 65
போனஸ் இலக்கம் 51
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2018/08/23
சீட்டிழுப்பு இலக்கம் 3730
ஆங்கில எழுத்து P
வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 8 8 2 6 3
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.08.23
சீட்டிழுப்பு இலக்கம் 1860
ஆங்கில எழுத்து W
வெல்லப்பட்ட இலக்கங்கள் 12 34 37 50
தேசிய லொத்தர் சபை

## சுவிஸ் நாட்டில்...

யில் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். குறித்த விடயம் தொடர்பாக தெரிய வருகையில்,

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், இணையத்தளத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு கோரி விண்ணப்பித்துள்ளார்.

அப்போது ஒரு மின்னஞ்சல் ஊடாக குறித்த இளைஞனது விண்ணப்பம் கிடைத்துள்ளதாகவும், யாழ்ப்பாணத்தில் இருந்து ஒளி பரப்பாகும் தொலைக்காட்சியின் ஊடகவியலாளர் ஒருவருடைய பெயரை கூறி அவரிடம் மேலதிக விபரங்களை ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த இளைஞர் ஊடகவியலாளரை தொடர்பு கொண்டு விபரங்களை கொடுத்துள்ளார். அதன் பின்னர் குறித்த மின்னஞ்சலில் இருந்து. விபரங்கள் கிடைத்துள்ளதாகவும் சுவிஸ் நாட்டில் வேலை இருப்பதாகவும் தாங்கள் அந்த வேலைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பதில் கிடைத்துள்ளது. அத்துடன் ஊடகவியலாளரிடம் தொடர்பு கொண்டு 7 இலட்சம் ரூபாயினை வைப்பிலிடுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் குறித்த இளைஞர் 7 இலட்சம் ரூபாயை ஆயத்தம் செய்து கொண்டு ஊடகவியலாளரை தொடர்பு கொண்டுள்ளார். பின் பிரதேசசபை உறுப்பினரான நபர் ஒருவருடைய வங்கி கணக்கை கொடுத்து அதற்கு வைப்பிலிடுமாறு தெரிவித்துள்ளார். அதன்படி பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது.

பணம் வைப்பிலிட்ட பின்னர் குறித்த மின்னஞ்சல் முடக்கப்பட்டுள்ளது. பின்னர் அந்த இளைஞர் ஊடகவியலாளரை தொடர்பு கொண்டுள்ளார். பணம் பெற்றவர் வெளிநாடு சென்று விட்டதாகவும், அவர் வரும் வரை காத்திருக்குமாறு கூறியுள்ளார்.

மாதங்கள் கடந்து சென்ற பின்னர் குறித்த இளைஞர் சந்தேகம் கொண்டு மறுபடியும் தொடர்பு கொண்டுள்ளார். அப்போது மேலதிகமாக 3 இலட்சம் ரூபாய் தேவை என கோரியுள்ளனர்.

இளைஞன் அதற்கு மறுத்தபோது, குறித்த இளைஞரை அச்சுறுத்தியுள்ளனர். அதன் காரணமாக குறித்த இளைஞன் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் கடந்த 9 ஆம் திகதி முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளார்.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் ஊடகவியலாளரை நேற்று முன்தினம் இரவும் பிரதேச சபை உறுப்பினரை நேற்று காலையும் கைது செய்துள்ளனர். இருவருடைய வாக்குமூலத்தின் அடிப்படையில் கொழும்பில் உள்ள பெண் ஒருவர் ஊடாக இந்த செயற்பாடு இடம்பெற்றதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட இருவரும் நேற்று காலை மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் அடிப்படையில் அவர்களை எதிர் வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் கட்டளையிட்டுள்ளார். (ம-9-101)

## காவலாளியை...

சிறுநீர் கழித்து அசிங்கம் செய்துள்ளனர். பின்னர் அங்கிருந்த உண்டியலை திருடிக் கொண்டு சென்றுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்த காவலாளி குறித்த சம்பவம் தொடர்பாக அயலவர்களுக்கு அறிவித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ம-9)

## காணாமல் போ...

சேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் கையளிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் 30-ம் திகதி அனுஷ்டிக்கப்பட உள்ள உலக காணாமல் போனோர் தினம் தொடர்பான நிகழ்வு தொடர்பாக ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில், அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சாலிய பீரிஸ் இதனை குறிப்பிட்டுள்ளார்.

காணாமல் போயுள்ள நபர்களின் குடும்பங்களுக்கு செய்ய வேண்டிய நலன்புரி நடவடிக்கைகள், அவர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு, நீதியை நிலைநாட்டும் விதம் போன்ற பரிந்துரைகள் இடைக்கால அறிக்கை உள்ளடக்கப்பட்டுள்ளன.

மன்னார் மற்றும் மாத்தளை பிரதேசங்களில் மனித புதைக்குழிகளில் மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இவை காணாமல் போன நபர்களின் எலும்புக் கூடுகளா என்பது தெரியாது.

இது சம்பந்தமாக ஒரு சட்ட ரீதியான வரையறைக்குள் இருந்து, அவை தொடர்பான விசாரணைக்கான நிதி அல்லது தொழில்நுட்ப ரீதியான உதவிகளை காணாமல் போனோர் தொடர்பான செயலகம் வழங்க முடியும். நான்கு தசாப்தங்களாக நடந்த சம்பவங்களுக்கு உடனடியாக எம்மால் தீர்வை வழங்க முடியாது.

எனினும் ஆறு மாதங்கள் என்ற குறுகிய காலத்தில் நாங்கள் நடத்திய விசாரணைகளுக்கு அமைய இந்த இடைக்கால அறிக்கையை வெளியிட முடிந்துள்ளது எனவும் சாலிய பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (ம)

## அராலி பகுதியி...

நேற்று முன்தினம் காலை வீட்டில் இருந்து வெளியே சென்ற குறித்த மூதாட்டி இரவு வீடு திரும்பாத காரணத்தினால் உறவினர்கள் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று காலை அராலி முத்துமாரியம்மன் கோவில் வயலுக்குள் குறித்த மூதாட்டி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸார், உறவினர்களுக்கு தகவல் வழங்கியதையடுத்து உறவினர்கள் சடலத்தை அடையாளம் காட்டியுள்ளனர்.

இது தொடர்பான மரண விசாரணையை மல்லாகம் நீதிமன்ற மரண விசாரணை அதிகாரி ஜேக்கப் கிறிஸ்தோபர் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## கப்ரக வாகனம்...

குளம் வெள்ளாங்குளம் வீதியின் கல்விளானுக்கும் கணேசபுரத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று பிற்பகல் வெள்ளாங்குளத்திலிருந்து மல்லாவி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் மல்லாவியிலிருந்து வெள்ளாங்குளம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த கப்ரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் மல்லாவி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தவிபத்தின் போது மாந்தை கிழக்கு விநாயகபுரம் ஒட்டங்குளத்தைச் சேர்ந்த அந்தோனி சுரேஸ் (வயது28) மற்றும் மாங்குளத்தை சேர்ந்த எஸ்.புனிதகுமார் (வயது 25) என்ற இருவருமே உயிரிழந்தவர்களாவார்.

அந்தோனி சுரேஸின் சடலம் மல்லாவி ஆதார வைத்தியசாலையிலும் இதேவேளை சம்பவ இடத்தில் உயிரிழந்த எஸ்.புனிதகுமாரின் சடலம் முழங்காவில் வைத்தியசாலையிலும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ் விபத்து தொடர்பான விசாரணைகளை முழங்காவில் மற்றும் மல்லாவி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-281-315)


merwiyns
மேர்வின்ஸ்
Manufacturers of:
Polymer Stamp, Pre Inked Stamp
Date Stamp, School Badges, House Name Boards,
Table Top Stand Boards,
Engraved Key Tags, Acrylic Awards, Sticker Cutting
213/1F. லலிதா கட்டடம் 1ம் மாடி.
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 221 7757 / 0774 010 633 / 0774 003 780
email: merwiyns@gmail.com
(5450)

முகாமைத்துவ உதவியாளர் வகுப்புகள்
ஆரம்பம் 25.08.2018
சனிக்கிழமை 9.30am
கோலாசிற்றி
234,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
0778435224

உடனடி வேலைவாய்ப்பு
2018ல் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கும்
DNMC நிறுவனமானது எமது இளைஞர், யுவதிகளுக்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் வேலைவாய்ப்பை வழங்கவுள்ளது.
- குறுகியகாலப் பயிற்சி.
- அதே நிறுவனத்தில் நிரந்தர வேலைவாய்ப்பு.
- பயிற்சியின் போது சம்பளம் வழங்கப்படும்.
- உணவு, தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0771571699
(5462)

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 01.09.18 சனி 8 மணி.
181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973 ஆரம்பம் 03.09.18 மாலை 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
(C-3543)

கருத்தரங்குகள்
வேலைவாய்ப்புகள் தொடர்பான அனைத்து போட்டிப் பரீட்சைகளுக்கும் உரிய கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.
தொடர்பு: 0766883394
(C-3623)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

வேலைவாய்ப்பு!
ANDRA DIGITAL IMAGE நெல்லியடி நிறுவனத்திற்கு அனுபவமுள்ள
➢ வரவேற்பாளர்கள் Receptionist (பெண்)
➢ நிர்வாக அலுவலகர் Administrative Officer (பெண்)
தகைமைகள்: நெல்லியடி, வடமராட்சியில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை
- கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
சனிக்கிழமை (25.08.2018) காலை 9.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.
நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:
ANDRA DIGITAL IMAGE 379,Kasthuriyar Road, Jaffna. 0776622981 | 0777481696
(C-3620)

நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற 16 வகையான நோய்களுக்கு மூன்று மாதங்களில் நிரந்தர தீர்வு
நோயாளிகளின் கோரிக்கைக்கு அமைய
37 வருடங்களாக மாத்தளையில் சேவையாற்றிய பிரபல ஹோமியோபதி வைத்திய நிபுணரின் சேவை தற்போது பரந்தனிலும் யாழ்ப்பாணத்திலும் உங்களுக்காக...
(இலங்கையில் உள்ள ஐந்து பிரபல ஹோமியோபதி நிபுணர்களில் ஒருவர்)
கிளினிக் நடைபெறும் திகதி:
பரந்தனில் 25.08.2018 (நாளையதினம்)
யாழ்ப்பாணத்தில் 01.09.2018
90 நாட்களில் உங்கள் நோய்களில் இருந்து முற்றாக விடுபடலாம்
I.A.S. HOSPITAL ஐ.ஏ.எஸ் மருத்துவமனை
ஓமெகா இன், இல.101, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (2ஆம் குறுக்குத் தெரு சந்தியில்)
பல நோக்கு கூட்டுறவு சங்க கட்டடம், பரந்தன் சந்தி, பரந்தன்
தொடர்பு: 0774405969, 0774441082
(5455)

வேலையாள் தேவை
புத்தூர் மணியம் பில்டிங்கில் அமைந்துள்ள ஸ்ரீ கௌதமன் ஹாட்வெயருக்கு கணக்காளராகப் பணியாற்ற வேலையாள் தேவை.
தொடர்புகளுக்கு: 077 691 1089
(C-3599)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
- மானிப்பாய் - யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - சாவகச்சேரி - நெல்லியடி - பருத்தித்துறை - வல்வெட்டித்துறை
(C-3569)

Ahtus
Ahtus Enterprises (Pvt) Ltd
ஆதுஸ் என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிட்
குழந்தைகள் தாய்மார்களுக்கு வேண்டிய அனைத்து பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
FARLIN YOUR BABY IS OUR CONCERN
உலகின் அதி சிறந்ததை உங்கள் குழந்தைக்கு வழங்கிடுங்கள்
இல.30, கன்னாதிட்டி றோட், (வண்.சிவன் கோயில் முன்பாக) யாழ்ப்பாணம்.
Tel : 077 742 7322
(C-3588)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.